
# ஆரம்பக்கல்வி




கலாநிதி ச.நா.தணிகாசலம்பிள்ளை

S Padmanathan

பத்ம

# ஆரம்பக் கல்வி



கல்வியியல் கலாநிதி

ச. நா. தணிகாசலம்பிள்ளை



வட்டுக் கோட்டை பிளவத்தை அமெரிக்கன் மிசன் தமிழ்க் கலவன் பாடசாலை ஆரம்பக்கல்வி அசிரியரான அமரர் செ.செல்லையா அவர்களுக்கு என் சமர்ப்பணம்.

ஆனாவை அழித்தழித்து
மண்ணின் மீது
அன்றெழுதிப் படிக்க வைத்த
ஆசான் தெய்வம்

பேனாவைப் பிடித்தெழுதிப்
பெரியோனாகப்
பேசவைத்த பெருமையவர்
புகழின் உச்சம்

நானாக நலங்கள் பல
விதைத்த மெய்யன்
நன்றியுடன் செல்லையா
நாமம் வாழ்த்தி
தேனாமென் "ஆரம்பக்
கல்வி" நூலை
தெய்வமவர்க் கர்ப்பணித்தேன்
தெளிந்தேன் ஐயா!

# ஆசியுரை

புதிய கல்விச் சீர்திருத்தத் திட்டத்தின்கீழ் செயல் மூலம் கற்றல் நிகழ்ச்சிக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளமையால் 'ஆரம்பக்கல்வி' அபிவிருத்தியானது செயற்றிட்டத்தை அடிப்படையாகக் கொண்ட ஒரு துறையாக விருத்தியடைந்து வருகின்றது.

ஒரு பிள்ளையின் வளர்ச்சியில் கல்விக்கான அடித்தளத்தை எடுத்துக் கொடுப்பது ஆரம்பக் கல்வியே. இந்தத் துறையில் தம்மை அர்ப்பணித்துள்ள ஆசிரியர்களுக்கும், அதிபர்களுக்கும், பெற்றோர்களுக்கும் பயன்படக்கூடிய நூல்கள் வெளிவரவேண்டும். அந்த வகையில் கலாநிதி ச.நா.தணிகாசலம்பிள்ளையினால் எழுதப்பட்ட "ஆரம்பக்கல்வி" நூல், ஆரம்பக்கல்வி நுட்பங்களையும் திறன்களையும் வெளிக்காட்டும் வகையில் வெளியிடப்பட்டுள்ளது.

வடக்கு-கிழக்கு மாகாண கல்வி அமைச்சில் ஆரம்பக் கல்விக்குப் பொறுப்பான கல்விப் பணிப்பாளராக இருந்த பொழுது அவர் பெற்ற அனுபவமும், பட்டறிவும் இந்நூலை இவ்வளவு தூரம் பயன்படும் வகையில் அமைக்க உதவியிருக்க வேண்டும்.

இது போன்ற 'கல்வியியல்' தொடர்பான பல நூல்கள் மேலும், மேலும் வெளிக்கொணரப்படுவதன் மூலம் "தமிழ் மொழியில் நூல்கள் இல்லை" என்ற வெறுமையை நீக்குவோம்.

காலத்தின் தேவை கருதிச் செயற்பட்ட கலாநிதி ச.நா.தணிகாசலம்பிள்ளையின் முயற்சியை வாழ்த்துகின்றேன்.

சுந்தரம் டிவகலாலா,
செயலாளர்,

கல்வி, பண்பாட்டலுவல்கள்,
விளையாட்டுத்துறை அமைச்சு,
வடக்கு-கிழக்கு மாகாணம்
திருகோணமலை.

## அணிந்துரை

'ஆரம்பக் கல்வியே உயர்கல்விக்கும், உவப்பான வாழ்க்கைக்கும் எம்மை உயர்த்தும் ஏணி' என்பதனை இன்றைய கல்வியுலகம் உணர்ந்துள்ள நிலையில் 'ஆரம்பக்கல்வி' என்ற மகுடம் தாங்கிய இந்நூல் வெளிவருவது மிகவும் பொருத்தமானதே.

ஆரம்பக்கல்வியின் அவசியம் உணர்ந்த அனைவருக்கும் ஊக்கம் தரும் ஒரு வழிகாட்டியாக - ஆரம்பக்கல்வி ஆசிரியர்களுக்கு ஒரு கையேடாகப் பயன்தரும் சிறப்புடையது.

ஆரம்பக்கல்வியின் பால் நெருங்கிய ஈடுபாடும் அதன் வளர்ச்சியில் நிறைந்த ஆர்வமும் கொண்ட இந்நூலாசிரியர் மதிப்புக்கும், பெருமைக்கும் உரித்துடையவரான கலாநிதி.ச.நா.தணிகாசலம்பிள்ளை அவர்கள் கல்விசார் உயர்பதவிகளில் படிப்படியாக உயர்ந்து கற்றல், கற்பித்தல் வாழ்நிலைகளில் அனுபவம் நிறையப் பெற்றவர்.

ஆரம்பக்கல்வியின் சிறப்புறு தேவை நிலைகளை இனங்கண்டு அதன் வழி கற்பிக்கத் தூண்டும் ஆசிரியர்களின் நெறி தேர்ந்து, ஆராய்ந்து எழுதப்பட்ட இந்நூல் ஆரம்பக்கல்வியை உயர்த்தும் பணியில் தம்மை இணைத்துக் கொண்டுள்ள அனைத்துக் கல்விச் செயல் வல்லுநர்க்கும் மிகுந்த பயன்தரும் என்பதில் ஐயமில்லை.

ஆரம்பக்கல்வி ஆசிரியராக, ஆரம்பக்கல்வி ஆசிரிய ஆலோசகராக, ஆரம்பக்கல்வி உதவிப் பணிப்பாளராக என்னை நானாக்கத் தூண்டிய நிலையில் இந்நூலுக்கு எனது அணிந்துரையைக் கேட்டு நின்ற மனப்பாங்கு ஆரம்பக்கல்வியை அவர் நேசித்த வகையின் வெளிப்பாடாகும்.

நூலின் உள்ளே பரந்து நிறைந்துள்ள யாவையும் ஆரம்பக்கல்விக்கு உரம் சேர்க்கும் வண்ணம் அணிசெய்யப்பட்டு உள்ளமையை இந்நூலை வாசிக்கும் யாவருமே உய்த்துணர்வர்.

மாறிவரும் சமூக அரசியல் மாற்றங்களுக்கு ஏற்புடையதாக கல்வியில் பெருகிவரும் புதிய சிந்தனைகளுக்கு வளம் சேர்க்கும் இந்நூல் வாசகர்களின் செயலூக்கத்திற்கு உறுதிதரும் என்பது நிச்சயமானதாகும்.

மாகாணக் கல்வித் திணைக்களம்,
வடக்கு-கிழக்கு மாகாணம்,
திருகோணமலை.

செ.மகேசு,
உதவிக் கல்விப் பணிப்பாளர்,
ஆரம்பக்கல்வி,

## உள்ளே ........


| | |
|---|---|
| அணிந்துரை | |
| ஆசியுரை | |
| மதிப்புரை | |
| என்னுரை | |
| ஆரம்பக்கல்வி | 01 |
| ஆரம்பக்கல்விப் பிரச்சினைகள் | 08 |
| ஆரம்பக்கல்விப் பாடத்திட்டம் | 26 |
| ஆரம்பவகுப்பறையும் வளப்பிரயோகமும் | 37 |
| வகுப்பறையும் தொடர்பாடலும் | 40 |
| ஆசிரியருக்கு கல்வி உளவியல் எவ்வகையில் உதவுகிறது | 41 |
| பரிகாரக் கற்பித்தல் | 43 |
| கற்பித்தல் முறைகள் | 46 |
| கல்விச் சிந்தனையாளர்களின் கருத்து | 50 |
| ஆரம்பக்கல்விக்கு பள்ளிமுன் கல்வி | 58 |
| முன்பிள்ளைப்பருவ கல்வி அபிவிருத்தி | 63 |
| முன்பள்ளி அமைவு | 70 |
| புதிய கல்விச் சீர்திருத்தத்தில் ஆரம்பக்கல்வி | 74 |
| ஆரம்பக் கல்வியின் நோக்கங்கள் | 78 |

| | |
|---|---|
| நூல் | "ஆரம்பக் கல்வி" |
| ஆசிரியர் | கல்வியியல் கலாநிதி<br>ச.நா.தணிகாசலம்பிள்ளை |
| முகவரி | "சுபஸ்தான்"<br>672, காங்கேசன்துறை வீதி,<br>யாழ்ப்பாணம், இலங்கை. |
| பதிப்பு | முதலாம் பதிப்பு, ஏப்ரல் 1999. |
| பதிப்புரிமை | ஆசிரியருக்கு |
| அளவு | பி 5 |
| பக்கம் | 85 |
| எழுத்தமைப்பு | சசி |
| அச்சகம் | ஸ்ரீ கணேச அச்சகம்,<br>திருகோணமலை. 026 - 22617 |
| விலை | ரூபா 100 |
| Title | "AArampakkalvi" (Primary Education) |
| Author | S.N.Thanikasalampillai<br>B.A.(Cey), Dip. in Edu.,M.A.(Edu.),<br>Diploma in Educational Management,<br>Ph.D. in Education (Jaf.) |
| Address | "Supasthan"<br>672, Kankesanthurai Veethy,<br>Jaffna, Sri Lanka. |
| Edition | First Edition, April 1999. |
| Copy Right | To the Author |
| Size | B 5 |
| Page | 85 |
| Type Setting | *Sasi* |
| Printers | Sri Ganesha Press<br>Trincomalee. 026 - 22617 |
| Prize | Rs. 100 |

# மதிப்புரை

ஆரம்பக் கல்விக் கட்டமைப்பும், கற்பித்தலியலும், வினைத்திறனும் தொடர்பான ஓர் அகல்விரி ஆக்கப் பண்புடைய (COMPREHENSIVE) நூலாக இது கலாநிதி.ச.நா.தணிகாசலம்பிள்ளை அவர்களினால் வடிவமைக்கப்பட்டுள்ளது. மனிதப் பெருமாண்புகளை ஆரம்ப நிலையிலிருந்தே மலரச் செய்யும் நடவடிக்கைகள் முன்பள்ளியிலே ஆரம்பித்து ஆரம்பக் கல்வியில் மலர்ச்சியடையச் செய்யும் செயல் முறையை மனங்கொண்டு இந்நூலாக்கம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கல்விப் பணியாளர்கள் பலர் சிங்கள மொழியிலும், ஆங்கில மொழியிலும், பல நூல்களையும் ஆய்வுக் கட்டுரை களையும் வெளியிட்டுவரும் இன்றைய காலகட்டத்திலே கல்விசார் தேவைகளை உள்வாங்கி இந்நூலாக்கம் தமிழ் மொழியில் மேற்கொள்ளப்பட்டுள்ளமை சமகாலத் தேவையாகவுள்ளது.

ஆரம்பக் கல்விக் கட்டமைப்புத் தொடர்பான பிரச்சினைப் பகுப்பாய்வு, இந்நூலாக்கத்தில் விதந்து குறிப்பிடப்பட வேண்டிய பிரதான பரிமாணமாகவுள்ளது. பிரச்சினைகளை இனங்காணுதல் என்பது தீர்வுகளுக்கான செயலமைப்புக்களையும், காட்டுருக்களையும் அமைப்பதற்கான முன்னோடி நடவடிக்கையாகும். பிரச்சினைகள் பற்றிய தெளிவின்றி கற்றல்-கற்பித்தற் கவிநிலையையும், ஆக்க விளைவுகளையும் (EFFECTS) ஏற்படுத்த முடியாது.

நவீன கற்பித்தலியலிலே "கற்றல்" என்ற எண்ணக்கருவுக்கும், "தொடர்பாடல்" (COMMONICATION) என்ற எண்ணக் கருவுக்குமிடையே பல ஒப்புமைகள் சுட்டிக்காட்டப் பட்டுள்ளன. தொடர்பியக் கோவை (ENCODING) கோவைக் குலைப்பு (DECODINE) குறுக்கீடுகளும் தடைகளும், அறிவியல் விளக்கம், முதலாம் எண்ணக்கருக்களை நூலாசிரியர் எளிமையான சொற்கட்டுக்களினால் விளக்கியுள்ளார். கற்பித்தல் சம்பந்தமான தொடரியத்தை (SEQUENCE) வடிவமைப்பதற்கு இந்த எண்ணக்கருக்கள் முக்கியமானவையாகும்.

மூளையின் தகவல் நிரற்படுத்தற் தொழிற்பாடு, உருவாக்கற் தொழிற்பாடு, உள்வாங்கும் தொழிற்பாடு, ஒளிரும் தொழிற்பாடு முதலியவற்றை விளங்கிக் கற்றல்-கற்பித்தலை ஒழுங்கமைப்பதற்கும், மீள் ஒழுங்கமைப்பதற்கும், மதிப்பீடு, பின்னூட்டல் முதலியவற்றைச் செய்வதற்கும் ஆசிரியருக்கு உளவியல் அறிவு இன்றியமையாததாகும். உளவியல் அறிவின்றி ஆரம்பக்கல்விக் கற்றலையும், கற்பித்தலையும், சீர்மியத்தையும் முன்னெடுக்க முடியாதென்பதை பயன்கொள் நோக்கிலிருந்து ஆசிரியர் விபரித்துள்ளார்.

சமூக இடைவினைகள், சமூகப்பரிமாற்றம், முதலாம் பரிமாணங்களால் ஆரம்பக் கல்வியை எவ்வாறு வளம்படுத்தலாம் என்பது பற்றிய அபிவிருத்தி முகாமைத்துவ அணுகுமுறையும் நூலாசிரியரினால் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

இன்றைய நிலையில் எமது ஆரம்பக்கல்வி எதிர்நோக்கும் மீளக் கற்றற் பிரச்சினை, இடைவிலகற் பிரச்சினை, குன்றிய பயன்நுகர்வுப் பிரச்சினை, பிரதி கூலக் குழுவினர் எதிர்கொள்ளும் பிரச்சினைகள், ஆற்றுகைநிலைப் பிரச்சினை, சீர்மியப் பிரச்சினை முதலானவற்றுக்குரிய தீர்வாகப் பரிகாரக் கற்பித்தலின் செயற்பாடுகளை ஆழ்ந்து வலிதாக்கும் நடவடிக்கைகள் பற்றிய கருத்துக்களும் இந்நூலிலே முன்வைக்கப் பெற்றுள்ளன.

ஆரம்பக் கல்வி தொடர்பான செயல் அபிவிருத்தி முகாமைத்துவம், உதவுதல் வகை மேற்பார்வை, அறிகை, எழுச்சி, இயக்கம், முதலாம் அடைவுகளை உயர்த்துவதற்கான உபாயங்கள் இந்நூலிலே விவரிக்கப் பெற்றுள்ளன. அவற்றுடன் ஆரம்பக்கல்வியின் நோக்கங்களைத் தெளிவு படுத்தலும், கோட்பாடுகளைப் பரிசீலித்தலும் தெளிவுற ஆக்கப் பெற்றுள்ளன.

வாழ்க்கை அறிதகவுக் கல்வியை (LIFE COMPETENCY EDUCATION) எமது பள்ளிக் கூடங்களிலே அறிமுகப்படுத்திவரும் இன்றைய காலகட்டத்திலே அந்த எண்ணக் கரு ஆரம்பக் கல்வியிலிருந்தே முகிழ்த்தெழச் செய்யப்படுவதற்கு இத்தகைய நூலாக்கங்கள் இன்றியமையாதனவாகும்.

கலாநிதி-சபா.ஜெயராசா

கல்வியியல் துறை,
யாழ்.பல்கலைக்கழகம்.

# என்னுரை

இன்று கல்வியியல் பிரச்சினை பற்றி கதைப்பவர்கள் ஆரம்பக்கல்வி முறையாக அமையாததே காரணம் எனக் கண்டு கொண்டார்கள். அதற்குரிய நடவடிக்கையாக ஏனைய கல்வியில் எடுக்கும் செயற்பாடுகளுக்கு மேலாக ஆரம்பக்கல்வி மீது செயற்பாடுகளை மேற்கொள்ளுகின்றனர். எங்கள் இலங்கையில் ஆரம்பக் கல்வி மேம்பாட்டுக்கு 1999ம் ஆண்டு முதல் சகல இடங்களிலும் மேம்பாட்டுச் செயற்திட்டம் தொடங்கப்பட்டுள்ளது.

யான் ஆரம்பக்கல்வியை கற்ற காலம் ஏழ்மை மிகுந்த காலம். வறுமை கற்க நிப்பந்தித்த காலம். எனக்கு ஆரம்பக்கல்வியை ஊட்டிய எனது ஆசிரியத் தெய்வம் வட்டுக்கோட்டை பிளாவத்தை திரு.செ.செல்லையா உபாத்தியாயர் ஆவார். அவர் ஏற்படுத்திய ஆர்வத்துடன் யான் அதிபராகப் பணியாற்றிய 1977ம் ஆண்டில் பூநகரி மகா வித்தியாலயம் போன்ற பள்ளிக்கூடத்தில் இக்கல்விக்காக வலைப்பின்னலால் அடைத்த அறையையும் கொடுத்து ஆரம்பக்கல்வியை விருத்தியாக்க உதவியவர்கள் திருமதி.ச.சதாசிவம், திரு.பொன் தில்லைநாதன் போன்றவர்கள். அவர்களது ஊக்குவிப்பும், கிளிநொச்சி, பரந்தன் வட்டாரங்கள், யாழ்ப்பாணம், முல்லைத்தீவு மாவட்டங்கள் உட்பட வடக்கு-கிழக்கு மாகாண மட்டத்தில் கல்வி அமைச்சில் எட்டு மாவட்டங்களினதும் ஆரம்பக்கல்வி விருத்திக்கு பொறுப்பாக இருந்த காலம் இக்கல்வி பற்றிச் சிந்தித்து நூலுருவாக்க வேண்டுமெனத் தூண்டியது. எனது செயற்பாட்டுக்கு களம் அமைத்துத் தந்தவர் வடக்கு-கிழக்கு மாகாண கல்விச் செயலாளர் திரு.சுந்தரம் டிவகலாலா அவர்கள்.

இத்துறைச் செயற்பாட்டிற்கு உதவியாக அமைந்தவர்கள் திரு.எஸ்.மகேசு - ஆரம்பக் கல்விப் பணிப்பாளரும், திருமதி.பத்மினி ஜெயசுந்தரம் - ஆரம்பக் கல்வி பாட இணைப்பாளருமாவார். இவர்களுடன் எனது ஆரம்பக்கல்வி சம்பந்தமான கருத்துக்களை செம்மைபார்த்து உதவியவர் வடக்கு-கிழக்கு மாகாண கல்வி அமைச்சைச் சேர்ந்த உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு.ந.அனந்தராஜ் அவர்கள். இவர்கள் அனைவருக்கும் என் நன்றிகள்.

இந்நூல் சிறு நூலாக உங்கள் கைகளில் உள்ளது. குறிப்பாக ஆரம்பக்கல்வியைக் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கும் மேற்பார்வை செய்பவர்களுக்கும் உதவக்கூடிய வகையில் ஆக்கப்பட்டுள்ளது. ஆரம்பக்கல்வி பற்றிய விளக்கம், அதன் முக்கியத்தவம், ஆரம்பக்கல்வி எதிர்நோக்கும் இடர்பாடுகள், அவற்றின் புதிய அணுகுமுறைகள், அவற்றின் மேம்பாட்டுக்கான ஆலோசனைகள் பெற்றோர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் உதவக்கூடியவையாகும்.

'கபஸ்தான்'
672,காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.
07-02-1999.

கலாநிதி ச.நா.தணிகாசலம்பிள்ளை
கல்விப் பணிப்பாளர்,
யாழ்ப்பாணம்.

# இடைநிலைக்கல்வி, உயர்கல்வி என்பவற்றிற்கு அடிஅத்திவாரம் ஆரம்பக்கல்வி

ஆரம்பக்கல்வி என்னும் பதம் குறிப்பது யாதெனில். ஐந்து வயது பூர்த்தியடைந்த பிள்ளைகள் ஆண்டு ஒன்று தொடக்கம் ஆண்டு ஐந்து வரை பாடசாலையில் பெற்றுக்கொள்கின்ற கல்வியாகும். குழந்தையின் மனதில் கல்வி பற்றிய கவிவு (முதற்பதிவு) ஆரம்பக்கல்வியிலேயே ஊட்டப்படுகின்றது. **"இளமையிற் கல்வி சிலையில் எழுத்து"** என்று ஔவைப் பிராட்டியார் வலியுறுத்தியுள்ளார். குழந்தையின் மனதில் இளமையில் படிக்கின்ற விடயங்கள் நன்கு பதிந்து விடும். நல்ல பயிற்சி பெற்ற ஆசிரியர்களே ஆரம்பக்கல்வியை வழங்குவதற்குப் பொருத்தமானவர்கள். **"எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்"** என்பதற்கிணங்க ஆரம்பக்கல்வி அமைதல் வேண்டும். குழந்தையின் இரண்டு கண்களாக எண்ணும் எழுத்தும் உள்ளன. எனவே இவற்றில் திறனும் ஆற்றலும் விருத்தியுற ஆரம்பக்கல்வி அவசியமான தொன்றாகும்.

குழந்தைகளின் சூழல் நிலைமைகள், உடல் வளர்ச்சி, உள வளர்ச்சி, மனப்பாங்கு வளர்ச்சி என்பன ஆரம்பக்கல்வியில் கவனத்தில் எடுத்துக் கொள்ளப்பட வேண்டியவையாகும். இந்த வகையில் குழந்தையின் பெற்றோர்களால், பாதுகாவலர்களால் முக்கியத்துவம் பெறும் ஆரம்பக்கல்வி அதற்குப் பொருத்தமான கல்வி நிறுவனங்களின் மூலம் ஊட்டப்படுதல் வேண்டும். தாய் தந்தையர் தமது குழந்தைகளுக்குச் செய்யும் தலையாய பணி ஆரம்பக்கல்வியை ஒழுங்குற அமைத்து ஊட்டும் (சிறந்த) பள்ளிக்கூடத்தைத் தெரிவு செய்து கல்வி வழங்குதலாகும்.

இடைநிலைக் கல்வி, உயர்கல்வி என்பவற்றுக்கு அடி அத்திவாரமாக எவ்வளவிற்கு ஆரம்பக்கல்வி விளங்குகின்றதோ அதேபோல ஆரம்பக்கல்விக்கு அடிஅத்திவாரமாக பாடசாலைக்கு முந்திய பாலர் கல்வி முக்கியத்துவம் பெற்று விளங்குகின்றது.

இக்கல்வியின் பெறுமானம் இதனை வழங்குபவர்களால் உணரப்படுவதில்லை. இதனைத் தேவையறிந்து ஊட்டாமல் வெறுமனே

ஒரு நாகரிகபாணியில் பிள்ளையை இந்நிலையங்களுக்கு அனுப்பிவிட்டால் மட்டும் போதும் என நினைக்கின்றனர். இக்கல்வி பள்ளிக்கூடத்திற்குச் செல்லும் மாணவர்களுக்கு கல்விக்கான கதவை திறப்பதாக அமைய வேண்டும். ஆண்டு ஒன்றில் கல்விக்கு அத்திவாரம் இடுவதாக, கல்வியை தொடர வழிகாட்டுவதாக இருத்தல் வேண்டும். இதனைக் கருத்தில் கொள்ளுதல் அவசியமானதெனலாம். நாட்டின் எதிர்கால கல்வி வளர்ச்சியை நிர்ணயிக்கும் பாரிய பொறுப்பு இன்று வளர்ந்து வரும் சிறார்களிலேயே தங்கியுள்ளது. எனவே ஆரம்பக் கல்வியானது சிறப்பாக வழங்கப்படுதல் வேண்டும் என்று போதனைகளில் கூறி வந்தாலும் கூட இவற்றை நடைமுறைப்படுத்தும் அளவில் பல்வேறு பிரச்சினைகளை எதிர்நோக்க வேண்டியுள்ளது.

ஆரம்பக்கல்விக்குப் போதிய ஆசிரியர்கள் இல்லை. எப்போதுமே ஆரம்பக்கல்வி போதிக்கும் ஆசிரியர்களுக்குப் பற்றாக்குறை நிலவி வருகின்றது. அதிலும் பயிற்சி பெற்ற ஆரம்ப ஆசிரியர்கள் மிகவும் குறைவாகவே உள்ளனர்.

ஆரம்பக்கல்விக்காக ஆசிரியர்களாகத் தெரிவு செய்யப்படுபவர்கள் தமது பயிற்சி நெறிகளைக் காலவோட்டத்தில் மாற்றிவிடுகின்றனர். இவர்கள் இக்கல்விக்கான பயிற்சியை விடுத்து, கணிதம், விஞ்ஞானம், வர்த்தகம், ஆங்கிலம், தமிழ், மனையியல், விவசாயம் போன்ற பாடங்களுக்கான விசேட பயிற்சி பெற்ற ஆசிரியர்களாக மாற்றிக் கொள்வதிலேயே ஆர்வம் காட்டுகின்றனர்.

ஆரம்பக்கல்வி ஆசிரியர்களாக நியமனம் பெறுபவர்கள், அதற்கான பயிற்சி முடித்துக்கொள்வதற்குப் பதிலாக, பட்டதாரிப் படிப்பை முடித்துப் பட்டதாரி ஆசிரியர்களாக மாறிவிடுகின்றமையையும் காணலாம்.

ஒரு சில வருடங்களுக்கு முன்னர் வரை இவ்வாசிரியர்களது பயிற்சியானது இரண்டுவருடக் கட்டாயப் பயிற்சியாக, கற்றலில் மட்டும் ஆசிரியன் ஈடுபடக்கூடியதாக இருந்தது. ஆனால் இன்று ஆசிரியரின் கற்பித்தல் செயற்பாட்டுடன் கற்றலில் ஈடுபடக்கூடியவனாக உள்ளான். இது ஒரு பாரிய சுமையாக அமைவதுடன் பயிற்சி நிறைவானதாக அமையாமலும் காணப்படுகின்றது. தேசியக் கல்வி நிறுவனம்

தொலைக்கல்விப் பிரிவு, ஆசிரியர் பிரிவு, ஆரம்பப் பிரிவு என்பவற்றைப் பொறுப்பேற்றாலும் மொடியூல்ஸ் ஊடாகப் பயிற்சி அளிக்கப்பட்டாலும் நேருக்கு நேராக பயிற்சி அளிக்கப்படாத நிலை காணப்படுகின்றது. மையநிலையில் செயற்படுபவர்கள் பயிற்சி பெறும் ஆசிரியரை நாடி வருகை தந்து பயிற்சி நெறியை மேற்பார்வை செய்தாலும் கண்காணிப்பதில் சில இடர்பாடுகள் நிலவுவதும் காணக்கூடியதாக உள்ளது.

ஆரம்பக்கல்வியை வழங்கும் ஆரம்பப் பாடசாலைகளில் பெரும்பாலானவை கிராமங்களிலேயே உள்ளன. இப்பாடசாலைகளே கிராம அபிவிருத்திக்கும், அதனூடாக நாட்டின் அபிவிருத்திக்கும் வழிகாட்டியாக அமைவனவாகும். இருந்தபோதும் கிராமப் பள்ளிக்கூடங்களுக்கு ஆசிரியர்களைப் பகிர்ந்தளிப்பதிலோ அல்லது அவர்களை அனுப்புவதிலோ தோல்வியே கண்டுள்ளது. ஆரம்பக் கல்விக்குரிய ஆசிரியர்களைப் பகிர்ந்தளிக்க முடியாத நிலையே காணப்படுகின்றது. பின்தங்கிய கிராமங்களுக்குச் சென்று கல்விகற்பிக்கும் ஆசிரியர்களுக்குத் தேவையான பௌதிக, பண்பாட்டு அம்சங்கள் பொருத்தமற்றனவாக இருப்பதாலும் இவ் ஆசிரியர்களின் சேவையைப் பெற்றுக்கொள்ள முடியாமல் உள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

இன்று ஆரம்ப ஆசிரியர் பணியில் பெரும்பான்மையோர் பெண்களாகவே காணப்படுகின்றனர். எனவே இந்தப் பெண் ஆசிரியர்களையே நம்பியிருக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டுள்ளது. ஆரம்பக்கல்வியை ஊட்டுவதற்கு பெண்களே பொருத்தமானவர்கள் என்றாலும் நடைமுறையில் இவர்களது சேவைகளைப் பூரணமாக பெறமுடியாத அவலநிலையும் உள்ளது. பெண் ஆசிரியர்களைப் பொறுத்தவரை ஆசிரிய நியமனம் பெற்றதைத் தொடர்ந்து அவர்கள் திருமண வாழ்க்கைக்கு உட்படுகின்றனர். இதனையடுத்து தமது குழந்தைகளைப் பெற்று வளர்ப்பதற்காக மகப்பேற்று லீவைப் பெற்று வீட்டில் தங்கிவிடுவது மட்டுமின்றி வீட்டுக்கு அண்மையில் உள்ள பாடசாலைக்கு இடமாற்றம் கோரி குறித்த பாடசாலையிலிருந்து வெளியேறியும் விடுகின்றனர். இத்தகைய நிலையில் ஆசிரியர்கள் ஆசிரிய வாண்மை விருத்தியை அடைவதில் தவறிவிடுகின்றனர் எனலாம். இதன்

காரணமாக ஆரம்பக் கல்வி ஆசிரியர்கள் தொடர்பான பிரச்சினைகள் தொடர்ந்தும் நிலவி வருகின்றமை குறிப்பிடத் தக்கது.

பாடசாலைக்கு அனுமதிக்கப்படுவதற்கு முன்னர் குழந்தைகள் கல்வி பயிலும் நிறுவனங்கள் நாடு முழுவதிலும் பரவலாகக் காணப்படுகின்றன. இப்பாலர் கல்வி நிறுவனங்களில் கற்பிக்கும் ஆசிரியர்களிற் பலர் இதற்கெனப் பயிற்றப்பட்டாலும் நியம விதிகளுக்குட்படுத்தப்பட்டு ஒழுங்குபடுத்தப்படாமலும் கல்வி வழங்குவதைக் காணலாம். அதிகமான கிராமப்பகுதிகளில் எழுந்தமானமாக அல்லது தன்னிச்சையாக இயங்கி வருகின்ற பாலர் கல்விப் பாடசாலைகளைத் தொட்டம் தொட்டமாக ஆங்காங்கே காணலாம். இவற்றின் செயற்பாடுகள் பற்றி இனங்கண்டு கொள்ளமுடியாத பெற்றோர்கள் இந்நிலையங்களுக்குப் பிள்ளைகளை அனுப்புவதால் ஏற்படும் தாக்கங்களை பின்பு பாடசாலையில் ஆரம்பக்கல்வி பயிலும் மாணவர்கள் மத்தியில் காணலாம்.

ஆரம்பக்கல்வியை அடுத்து மாணவர்கள் இடைநிலைக்கல்வியைப் பெற ஆரம்பிக்கின்றனர். ஆரம்பக்கல்வியின் இறுதியாண்டாகிய ஐந்தாம் ஆண்டில் நடைபெறுகின்ற புலமைப்பரிசில் பரீட்சை இன்று பாடசாலைகள் மத்தியில் முக்கியத்துவம் பெற்று வருவதால் அவ்வகுப்பில் கல்வி பயிலும் மாணவர்கள் மொழிக்கல்வியிலும் கணிதத்திலும் கூடிய கவனம் செலுத்த வேண்டிய நிலைக்குள்ளாகியுள்ளனர். இந்நிலையில் இவ்வகுப்பில் கல்வி கற்கும் மாணவர்களுக்குத் தேவையான அடிப்படைக் கல்வியை வழங்கப் போதுமான ஆசிரியர்கள் நாடு பூராவும் சமனாகக் காணப்படுவதில்லை. பயிற்சி பெற்ற ஆசிரியர்களை ஐந்தாம் ஆண்டில் மட்டும் கல்வி கற்பதற்கு அனுமதிக்கும் போது அந்த வகுப்பில் அதற்குரிய போதிய கல்வி வளர்ச்சி அடையாத மாணவர்கள் பலர் இருக்கின்றமை கண்கூடு. எனவே பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் ஆண்டு ஒன்று தொடக்கம் கல்வியை வழங்காத நிலைமைகள் மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு அல்லது அவர்களின் அடி அத்திவாரத்துக்குப் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தி வருகின்றன.

முற்காலங்களில் ஆரம்பக்கல்வி ஆசிரியர்கள் ஆசிரியத்துவத்துக்கான நடை, உடை, பாவனைகளுடன் தம்மை இணைத்துக் கொண்டார்கள். ஆண் ஆசிரியர்கள் நஷனல், வேட்டி அணிந்து சால்வை போட்டுக் கொண்டு பாடசாலை வகுப்பறைகளில் நுழையும் போது, அந்தத்

தோற்றத்தையுடைய ஆசிரியம் ஆரம்பக்கல்வியை வெளிப்படுத்தியது. பெண் ஆசிரியர்கள் சேலை உடுத்தி, கொண்டை போட்டு குழந்தைகளின் மனதைக்கவரும் வகையில் தோற்றமளித்தனர். இத்தகைய நிலை அவர்களைத் தொழிலுக்காக அர்ப்பணிக்கவும், ஆர்வத்தைத் தூண்டவும் வைத்தது. தற்போதைய ஆசிரியத் தொழிலில் ஈடுபடும் ஆசிரியர்களிடையே இத்தகைய நடையுடை, பாவனைகளைக் காண்பது அரிதாகவே உள்ளது. ஆசிரியர்கள் இத்தகைய தோற்றங்களுக்குத் தங்களைத் தயாராக்க விரும்பும் தன்மை மிகவும் குறைவாகவே காணப்படுகின்றது.

இலங்கையில் சுமார் 10,000 பாடசாலைகளில் 4,000 பாடசாலைகள் ஆரம்பப் பாடசாலைகளாகும். இவை பொருளாதார, சமூக, கலாச்சார அம்சங்களில் நலிந்து மெலிந்து காணப்படுகின்றன. இவையே நாட்டின் நலிவுற்ற சுற்றாடல்களை நேரடியாக அபிவிருத்தியின் பால் கொண்டுவரும் நிலையங்களாக அமைகின்றன. ஆனால் கிராம ஆரம்ப பாடசாலைகளில் போதுமான அளவு பணிகள் ஆற்றப்படுவதில்லை. நாட்டின் அடிநிலையில் வாழும் வாய்ப்புகள், வசதிகள் குறைந்த பிரதேசங்களில் சமமான கல்வி அளிக்கப்பட்டு கிராமங்களில் இருந்து மருத்துவத்துறை, பொறியியல் துறை, கணக்கியல் துறை போன்ற துறைகளுக்கு மாணவர்கள் உருவாக்கப்பட வேண்டும் என்று கொள்கையளவில் கூறப்பட்டு வருகின்றதே தவிர, அந்த இலக்கை அடைவதற்கான ஆசிரிய வளங்கள் அருகியே காணப்படுகின்றன.

எனவே இந்தப் பாடசாலைகளில் உள்ள அதிபர்கள், ஆசிரியர்கள் ஆரம்பக்கல்வியை வழங்கும்போது, நியமக் கலைத்திட்டத்துடன் மட்டும் நின்று கற்பிக்காது, நியமமில் கலைத்திட்டத்தை மாற்றிக் கற்பிப்பது அவசியமாகும். உதாரணமாக ஆரம்பக்கல்விக் கலைத்திட்ட அமுலாக்கத்தின் போது அச்சமூகத்தின் இயல்பிற்கு, தன்மைக்கு ஏற்ப நடவடிக்கைகளை, உத்திகளை மேற்கொள்ள வேண்டும். அத்துடன் அப்பாடசாலையைச் சூழ்ந்த பகுதிகளில் கடமையாற்றும் கிராம சேவையாளர், சுகாதாரப் பரிசோதகர், தாதிமார், விவசாய விசாலிப்பு உத்தியோகத்தர், சமூக சேவை உத்தியோகத்தர் ஆகியோரது சேவையை ஆரம்பக்கல்வி கற்பித்தலுடன் ஒன்றிணைக்க வேண்டும். பாடசாலை

நிலைபெற்றுள்ள சமூக மேம்பாட்டிற்கு, ஒழுக்க விருத்திக்கு அவர்களது பணியும் பாடசாலையினுள் உள்வாங்கப்பட வேண்டும்.

பயிற்சி பெற்ற ஆசிரியர்களை ஆண்டு ஒன்று தொடக்கமே நியமித்தல் வேண்டும். இக்கருத்தை வலியுறுத்துவதாக இலங்கைக்கு ஆசிரிய ஊக்குவிப்பு சம்பந்தமாக வருகை தந்த றிட்சாட் நவரோ என்பவர் 1991 ஆம் ஆண்டு ஆரம்பக்கல்வி பற்றித் தெரிவித்த கருத்தை முன்வைக்கின்றேன்.இக்கருத்துப் பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் ஆரம்பக் கல்விக்கு அவசியம் என்பதை வலியுறுத்துகிறது.

ஆரம்பக்கல்வி பற்றி நான் அவதானித்த பொழுது ஆச்சரியமடைந்தது என்னவெனில் இலங்கையில் ஆண்டு 1 தொடக்கம் ஆண்டு 3 வரையான முதல் மூன்று வருடங்களில் அடிப்படைக் கல்வியை அளிப்பதில் ஆகக்குறைந்த கவனம் எடுக்கப்படுகிறது. கூடுதலான வள ஒதுக்கீடும் அவதானமும் ஆண்டு 4, 5 ஆகியவற்றிலேயே நடைபெறுகின்றது. இங்கேயே ஆரம்ப பயிற்சி ஆசிரியர்கள் ஈடுபடுத்தப்படுகின்றார்கள். ஆண்டு ஐந்தில் புலமைப் பரிசில் பரீட்சையில் குழந்தை சித்தியடைய வேண்டும் என்பதற்காக அடிஅத்திவார வகுப்புகளில் நன்றாகக் கல்வி கற்பிக்கப்படுவதில்லை. அதிபரானவர் தமது ஆரம்பப்பாடசாலையில் தள அத்திவாரம் இடுவதை 1ம் ஆண்டிலேயே கூடிய கவனம் செலுத்த வேண்டும். அதற்கான நல்ல பயிற்சி பெற்ற ஆசிரியர்களை ஆண்டு 1 தொடக்கமே கற்பிக்க விட வேண்டும்.

இத்தகைய கருத்து முதல் மூன்று ஆண்டுகளில் நல்ல பயிற்சி பெற்ற ஆரம்ப ஆசிரியர்களால் மாணவர்கள் கற்பிக்கப்பட வேண்டும் என்பதை வலியுறுத்துகிறது. ஆரம்ப பாடசாலைகளில் பிரதானமாக வாய்ப்பு, வசதிகள் குறைந்த பிரதேசங்களிலுள்ள பாடசாலைகளில் கற்றல், கற்பித்தல் கருமத்தொடருக்குத் தேவையான அடிப்படை வளங்கள் குறைவாகவே உள்ளன. ஆசிரியர் வளம், இடவசதிகள், கற்றல் துணைச்சாதனங்கள், நூல்நிலைய வசதிகள் என்பவற்றுடன் பெற்றோரின் ஊட்டமும் கவனமும் மாணவர்களின் கல்வி கற்றலுக்கு அவசியமானவையாகும்.

பெற்றோர்களின் பின்னூட்டலில் தான் மாணவர்களின் ஆர்வமும் முன்னேற்றமும் மேலும் உயர்த்தப்படுகின்றன. மொன்றசொறி அமைப்புக்கள் (பாலர் கல்வி நிலையங்கள்) எல்லாம் சீராக்கப்பட்டு பாடசாலைக்கு வருகின்ற மாணவர்களின் நடத்தைக் கோலங்கள் வளப்படுத்தப் படவேண்டும். "பிள்ளையினிடத்து யாதேனும் பாடத்தில் குறைபாடு காணப்படின் இதற்கான அடிப்படைக் காரணமாக மொழியைக் குறிப்பிடலாம்." எனவே மொழிக் கல்வியானது ஆரம்பக் கல்வியில் முக்கியத்துவம் பெறுதல் வேண்டும்.

அடுத்த ஆண்டுக்கான பிரவேசத்திறன் இல்லாமல் அதாவது ஆகக்குறைந்த தேர்ச்சி மட்டத்தை அடையாமல் மாணவன் வகுப்பேற்றப்படும் போது மேலும் சுமை கூடுகின்றது.

எனவே இத்தகைய நிலையிலிருந்து மாணவர்களை தரமுயர்த்துவதற்கு சம்பிரதாய பூர்வமாக இடம்பெறும் கற்பித்தல் செயற்பாடுகளுக்கும் மேலதிகமாக விசேடமான கற்பித்தல் தொடரான பரிகாரக் கற்பித்ல் இடம்பெறவேண்டும். இது சிறப்பாக பின்னிற்கும் மாணவர்களுக்கு வழங்கப்பட வேண்டும். மாணவனின் உள்ளார்ந்த கற்றலுக்குத் தடையாக உள்ளனவற்றைக் கண்டறிந்து ஊக்குவித்தலில் ஆசிரியருக்கு மட்டுமன்றிப் பெற்றோருக்குப் பெரும்பங்கு உண்டு. கிராம புவியியல் அமைவு ரீதியாக நோக்கின் 100 மாணவர்களுக்குக் குறைந்த சிறிய பாடசாலைகளாயினும் அவற்றை இயக்க வேண்டிய பாரிய பொறுப்பு ஒவ்வொரு நாட்டின் அரசுக்கும் உண்டு. அரசு கொள்கையளவில் ஆரம்பக்கல்வி பற்றிக் கூறினாலும் நடைமுறையில் அவ் இலக்கை அடைய முடியாதுள்ளது.

ஆரம்பக்கல்வியின் முக்கியமான பிரச்சினை தமிழ் ஆசிரியர்களைத் தொன்று தொட்டு பயிற்றுவித்த ஆசிரிய பயிற்சிக் கலாசாலைகள் மூடப்பட்டதையும் குறிப்பிடலாம்.

யாழ் மாவட்டத்தில் கொழும்புத்துறை, நல்லூர், திருநெல்வேலி போன்ற இடங்களில் இயங்கி வந்த ஆரம்ப ஆசிரியர்களைப் பயிற்றுவித்த ஆசிரிய பயிற்சிக் கலாசாலைகள் மூடப்பட்டன. இதனால் கூடுதலான ஆசிரியர்கள் பயிற்றப்பட்டு வெளியேறிய தொகை மட்டுப்படுத்தப்பட்ட நிலையும் ஆரம்பக்கல்வியில் கூடுதலான பிரச்சனையைத் தோற்றுவித்தது.

# ஆரம்பகல்விப் பிரச்சினைகள்

## ஆசிரியரின்மை

ஆரம்பக்கல்வியை ஊட்ட முடியாமைக்கு கூறப்படும் அடிப்படைக் காரணிகள் பலவாகும். இவற்றில் சகல பாடசாலைகளிலும் காணப்படும் பிரச்சினைகள் பயிற்சி பெற்ற ஆரம்பக் கல்வி ஆசிரியர்களின்மையாகும். ஆண்டு ஒன்றில் ஒரு மாணவனுக்கு ஊட்டப்படும் கல்வி அவனது வாழ்க்கையில் முதற்படியாக, முதற்கவிவாக உள்ளத்தில் பதியும் ஒரு கல்வியாகும். இதற்கு நல்ல பயிற்சியும், தேர்ச்சியும் பெற்ற ஆசிரியர்கள் தேவை ஆரம்பத்தில் நல்ல முறையில் கல்வி ஊட்டுவதற்கும், அதனைத் தொடர்ந்து வளர்த்துச் செல்வதற்கும் ஆரம்ப பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் ஆண்டு ஒன்றில் கற்பிப்பதற்கு இல்லை. இதனால் அக்கல்வியை ஏனைய வகுப்புக்களில் தொடர்ந்து கற்றுயர்வதற்கு தடையாக உள்ளது. இதற்குப் பதிலாக ஆண்டு ஐந்தில் புலமைப்பரிசில் பரீட்சையை மையமாக வைத்து பயிற்சி பெற்ற ஆசிரியர்களை அவ்வகுப்பில் கற்பிக்க அனுமதிக்கின்றனர். இது எதிர்பார்த்த விளைவை அளிக்கக்கூடியதல்ல.

## உபகரணங்களின்மை

ஆரம்பக் கல்வியின் கலைத் திட்டத்தை போதிப்பதற்குரிய ஆரம்பக்கல்வி உபகரணங்கள் இன்மையும் ஒரு கல்விப் பிரச்சினையாகும். மாணவர்கள் பாலர் கல்வியை குழு முறைமையாகக் கற்க பாலர் மேசை, பாலர் கதிரை கூடுதலாக அளிக்கப்படுவதில்லை சொல் அட்டைகள், ஆரம்பக் கல்வி உபகரணங்கள் இப்பாடசாலைகளில் இல்லை. அப்பொருட்களை வைத்தெடுப்பதற்குரிய அடைத்த (வெல் மெஸ்ஸினால்) வகுப்பறைகள் இல்லை. கிராமப்பகுதிகளில் ஆரம்பக் கல்விப் பாடசாலைகளில சிறிய பாடசாலைகளில் மாணவர் அனுமதித் தொகை விகிதம் குறைவாக இருப்பதனால் மாணவர் தொகைக்கேற்ற ஆசிரியர் விகிதத்தை அளிக்க முடியாமல் உள்ளது.

"இப்பாடசாலைகளில் வருடந்தோறும் முறைசார் கல்வியைப் பெறுவதற்காக ஆண்டு ஒன்றில் சேரும் மாணவர்களின் தொகை ஆசிரியர், மாணவர் விகிதத்தை ஒத்ததாகவோ அல்லது அதைவிடக்

கூடுதலானதாகவோ காணப்படவில்லை. பெரும்பாலான சந்தர்ப்பங்களில் அது அவ்விகிதத்தின் பாதியளவை விடவும் குறைவானதாகவே இருப்பினும் கூட வகுப்பு வாரியாக நோக்கும் பொழுது இப்பாடசாலைகளின் கோலத்தில் எவ்வித வேறுபாடுகளும் கிடையாது"

இத்தகைய நிலையினால் ஆரம்பப் பாடசாலைகளில் அதுவும் சிறிய பாடசாலைகளில் போதியளவு ஆசிரியர்கள் இல்லாத நிலையில் கற்பித்தற் செயற்பாட்டிற்கு ஆசிரியவள அணியினை வைத்து முகாமை செய்ய வேண்டிய நிலை அதிபருக்கும், ஆசிரியர்களுக்கும் ஏற்படுகின்றது. ஒரே நேரத்தில் பல தரங்களில், இருக்கக்கூடிய ஆசிரியர்களைக் கொண்டு முகாமை செய்யவேண்டி ஏற்படுகின்றது. இதற்கு உதவுவது தான் பல்தரக் கற்பித்தல்.

**பல்தரக் கற்பித்தல் முறைகள்**

பல்தரக் கற்பித்தல் என்பது ஒரே நேரத்தில் பல தரங்களுக்கு ஆசிரியர் கற்பித்தற் செயற்பாட்டில் ஈடுபடுவதாகும். முறைமையான நிலையில் வேண்டிய வகுப்பு மாணவர்களும், அதற்குரிய வகுப்பாசிரியர்களும் ஒரு பாடசாலையில் இல்லாதவிடத்து பொறுப்பாக இருக்கும் அதிபர், ஆசிரியர்கள் கடைப்பிடிக்கும் நடைமுறைச் செயற்பாடாகும்.

"பாடசாலையில் உள்ள சிறுதொகை ஆசிரியர்கள், மாணவர்களைச் சில வகுப்புக்களாக வகுத்து இயன்ற அளவுக்கு கற்பித்தலே பலதரக் கற்பித்தலாகும். இதற்கு ஏற்ப ஓர் ஆசிரியர் இரண்டு அல்லது மூன்று வகுப்புகளுக்குரிய வேலைகளை ஒரே வேளையில் ஒழுங்கமைப்புச் செய்து கொள்ள வேண்டிய நிலை ஏற்படுகின்றது. ஒரு தரத்துக்கோ ஒரு வகுப்புக்கோ கற்பிப்பதற்குப் பதிலாக ஒரே ஆசிரியர் ஒரே நேரத்தில் சில வகுப்புக்களுக்கு கற்பிக்க வேண்டி ஏற்படுகின்றமையால் கற்பித்தல் முறைகள் தொடர்பாக ஏற்பட்ட எண்ணக்கருவே பலதரக் கற்பித்தல் முறை."

இங்கு புதிய எண்ணக்கருவாக குறிப்பிட்டாலும் இம்முறை இத்தகைய பாடசாலைகளில் பழைய காலத்தில் இருந்தே

செயற்படுத்தப்பட்டு வரப்பட்டுள்ளது. ஆனால் இம்முறை முகாமை செய்யும் நவீனமுறைக்குட்படுத்தி ஒழுங்கமைத்த ஓர் முறையே பல்தரக் கற்பித்தல் முறையாகும். இந்த முறை கிராமப் பகுதிக்கு மட்டும் அல்லாது நகரப் பகுதிகளில் மாணவர் தொகை குறைவான பாடசாலைகளிலும் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது. பெரிய பாடசாலைகளில் ஆசிரிய வருகையின்மை கூடுதலாக காணப்படும் நாட்களில் இத்தகைய பலதரக்கற்பித்தல் அதாவது வகுப்புக்களை ஒன்றுசேர்த்து கற்பிக்கும் தன்மை காணப்படுகின்றது.

"பலதரக்கற்பித்தல் எண்ணக்கருவுக்குப் பல்வேறு வரைவிலக்கணங்களை வழங்கலாம். "ஆசிரிய பற்றாக்குறை காரணமாக ஓர் ஆசிரியர் சில வகுப்புகளுக்கு கற்பித்தல்" என்பது ஒரு வரைவிலக்கணம். "குறிப்பிட்ட அளவைவிடக்கூடுதலான மாணவர்களை கொண்டுள்ள வகுப்பிற்கு ஓர் ஆசிரியர் கற்பித்தல்" என்பது மற்றொரு வரைவிலக்கணம்.ஓர் ஆசிரியர் பல தரங்களுக்கு ஒரே வேளையில் கற்பித்தலில் ஈடுபடுகையில் பாடசாலைகளில் 'நிலவும் நிலைமையை இனம் காண்பது பலதரக்கற்பித்தல் கருமத்தை நன்கு ஒருங்கமைத்து கொள்வதற்கு துணையாக அமையும்.

இவ் அடிப்படைச் சூழ்நிலைகளைப் பாடசாலையில் கருத்திற் கொண்டு பலதரக் கற்பித்தல் முறையை நல்லமுறையில் முகாமை செய்வதே கற்றல், கற்பித்தலில் நல்ல விளைவுக்கு வழிகோலும்.

**தாய்மொழியும் கணிதமும்**

ஆரம்பக் கல்வியின் அடிப்படைப் பாடங்களாக தமிழ் மொழியும், கணிதமும் விளங்குகின்றன. எமது பழைய கல்வி முறையில் "எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்" எனக் கூறியுள்ளனர். ஒருவன் தன் வாழ்க்கையில் மொழியையும், கணிதத்தையும் ஆரம்பத்திலேயே முறையாகக் கற்று ஓர் அடிப்படையை உருவாக்க வேண்டும். எமது காலத்திலும் பழைய மூதாதையர் பயின்ற காலத்திலும், மொழியையும், எண்ணையும் போதிக்க நல்ல ஆசிரியர்கள் பயிற்றப்பட்டுக் கற்பித்து வந்தனர். ஏனைய பாடங்களைக் கற்பதற்கும் நல்ல அறிவு, திறனை இவை இரண்டினூடாகவும் வகுத்துக் கொடுத்தனர்.

சமூக விலங்காகிய மனிதனது கருத்து வெளிப்பாட்டுக்கும் கருத்துக்களைப் பெறுவதற்குமாகப் பிரயோகிக்கும் பிரதானமானதும், பிரபல்யமானதுமான ஊடகம் மொழி இதுவே அவனது சிந்திக்கும் ஊடகம். இதனாலேயே அவன் உலகையே ஆண்டு கொள்கின்றான். அறிவுக் களஞ்சியத்தின் அடிப்படையும் மொழியேயாகும்.

"கணிதம் எண்ணக்கரு சார்ந்த ஒரு விடயமாகும் பெரும்பாலான கணித எண்ணக்கருக்களை விருத்தி செய்து கொள்வதற்காக ஆரம்பப் பாடசாலைப் பருவத்தில் பொருள்கள் தொடர்பாகப் பெறும் அனுபவங்கள் மிக முக்கியமானவையாகும். எண், எண்சார்ந்த பிற கணிதச் செய்கைகளின் அடித்தளமாக எண்ணுதலைக் குறிப்பிடலாம். எண்கள் சார்ந்த எண்ணக்கருக்களை நன்கு வலியுறுத்துவதற்காக, ஆரம்பப் பருவத்திலேயே எண்ணுவதற்கான செயற்பாடுகளில் மாணவரை ஈடுபடுத்துதல் வேண்டும். வெவ்வேறு பொருள்களை ஒவ்வொன்றாக எண்ணுவதன் மூலமும், கூட்டம் கூட்டமாக எண்ணுவதன் மூலமும் பெறும் அடிப்படை அனுபவங்கள் எண் பற்றிய எண்ணக்கருவைக் கட்டியெழுப்புவதற்கு மிகப் பயனுடையதாகவே அமைகின்றன.

"தெரிதல் அயலும் வரிசைப்படுத்தலும், பருமன், ஒன்று ஒன்றுக்கான ஒத்திருக்கை போன்ற முன் எண்ணக்கருக்களும் எண்களை விளங்கிக் கொள்வதில் பெருமளவு துணைபுரிகின்றன. அவ்வெண்ணக் கருக்களை விருத்தி செய்து கொள்வதற்காக, வெவ்வேறு பொருள்களின் துணையுடன் (கூட்டமாக) மேற்கொள்ளப்படும் பல செயற்பாடுகளில் மாணவரை ஈடுபடுத்துவது அவசியமாகும்"

ஆரம்பக் கல்வியில் கணிதம் திறனை வளர்ப்பதாகும் இளமையில் மூளையின் செயற்பாட்டிற்கு கணிதமே அடிப்படையாக அமைகின்றது. குழந்தைகள் இளமையில் வீட்டு முற்றத்தில் கடை போட்டு விளையாடுதல், மண்சோறு, கறி ஆக்கி விளையாடுதல் ஆகியன கணிதத் திறனை வளர்த்து வந்தன. இன்று பெற்றோர் குழந்தைகளை மண்ணில் விளையாடினால் பூச்சி பிடித்துவிடும் என அடித்து விரட்டுவர். இதனால் இயற்கையுடன் இணைந்து கணித எண்ணக்கருவை வளர்க்கும் ஆற்றல் குழந்தைக்கு மட்டுப்படுத்தப்படுகின்றது.

இத்தகைய பெறுமானமான இரு பாடங்களும் இன்று கற்பிக்க ஆளணி இல்லாது அதன் நோக்கத்தை இழந்து நிற்கின்றது. பெரும்பாலான பாடசாலைகளில் இப்பாடங்களைக் கற்பிக்க ஆளணி இல்லை ஓராசிரியர் பாடசாலைகளில் குழந்தைகளைச் சத்தம் செய்யாது மேற்பார்வை செய்யும் தொழிலில் மட்டுமே அவர்கள் ஈடுபட்டுள்ளனர். இதனால் ஆரம்பக் கல்வியில் ஆண்டு மூன்றுக்கு மேற்பட்ட வகுப்புகளில் கற்பதற்குரிய அடிப்படை அத்திவாரம் இடப்படாது போய்விடுகிறது.

இதனால் ஏனைய பாடங்களை விளங்கிக்கொள்வதற்குரிய மொழிஅறிவில் மாணவன் தேர்ச்சி அடையவதில்லை. மொழித் தேர்ச்சியின்மையால் கணிதப் பாடத்தையும்,ஏனைய பாடங்களையும் வாசித்து விளங்கிக் கொள்ளும் நிலையும் அற்றுப் போய்விடுகின்றது. இது இடைநிலைக் கல்வியையும் பாதித்து விடுகின்றது. தொடர்ந்து இடைநிலைக் கல்வியை மட்டும் அல்லாமல், உயர் கல்வியையும் பாதித்துள்ளது. இன்று கணித பாடத்தில் முழு இலங்கையிலும் க.பொ.த (சாதாரண) தரத்தில் எட்டு வீதமான மாணவர்களே சித்தியெய்தும் நிலை காணப்பட்டுள்ளது. இது எமது கல்வி நிலையில் பெரும் குறைபாடாக அமைகின்றது.

**சுகாதாரமும், போஷணையும்**

பிள்ளைகளின் கல்வியின் அடிப்படைக்கு சுகாதாரமும், போஷணையும் மிக, மிக இன்றியமையாததாகும். சுகாதாரப் பழக்க வழக்கங்கள் வாழ்க்கையின் அவசியமானதொன்று. "நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்" என்பர். உடல் உறுதிக்கு கல்வி அவசியம். உடல் உறுதியை சுகாதாரமும், போஷணையும் அளிக்கின்றது. கிராமப்பகுதிகளில் இவை இரண்டும் இன்று பெரும் பிரச்சனையாகக் காணப்படுகின்றன.

"சுகாதாரம் என்பது நோய்களிலிருந்து தப்பியிருத்தல் மாத்திரமன்று. சுகாதார தாபன வரைவிலக்கணத்திற்கு அமைய சுகாதாரம் என்பது உடல், உள, சமூக, ஆன்மீக நிறைவுடன் வாழ்க்கையை நடத்துவதற்குத் தேவையான திறன்களை நற்சுக நிலையினூடாகப்

பெற்றுக்கொள்ளல் ஆகும். சரியான போசனை, பழக்கவழக்கங்கள், போன்றவற்றின் ஊடாக இத்திறனைப் பெற்றுக் கொள்வதற்கான வாய்ப்புகள் அதிகரிக்க பெறுகின்றது. சுகாதாரத்தை ஏற்படுத்திக் கொள்வதற்கு துணையாக அமையும் அடிப்படை அம்சங்கள்.

- நற்சுகாதாரப் பழக்கங்களை அடிப்படையாகக் கொண்ட சரியான நடவடிக்கைகள்
- குறித்த நீர்ப்பீடனமாக்கல் முறைகள்.
- வைத்தியர் அறிவுறுத்தல்களுக்கு அமைய, தேவையான வேலைகளில் பெற்றுக்கொடுக்கப்படும் மருத்துவ உதவிகளும், சிகிச்சைகளும்.

எவரேனுமொருவருக்கு சுகவாழ்வைத் தனியே பேண முடியாது என்பது சுகாதாரம் தொடர்பான விசேடமான அம்சமாகும்.

நல்ல போஷனை நல்ல சுகாதாரத்தை பேணும் வாழ்வு என்பது நோய் நொடி அற்று இருத்தலாகும். நல்ல பால், பழம், முட்டை, இலைவகை, இறைச்சிவகை, தானியவகை ஆகியவற்றினூடாக ஊட்டச்சத்தைப் பெற்று உடலை உறுதியாக்கி, உள்ளத்தைத் திடமாக்கி நோயின்றி வாழலாம். ஆகவே பள்ளி மாணவர்களுக்கு இத்தகைய போஷணையுள்ள உணவுவகை அவசியம். இதனை உணர்ந்து கிராமப்புறப் பெற்றோர்கள் அவற்றை தமது பிள்ளைகட்கு ஊட்ட வேண்டும்.

பாடசாலைகளும், சுகாதாரம், போஷாக்கு என்பவை சம்பந்தமாக முக்கிய கவனம் செலுத்தலாம். அந்தக் கிராமத்தில் சுகாதாரப் பரிசோதகர், வைத்தியர்களை அழைத்துப் பெற்றோர்கள், அதிபர்கள், பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள், அனைவரையும் சம்பந்தப்படுத்தி கருத்தரங்குகள், ஆலோசனைச் செயலமர்வுகள் களப்பயிற்சிகள் நடத்தலாம். இதனால் மாணவர்கள் சுகாதாரம் பற்றிய சரியான அறிவைப் பெற்றுக் கொள்வதுடன் அன்றாட சுகாதார நடைமுறைப் பழக்கவழக்கங்களை வீட்டிலும், பாடசாலைகளிலும் மாணவரும், பெற்றோரும் கடைப்பிடிக்க ஏதுவாகின்றன. உதாரணமாக மலம் கழித்ததும் சவர்க்காரம் போட்டுக் கைகழுவுதல், கொதித்தாறிய நீரைக் குடித்தல், நாள்தோறும் குளித்து, சுத்த ஆடைஉடுத்துதல், சுத்தமான காற்றை சுவாசித்தல், தினமும் உடற்பயிற்சி, உளஅமைதி ஆகியன

போன்ற நற்பழக்கங்களை பாடசாலையும், சமூகமும் இணைந்து அறிமுகமாக்குதல் வேண்டும்.

"சுகாதார வேலைத் திட்டங்களின் கட்டமைப்பாக பின்வரும் அம்சங்கள் அடங்குகின்றன.

- வகுப்பறைச் சுகாதாரக் கல்வி.
- ஆரோக்கியமான பள்ளி வாழ்க்கை.
- பாடசாலைச் சுகாதார சேவைகள்.
- சமூகத் தொடர்புடன் கூடிய சுகாதாரச் செயற்பாடுகள்."

இவற்றை அன்றாட கிராம வாழ்க்கையுடனும், பள்ளி வாழ்க்கையுடனும் இணைத்து செயற்படுத்துவது நல்லது. எமது உணவு என்பது பற்றிய பாடம் ஒன்று அறிமுகமாக்கப்படும் போது விட்டமின்களைப் பற்றிக் கூறும் ஆசிரியர் உள்;ர் வளங்களில் எவற்றில் உண்டு. அதனை எவ்வாறு பெறலாம்? அதனால் ஏற்படக்கூடிய நன்மைகள் என்ன? என்பது பற்றி போஷாக்கை அறியவைக்க வேண்டும். தானியவகை, கிழங்குவகை மலிவாகப் பெற்று உடலுக்கு சத்தூட்டம் பற்றி அறியவைக்க வேண்டும். இவை எவ்வாறு நோய்களினின்றும் தப்பவைக்கின்றது. என்பது பற்றியும் அறியவைக்க வேண்டும்.

பிள்ளையின் உடற்சுகாதாரம், உளச்சுகாதாரம் விருத்தி அடைய செயற்திட்ட நடைமுறைகள் அவசியம். குழந்தைகள் உணவருந்த முன்பு கைகளைக்கழுவி உணவருந்தல்போன்றவையும், தொற்று நோய் ஏற்படும் காலங்களில் வீட்டிலும், அயலிலும் மஞ்சள் நீர் தெளித்தல், அக்காலங்களில் எவ்வாறு நடக்க வேண்டும் என்பன பற்றிய அறிவு உடல், உள சுகநிலையை மாணவர்களுக்கு ஊட்டும்.

"சுற்றாடலில் ஈக்கள், நுளம்புகள் போன்றன பரவும் இடங்களை ஒழிப்பதற்கு மாணவர்களுடன் சேர்ந்து கிராமத்திற்குச் செல்லுதல். ஒரு செயற்பாடாகும். வீட்டுத் தோட்டங்களிற் காணப்டும் தென்னஞ் சிரட்டைகள், வெறும் தகரப் பேணிகள் போன்ற நீர் தேங்கி நிற்கக் கூடியவற்றை கவிழ்த்து வைத்தல் அல்லது அவற்றை அழித்துவிடல் அல்லது அவற்றைப் புதைத்துவிடல், களைபூண்டுகளைப் பிடுங்குதல்,

குப்பைக் குழிகளை அமைத்தல் போன்ற நடவடிக்கைகளை மாணவரின் உதவியுடன் ஒழுங்கமைக்கலாம்.

இது மாணவர்களுக்கும், பெற்றோர்களுக்கும் களரீதியாக உற்சாகமளிக்கக்கூடிய ஒரு செயற்பாடாகும். பெற்றோர்கள் தங்களை நாடிப் பாடசாலைச் சமூகம் வருகின்றது என்ற உணர்வு அடிப்படையில் ஊக்குவிக்கப்பட்டு, உற்சாகப்பட்டு ஒத்துழைப்பர்.

**சுற்றாடல், வளமுகாமை**

ஆரம்பக்கல்வியில் சுற்றாடலும், வளமுகாமையும் முக்கிய இடம் பெறுகின்றது. சுற்றாடல் சார்ந்த, சூழ்ந்த கல்வியே முக்கியம் பெறுகின்றது. சுற்றாடலுக்கே கல்வி சுற்றாடல் அபிவிருத்தியடைவதே அக்கல்வியின் முக்கிய நோக்கம். சுற்றாடலுடன் இணைந்த வளமுகாமையும் அவைபற்றிய திறனும் நிறுவன முகாமைக்கு அவசியமாகின்றது. சுற்றுப்புறச் சுற்றாடலையும், வளமுகாமையையும் மையமாக வைத்தே ஆரம்பக் கல்வியுடன் ஒன்றிணைந்த கலைத் திட்டம் சகல ஆரம்பப் பாடசாலைகளிலும் அறிமுகப்படுத்தப் படுகின்றது.

சுற்றாடலில் வாழும் சமூகத்தினர் குறிப்பிடத்தக்க அளவு கல்வியறிவு கொண்டவர்களாக இருக்கமாட்டார்கள். கிராமத்தில் வாழ்வோரில் பெரும்பாலானோர் கிராமப் பாடசாலைகளிலேயே தமது அடிப்படைக் கல்வியைப் பெற்றோராகவே இருப்பர். இவர்களிடமும் பல்வேறு திறன்களை கொண்டவர்கள் காணப்படுவர்.

இவர்களை இனங்காணுதலும், அவர்களைப் பயன்படுத்துதலும் சிறந்த வளமுகாமையாகும். பல்தரப் பாடசாலைகள் பலவற்றில் அதிபராக கடமையாற்றிய காலப்பகுதியில் நான் பெற்ற அனுபவங்களை இங்கு குறிப்பிடுவது பொருத்தமானதாகும். நான் கடமையாற்றிய ஒரு பல்தரப் பாடசாலைச் சுற்றாடலில் திறமைமிக்க மேளம் இசைப்பவர் ஒருவர் வாழ்ந்தார். பாடுவதிலும் திறமை பெற்றிருந்தார். நிரந்தரமான தொழில்களில் ஈடுபட்டிராத அவர் சில வேளைகளில் பாடசாலை நேரங்களில் கூட பாடசாலைக்கு வருகை தருவதுண்டு. அவரது வருகையின் நோக்கம் பாடசாலை மாணவரின் நடவடிக்கைகளின் ஊடாக

திருப்தி பெறுவதாகும். பாடசாலையிலிருந்து மேளத்தை இசைப்பதில் அவர் அதிக ஆர்வம் கொண்டிருந்தார். சில சர்ந்தப்பங்களில் சிறிது நேரத்திற்கு மேளம் இசைப்பதற்காக நான் பாடசாலைக்கு அவரை அழைப்பதுண்டு.

சுற்றாடல் மனிதவள முகாமையிலும் பாடசாலை நேரத்தில் கற்றல், கற்பித்தல் நேரத்தை அதிபர் முகாமை செய்யும் திறன் இங்கு நல்ல எடுத்துக் காட்டாகும். எங்கள் சம காலத்தில் மாவட்டங்கள் எதிர்நோக்கும் ஆசிரிய வளமுகாமைக்கு இவை நல்ல ஒரு வழிகாட்டியாகும்.

நல்ல கல்வி ஊட்டப்படுவதற்கு வளமுகாமைத்துவத் திறன் அவசியமாகும். வளமுகாமைக்கு வளங்களை இனங்காணல் அவசியமாகும். அதனையே மேலே அதிபர் தன் அனுபவத்தில் காட்டியுள்ளார். அவ்வளங்களை இனங்கண்டு உச்ச அளவுக்குப் பயன்படுத்தக் கூடிய வழிவகைகளைத் திட்டமிடல் வேண்டும். இத்திட்ட அடிப்படையிலான வேலைத்திட்டத்தை முன்வைக்கலாம். அத்திட்டச் செயற்பாடு சம்பந்தமாக நல்ல மதிப்பீடு செய்வதும் கல்விச் செயற்பாட்டிற்கு அவசியமானதாகும்.

"திருப்தியான அபிவிருத்தி அமுலாக்கலுக்கும் நிகழ்ச்சித் திட்ட செயற்பாட்டிற்கும் போதுமானஅளவு மனித, நிதி, பௌதிக வள முகாமைத்துவம் அவசியமானதாகும்."

இன்றைய கல்விப் பிரச்சினைகளுக்கு கிடைக்கும் வளங்களைக் கொண்டு அதி உச்சப்பயன்பாடு அவசியம். கல்வி வளங்களான (1) மனிதவளமும் (2) பௌதிக வளங்களும் (நிதி + மூலப்பொருட்களும்) அவசியமாகும். தரப்பட்ட அளவு ரீதியான வளங்களில் உச்சப்பயன்பாடு பெறக்கூடிய வளமுகாமிப்புச் செயற்பாடு அவசியமானதாகும். "வளமுகாமைச் செயற்பாட்டை பின்வரும் விதத்தில் வரைவிலக்கணம் கூறலாம்.

1) வள ஒதுக்கீடு
2) வளப்பகிர்வும், வளப்பயன்பாடும்
3) வளப் பேணல்
4) வள அபிவிருத்தி
5) வளப்பன்முகப்படுத்தல்

கல்விச் செயற்பாட்டில் கருத்துடையோர் இவ் ஐந்து வகையான படிமுறைச் செயற்பாட்டிலும் கல்விக் கருமத்தொடரை ஆற்ற வேண்டும். வளங்களை வளத்தேவைகளை இனங்கண்டு ஒதுக்கீடு செய்தும், நல்ல முறையில் பகிர்ந்தும், பயன்படுத்தியும், வரவேண்டும். கொடுக்கப்பட்ட வளங்களைப் பெற்றுக்கொண்டவர்கள் நல்லமுறையில் பேணிப் பாதுகாப்பதுடன் அத்தகைய வள அபிவிருத்திகளையும் கருத்திற் கொள்ள வேண்டும். வளமானது மையப்படுத்தாமல் சகல பகுதிகளுக்கும் பன்முகப்படுத்துவதனூடாகவே அடிநிலையில் கல்வி அபிவிருத்தியைக் காணமுடியும்.

### கிராமச்சுற்றாடலும், வளப்பயன்பாடும் அதிபர் முகாமைத்துவமும்

நாம் மேற்கூறிய கிராமச்சுற்றாடல், வளப்பயன்பாட்டிற்கு அதிபரே பொறுப்பேற்க வேண்டும். பாடசாலை அதிபரே கிராமப்பாடசாலையைப் பொறுப்பேற்ற நிறுவன முகாமையாளர், தற்போதைய முகாமைத்துவ கலாச்சாரத்தின் அடிப்படையில் அதிபரே கிராமப்பாடசாலையின் முதன்நிலை முகாமையாளருமாவர். முகாமையாளர் என்ற அடிப்டையில் சுற்றாடல், வளமுகாமைக்கு அவர் பொறுப்பேற்க வேண்டும். ஏனெனில் அவர் நிறுவன முதல்வர், சமூக முகவர், அபிவிருத்தி முகவர். இந்தக்கருத்தடிப்படையில் அதிபர் அந்நிறுவனக் கல்வி விருத்திற்கு விடை கூறவேண்டியவர். கணிப்பீட்டுக்குரியவர் ஆகின்றார்.

### பொருளாதார அடிப்படையில்

அதிபர் கிராமப்பாடசாலையின் பொறுப்பை ஏற்றவுடன் அக்கிராமத்தின் பொருளாதார பின்னணியை நன்கு கண்டறிய வேண்டும். மக்களுடைய வருவாய் மூலங்கள் அவற்றை அவர்கள் பெறும் வழியை சரியான முறைகளைப் பயன்படுத்துகின்றார்களா? என்பதை நன்கு

கண்டறிய வேண்டும். அதிபரானவர் தனியாக பாடசாலை உள்ளக நிர்வாக செயற்பாட்டில் மட்டும் நின்று விடாது கிராம வெளியக நிர்வாகச் செயற்பாட்டிலும் ஈடுபடவேண்டும். கிராம மக்கள் குறைந்த அளவினராகக் காணப்படுவதால் ஒவ்வொரு குடும்பத்தின் பொருளாதாரப் பின்னணியையும் தகவல்கள், தரவுகள் அடிப்படையில் ஆசிரியர்கள் மூலம் அல்லது கிராமத்தில் வளர்ந்தோர்கள் மூலம் கண்டறிய வேண்டும். கிராமம் பற்றிய தகவல், தரவுகள் அடங்கிய தரவு வங்கி பாடசாலையில் அமைக்கப்பட வேண்டும்.

இத்தகவல், தரவுகள் பொருளாதாரப் பின்னணியைப் படம்பிடித்துக் காட்டும். ஒவ்வொரு மாணவர்களது குடும்பத்தினரதும் பொருளாதாரப் பின்னணியை அதிபர் அறிவதனூடாக அக்குடும்பத்தில் இருந்து படிக்கவரும் மாணவனுக்கு பொருளாதார ரீதியாக தாய், தந்தையர் மூலமோ அல்லது நிறுவனங்கள் ஊடாகவோ கல்வியை விருத்தியாக்க அவர்களுக்கு உதவமுடியும்.

### சமூக அடிப்படையில்

அதிபர் கிராமச் சமூகத்தில் ஒரு அங்கத்தவராவர். தானும் சமூக உறுப்பினராகக் கருதி சமூகத்துடன் ஒன்றிக்க வேண்டும். சமூகப் பின்னணியை கண்டறிய வேண்டும். கிராமத்திலிருக்கும் சமய ரீதியான மக்கள் தொகை, தொழில், இனரீதியான குடும்பங்களை வெவ்வேறாகக் கண்டறிந்து கொள்ளல் அவசியம். சமூகத்திலிருக்கும் உயர்வு, தாழ்வு வருமான அடிப்படையிலா? அல்லது வர்க்க அடிப்படையிலா, கல்வி ரீதியாகவோ என்பன கண்டறியப்பட வேண்டும். அத்துடன் சமூகத்தில் எத்தகைய குடும்பம் தாழ்வுச் சிக்கல், உயர்வுச்சிக்கலில் காணக்கடுகின்றதென்பதை அதிபர் கண்டறிதல் வேண்டும்.

அதிபர் சமூகத்தன்மையுடன் ஒன்றிப்பதனூடாக பாடசாலை மாணவர்கள் சமூகரீதியாக கல்வியில் சமவாய்ப்பு இல்லாமல் இருப்பதையோ, அல்லது கல்வியில் புறக்கணிக்கப்படுவதையோ அல்லது தாழ்வு நிலையில் கல்வி நிலையிலிருந்து நழுவும் தன்மைக்கு இடமளிக்காமல் அதிபர் ஒவ்வொரு மாணவனையும் கற்றல் செயற்பாட்டில் ஈடுபடுத்த முடியும். சமூகப்பிறழ்வு புறக்கணிப்பு ஆகியவற்றை சமூக

மக்களுக்கு வெளிப்படுத்தி கல்விக்கு கண்ணில்லை என்பதை வெளிப்படுத்தி கல்வியில் சம வாய்ப்பைச் சமூக ரீதியாக வழங்க முடியும்.

**காலாசார அடிப்படையில்**

சமூக கலாசார அழகியல் உணர்வை சமூகத்திலிருக்கும் ஒவ்வொரு மகனுக்கும் அடிமட்டத்தில் ஏற்படுத்த வேண்டும். சமூகத்தில் உழைத்து களைத்த உள்ளங்களுக்கு உழைத்ததன் பின் அமைதியும், ஆறுதலும் அளிப்பது கலாசார நிகழ்வுகள். கிராமங்கள் பாரம்பரியமாக கலாசாரப் பண்புகளையும், விழுமியங்களையும், கலைக் கோலங்களையும் தன்னகத்தே உடையது. இவற்றை அதிபரும், ஆசிரியரும் கண்டறிந்து அவற்றிற்கு வடிவமைத்து, சீராக்கம் செய்து அச்சமூக கலாசாரதுறையில் அபிவிருத்தியடைய வழிகாட்ட வேண்டும். கிராமத்தில் நல்ல தாளம், கூத்து, கும்மி, கோலாட்டம், நாடகம் போன்ற மரபியற் கலைகள் செறிந்து காணப்படும் இவற்றை நல்ல முறையில் கிராமப்பள்ளி மாணவர்களைக் கொண்டு வடிவமைக்கலாம். பெற்றார் கிராமத்தில் கலைக்கென தம் வாழ்க்கையை அர்ப்பணிக்கத் தயாரானவர்கள். அவர்களிடம் இயற்கையான கிராமிய கலைவளம், கிராமிய கலைஞானம் மலிந்து காணப்படும்.

பள்ளிமாணவர்கள் இளமை வயதிலிருந்து பார்த்தும் கேட்டும் நன்கு பழகியவர்கள். அவர்களுக்கு இயற்கையாகவே கலைஞானம் உண்டு. அதனை சீராக்கம் செய்து கையளிப்பதே ஆசிரிய, அதிபர்களது பணியாக இருக்க வேண்டும். அவரே அங்கு நடக்கும் கலாசார கோலங்களை ஒழுங்கு பண்ணுபவராகவும் தலைமை தாங்குபவராகவும் இருத்தல் வேண்டும்.

கூடுதலான குக்கிராமங்களில் நல்ல கரகாட்டம், காவடியாட்டம், கோலாட்டம், கும்மியாட்டம், குடமூதல், குதிரை நடனம், பொம்மலாட்டம் என்பன நிறைந்து காணப்படும். நல்லதாளம், மேளம், மத்தளம், மிருதங்கம், இசைப்போர் காணப்படுவர். இவர்களை எல்லாம் பாடசாலைச் சமூகத்தில் இனங்காணவேண்டும். திட்டத்துடன் இணைத்து அவர்கள் ஊடாக மாணவர்கள் மரபு ரீதியான முறைமைக் கல்வியை விடுத்து முறைமையற்ற நிலையில் பயின்று தேர்ச்சி பெறும் நிலையை அதிபரும்,

ஆசிரியர்களும் உருவாக்கிக் கொடுக்க வேண்டும். இத்தகைய செயற்பாடே கிராமச் சமூதாயத்தில் கலாசாரப் பின்னணி ஊடாக கல்வி விருத்திக்கு வேண்டிய ஒன்றாகக் காணப்படுகின்றது.

### பின்னடைவும் மெல்லக்கற்போரும்

கிராமக் கல்விச் சூழலில் பின்னடைவும், மெல்லக்கற்கும் நிலையும் பொதுவான விடயம்: நாம் மேலே கூறிய காரணங்களின் அடிப்படையில் கிராமியக் கல்வி எதிர் நோக்கும் கல்விப் பிரச்சினையால் இவ்விரு தன்மையும் பொதுவாக அமைந்து விடுகின்றன. பின்னடைவிற்கு மாணவர்களது குடும்பச் சூழல், குடும்பப்பின்னணி, கிராமப்பின்னணியுடன் அவர்களுக்கு கல்வி அளிப்பதற்குரிய ஆசிரிய வளம், பௌதீக வளம், ஆகியன மறுக்கப்பட்ட நிலையும் இவ்விரு தன்மைக்கும் பிரதான காரணிகளாக அமைகின்றன.

ஒருவனுடைய கல்வி, கருவறையிலேயே நிர்ணயிக்கப்பட்டு கல்லறையில் முடிவடைகின்றது. குழந்தையைக் கருவுற்ற தாயானவள் தான் கருவுற்ற காலத்திலிருந்து நல்ல கல்விச் சூழலில் வாழ்வது மட்டும் அல்லாமல் நல்ல நூல்களை வாசித்து நல்ல விடயங்களை அக்குழந்தைக்கு விதைக்க வேண்டும். அந்த ஞானம் தான் அவனுக்கு இளமையில் இருந்து முதுமைவரை சுடர்விட்டு ஒளி வீசுகின்றது.

இந்தச் சூழல் இல்லாமல் புறச்சூழலுக்குட்பட்டுக் கற்கும் குழந்தை புறக் காரணிகள் கல்விக்குரிய வாய்ப்புக்கள் வசதிகளை வழங்காதவிடத்து கல்வியில் பின்னடைகின்றது மெல்லக்கற்கின்றது.

இத்தகைய காரணிகளுடன் குழந்தையின் உளத் தன்மையும், உடலியற் தன்மையும் இப்பின்னடைவிற்கும் மெல்லக் கற்பதற்கும் காரணமாகின்றன. குழந்தையானவன் கல்வி கற்பதற்கு உடல் ரீதியாகவும், உள ரீதியாகவும் தகுதித்தன்மை அடைய வேண்டும் இதனை விடயம் அறிந்த பெற்றோர்கள் தங்கள் குழந்தை கருவுற்ற காலத்திலிருந்து வளர்த்தெடுக்கும் காலம் வரை நன்கறிந்து தங்கள் குழந்தைக்கு ஏற்ற, வாய்ப்பான உகப்புச் சூழலினை ஆக்கிக் கொடுக்கின்றனர். வசதிகள், வாய்ப்புக்கள் அற்ற குடும்பத்தினர்இப்பெறுமானத்தை அறியாதவர்களாய்

அவ்வாறு வளர்த்தெடுக்கத் தவறிவிடுகின்றனர். இத்தகைய நிலையும் இவ்விரு தன்மைகளுக்கும் காரணமாகின்றன.

**பின்னடைவு என்றால் என்ன?**

ஒரு மாணவன் அவனது வயது கற்கும் வகுப்பின் அடைதிறன் என்பவற்றை உரிய நிலையில் அடையாது. அறிவு மனப்பாங்கு, திறன் ஆகியவற்றின் விருத்தி நிலையில் அதிகுறைந்து காணப்படுவதையே பின்னடைவு எனலாம். அவனது குணம், நடத்தை, கோலம், ஆற்றல் பின்தள்ளப்பட்டுக் காணப்படும். இதுவே பின்னடைவின் வெளிப்பாடாகும்.

"அந்தந்த ஆண்டின் இறுதியில் நான்கு வகையான மொழித்திறன்களின் ஊடாக மாணவன் பெற்றுக் கொள்ள வேண்டிய ஞானக் கலத்தின் (அறிவு, திறன்கள், மனப்பாங்குகள்) தன்மை அதில் குறிப்பாகக் காட்டப்பட்டுள்ளது. ஒவ்வொரு ஆண்டின் இறுதியிலும் மாணவன் எய்தியுள்ள உத்தேச மட்டமானது (தேர்ச்சி மட்டமானது) அவனது அடுத்த ஆண்டுக்கான பிரவேசத்தன்மையாகின்றது. அந்தந்த ஆண்டுக்குரிய குறித்த பிரவேசத் திறன்களை தீர்மானிக்கும் ஆகக் குறைந்த தேர்ச்சி மட்டத்தை (எதிர்பார்ப்பு மட்டத்தை) மாணவன் அடைந்திருக்காவிடின் இடைநிலைக் கல்வியின் போது சிக்கலான எண்ணக்கருக்கள் வகையைச் சேர்ந்த குறைபாடுகள் அவனிடத்தில் ஏற்படும்."

வகுப்பு மட்டத்தில் அடையும் அடைவு மட்டத்திலும், அடுத்த ஆண்டுக்கான பிரவேசத்தகைமையிலும் மாணவர்கள் குறைவாகக் காணப்படின், அம்மாணவனைபின்னடைவு மாணவன், என்றும் அவனுக்குக்கற்பிக்கமுடியாது எனவும் ஆசிரியர்கள் கூறிவிடுவர். இந்நிலையை அடையாத நிலையிலும் இலங்கையைப் பொறுத்தமட்டில் இயல்பான உயர்வாக வகுப்பு ஏற்றிவிடும் தன்மை அடுத்த வகுப்பில் கல்விப் போதனைக்கு ஆசிரியர்களுக்குச் சிக்கலை உருவாக்கி விடுகின்றது.

"ஏதேனும் ஆண்டில் மாணவனொருவன் உத்தேச மட்டத்தை எய்தாவிடின் அவன் அடுத்த ஆண்டில் கல்வி நடவடிக்கைகளில்

வெற்றிகரமாக ஈடுபடுவது கடினமானதாக அமையும் மற்றுமொரு விதமாகக் கூறினால் அடுத்த ஆண்டில் வெற்றிகரமாகக் கற்பதற்குத் தேவையான பிரவேசத் தேவைத் திறன்களைப் பெறாத மாணவர்களை அடுத்த வகுப்பிற்கு வகுப்பேற்றஞ் செய்வதை நியாயமானதொரு படிமுறையாகக் கொள்ள முடியாது."

இத்தகைய நிலை இன்றைய கல்வி முறையில் பெரும்பாலும் சகல இடங்களிலும் ஆசிரியர்களுக்கு பிரச்சினையைத் தோற்றுவித்து உள்ளது.

"யாதேனுமொரு தரத்தில் இருக்கும் மாணவன் அத்தரத்தின் தேர்ச்சி மட்டத்துக்குக் கீழ் அல்லது அதற்குக் கீழான தரங்களின் தேர்ச்சி மட்டத்துக்கு கீழே காணப்படலே "பின்னிற்றல்" என்பதாய்க் கருதப்படுகின்றது. "அ" என்னும் மாணவன் ஆண்டு ஐந்தில் கற்கின்றான். அவனது வாசிப்புத் திறமை ஆண்டு ஐந்து மட்டத்தை விடக் குறைவானதாகும். அவனது தேர்ச்சி மட்டம் மூன்றாம் ஆண்டு மாணவரது மட்டத்தில் காணப்படுகின்றது."

இந்த பின்னிற்றல் என்ற பதம் ஆசிரியரினால் நாம் பின்னடைவு என்று பாவித்த பதத்திற்கு ஏற்க பயன்படுத்தப்படுகின்றது.

இத்தகைய பின்னிற்பதற்கான காரணம் மாணவர்கள் பெறவேண்டிய அடிப்படை அனுபவங்களை ஆரம்பத்தில் பெற்றுக் கொள்ளாமையே. அடிப்படை அனுபவங்களைப் பெற்றுக் கொள்வதற்காக முன் பள்ளியிலும், பாடசாலையிலும் சந்தர்ப்பங்களைப் பெற்றுக் கொடுத்தல் வேண்டும். அதன் மூலம் இத்தகைய பின்னடைவைப் போக்க முடியும்.

மாணவர்களில் சிலர் விடய எண்ணக்கருக்களை விரைவாக விளங்கிக் கொள்வர். இவர்கள் மீத்திறன் மாணவர்கள் சிலர் தாமதித்து ஆறுதலாக விளங்கிக் கொள்வர். இவர்களையே நாங்கள் மெல்லக் கற்போர் என அழைக்கலாம். விடயங்களை நன்கு விளங்கிக்கொள்ள இவர்களுக்கு கால அவகாசம் தேவை. பல உத்திகள், கல்வி நுட்பங்களைக் கையாண்டு கல்வி உபகரணங்களின் துணையுடனே விளங்க வைக்க முடியும், இதனை மெதுவாக விளங்கிக் கொள்வர்.

ஒரு வகுப்பில் உள்ள பிள்ளைகளில் இத்தகையோரை நாம் ஒரு குழுவாக வகுத்துக் கொள்ளலாம்.

மெல்லக்கற்போர்களை வகுப்புக்களின் ஆசிரியர்கள். தனியான கவனஞ் செலுத்தி கற்பிக்க வேண்டும் பெற்றோர்கள் ஆசிரியர்களுடன் இணைந்து கவனஞ் செலுத்த வேண்டும். பாடசாலைச் சூழலும், வீட்டுச் சூழலும் இவர்களுக்கு உதவியாக செயற்பட வேண்டும்.

சில வேளைகளில் பிள்ளையின் உடல், உளக்குறைபாடுகள் இவற்றுக்குக் கூடுதலாக காரணங்களாக அமைகின்றன. இத்தகைய காரணங்களைக் கண்டறிந்து உதவவேண்டும். நன்றாக கற்று வந்த பிள்ளை திடீரென சுகவீனம் உற்று அதனது உடல் தாக்கம் ஏற்படும் பொழுது அதன் கற்றல் வேகமும், விடயத்தை கிரகித்து அடையும் திறனும் பாதிக்கப்படுகின்றது.

இவற்றை அனுபவ ரீதியாக எனது குடும்ப அளவில் என்னால் கண்டறிய முடிந்தது. எனது இரண்டாவது புதல்வி ஆண்டு நான்கு வரை நல்ல திறனுள்ள மாணவியாக வகுப்பில் கற்று வந்தார் அவருக்கு ஆண்டு நான்கில் செங்கமாரி நோய் வந்ததன் பின் உடல் நிலையில் மாற்றமும் ஏற்பட்டு கற்றல் நிலையிலும் வீழ்ச்சி காணப்பட்டது. அவர் பின்பு மெல்லக் கற்கும் நிலைக்குத் தள்ளப்பட்ட தன்மையை என்னால் அவதானிக் முடிந்தது. பெற்றாரும் ஆசிரியர்களுமாகிய நாம் கூடிய கவனம் எடுத்தமையால் அவரைத் திறனுள்ள மாணவராக்க முடிந்தது. இத்தகைய நிலையை பெற்றாரும், வகுப்பாசிரியரும் கண்டறிந்து உதவவேண்டும். தனியான கவனம் ஒன்று இத்தகைய மாணவர்களிடத்து தேவைப்படுகின்றது. தனியான கவனம் செலுத்துவதன் மூலம் ஓரளவு நிவாரணம் காண முடியும்.

### குறைபாடுகளை இனம் காணாமை

நல்ல தீர்வுக்கும், நல்ல திட்டத்திற்கும் குறைபாடுகள் உரிய முறையில் இனங்காணப்பட வேண்டும். கல்விரீதியாக, அவதான மேற்பார்வை செய்பவர்கள் குறைகளை இனங்காணாமையே நல்ல தீர்வை முன்வைத்து செயற்படாமைக்கு அடிப்படைக் காரணமாக அமைகின்றது.

கிராமப் பகுதிகளில் கற்பிக்கும் ஆசிரியர்கள், அதிபர்களைப் பொறுத்த மட்டில் பாடசாலைகளில் நிறைய குறைகளை எதிர் நோக்குவர். அக்குறைகள் கூடுதலாக உள்ளதை மனதில் வைத்து சோர்வடைந்தும், வெறுப்படைந்தும் விடுவர்.

உண்மையில் இத்தகைய நிலையை விடுத்து குறைகளைப் போக்குவதை ஒரு சவாலாக மேற்கொள்ள வேண்டும். குறைகளை கண்டு விட்டு நீங்காது குறைகளைப் போக்குவோம் என்ற மனப்பாங்குடன் அவற்றை அணுக வேண்டும்.

குறைகளின் வடிவம் என்ன? அத்தகைய குறைபாடுகளுக்குரிய காரணம் என்ன? பின்னணி என்ன? என்பதை காரண காரியத்துடன் நன்றாக உற்று நோக்கிப் பகுத்தாராய வேண்டும். இன்னொரு விதத்தில் கூறினால் குறைகளின் தன்மையையும், அவை ஏற்பட்ட விதத்தையும் தோண்டித் தோண்டி ஆராய்ந்து கொள்ள வேண்டும். இத்தகைய செயற்பாட்டின் மூலம் குறைகளை நன்முறையில் இனங்காணலாம்.

குறைகளை இனங்காணாத தன்மையே கல்வி சீரடையாமைக்கு முக்கிய காரணியாக அமைகின்றது. இந்நிலை கல்வி அமைச்சு, கல்வித் திணைக்களங்களிலும் காணப்படுகின்றது. அவர்கள் கிராமக் கல்வியையோ அல்லது கிராமப் பாடசாலைகளைப்பற்றியோ அவற்றின் குறைகளை இனம் காணும் தன்மையினின்றும் விலகிக் கொள்கின்றார்கள். இதனால் அவர்கள் நல்ல முறையில் அக்குறைகளைப் போக்கவோ, நீக்கவோ முன்வருவதில்லை. இத்தகைய ஆதரவு அதிபர்கள், ஆசிரியர், பெற்றோர்க்குக் கிடைக்காத காரணத்தினால் அவர்களும் இக்குறைகளைத் தம்மட்டத்திலாவது தீர்த்துவிட முனைவதில்லை. பாடசாலை மட்டத்தில் குறைகளை இனம் காணாமை அவற்றின் கல்வியில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்துகின்றது. இக்குறைபாடுகளை அவர்கள் நல்ல முறையில் இனம் காணுவதன் மூலம் தங்கள் மட்டத்திலும், அதற்கு மேலானவர்களுக்கும் உதவி கல்வியில் அபிவிருத்தி காண முடியும்.

**போக்குவரத்து கஷ்டம்**

கிராமப் பாடசாலைகளை எதிர் நோக்கும் முக்கிய பிரச்சினைகளில் ஒன்று போக்குவரத்துக் கஷ்டம் இக்கஷ்டம் எந்தளவிற்கு கிராம அபிவிருத்தியைப் பாதிக்கின்றதோ அந்தளவிற்கு பாடசாலை அபிவிருத்தியையும் பாதிக்கின்றது. பாடசாலை அமைவிடம் போக்குவரத்து சுலபமான இடத்தில் இல்லாது, அல்லது பிரதான வீதிக்கு அருகாமையில் அமையாது அதி தூரமாக பத்து மைல் அல்லது பதினைந்து மைல் தொலைவில் அமைந்து விட்டால் அது பெரும் பாதிப்பை ஏற்படுத்தும். இப்பாதைகள் சீரற்ற முறையில் சேறும், சுரியும் கலந்தோ அல்லது மணல் நிறைந்த தாகவோ அமைந்து விட்டால் துவிச்சக்கர வண்டி மூலமோ அல்லது நடந்தோ செல்வதற்கு ஆசிரியர் மாணவர்கள் யாவருமே கஸ்டப்படுவர்.

பாடசாலைகளின் விருத்திக்கு பெரும் தடையாக அமைகின்றது. போக்குவரத்து வசதிகள் ஒழுங்கின்றிக் காணப்படுவது இவ்வாறான பின்னணியில் காணப்படும் பாடசாலைக்கு ஆகக்குறைந்தளவு வசதிகள் கூடக் கிடைக்கப் பெறாவிடின் புது ஆசிரியர்கள் கடைமையேற்ற நாள் தொடக்கமே அப்பாடசாலைகளிலிருந்து இடமாற்றம் பெற்றுச் செல்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வது ஆச்சரியப்படத்தக்க தொன்றல்ல. (94)

கிராமப் பாடசாலைளின் சூழல் கல்விச்செயற்பாட்டில் அங்குள்ள போக்குவரத்துக் கஷ்டத்தால் கடமையிலீடுபடும் ஆசிரியர்கள்,அதிபர்களை ஊக்குவித்து கவருவதாக இல்லை. இதே போலவே இப் போக்குவரத்துக் கஷ்டத்தை காரணமாகக் காட்டி கல்வித் திணைக்கள கோட்டக் கல்விப்பணிப்பாளர்கள் அடிக்கடி சென்று அவர்களின் பிரச்சினைக்கு உதவ முன்வருவது மட்டுமன்றி மேற்பார்வை செய்யவும் தவறி விடுகின்றனர். போக்குவரத்துக் கஷ்டத்தால் அதிபர், ஆசிரியர்கள், பெற்றோர்கள் இத்திணைக்களங்கள், கோட்டங்களுக்குச் சென்று தமது குறைகளை நீக்க முடியாதவர்களாக செயலற்று விடுகின்றனர்.

**ஆரம்பக்கல்விப், பாடத்திட்டம்**

இலங்கையிலுள்ள நடைமுறையின் பிரகாரம் பாடத்திட்டம் மைய நிலையில் தயாரித்தே கையளிக்கப்படுகிறது. இத்திட்டத்தை பாடசாலைச் சூழலுக்கேற்பக் கற்பிப்பதே ஆசிரியன் செய்யவேண்டிய செயற்பாடு. ஆனால் கூடுதலான ஆசிரியர்கள் பாடத்திட்டத்தை மாற்றியமைக்காது அப்படியே கற்பித்து விடுகின்றனர். இத்தகைய நிலை மாணவர்களை சூழலில் ஈடுபடுத்தி கற்கவைக்க மறுக்கின்றது. மாணவனது சூழலில் அவனுக்கு ஆர்வமான முறையில் செய்முறைச் செயற்பாட்டுடன் இணைந்து இப்பாடத்திட்டம் போதிக்கப்படவேண்டும்.

இப்பாடத்திட்டம் முழுமையாக அந்தந்த ஆண்டு காலப்பகுதியில் பூர்த்தியாக்க வேண்டும் என மேற்பார்வையாளர்கள் எதிர்பார்த்தால் ஆசிரியர் மாணவர்களுக்கு அப்பாடத்திட்டம் சம்பந்தமான விடயம் விளங்கியதோ, கிரகிக்கக்கூடியதாக இருந்ததோ என்பதைப்பற்றி கவலைப்படாமல் நியமமுறைக்கு உட்பட்டு, குறித்த காலப்பகுதியில் முடித்தும் விடுகின்றனர். இதனால் மாணவர்கள் விடய அடைவில் கஷ்டப்படுகின்றனர். பாடத்திட்டத்திற்கு அமைய ஒவ்வொரு வகுப்பிற்கான கற்பித்தல் நடவடிக்கைகளை உரிய விதத்தில் ஒழுங்கமைத்துக் கொள்ள ஆசிரியர்கள் பெருஞ்சிரமங்களை எதிர்நோக்குகின்றனர். ஆசிரியர்கள் ஒன்றுக்கு மேற்பட்ட வகுப்புக்களுக்கு கற்பிக்க வேண்டியேற்படுகின்றது. உரிய பாடத்தைப் பூரணப்படுத்துவது பெரும்பாலான வேளைகளில் கடினமானதாக அமைகின்றன. நிருவாகத்துறையைச் சேர்ந்த அதிகாரிகளால் அனுமதிக்கப்பட்டுள்ள நேரசூசிக்கு அமைய கருமங்கள் ஆற்றப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்படும் அதே வேளை "கருமங்கள் எவ்வாறாக ஆற்றப்படவேண்டும் என்பது தொடர்பான அறிவுறுத்தல்கள் ஆசிரியர்களுக்கு கிடைக்கப்பெறுவதில்லை. ஒவ்வொரு வகுப்பிலும் வேலைகள் தனித்தனியே நிறைவேற்றப்படல் வேண்டும் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது. எனினும் இது ஒருபோதும் நடைபெறுவது கிடையாது.

பாடத்திட்டச் செயற்பாடு ஒரு பொறிமுறைக்குட்பட்ட செயற்பாடாகவே கருதப்பட்டு வருகின்றது. இந்நிலையில் சூழல், அகவய, புறவயக் காரணி அதன் செயற்பாட்டின் விளைவு, பொருத்தப்பாடு

ஆகியன கருத்திற்கொள்ளப்படுவதில்லை. இது பாடத்திட்டம் சார்ந்த பெரும் பிரச்சனையாகும். ஆரம்பக்கல்வி புலமைப்பரிசிலைக் கருத்தில் கொண்டு கணிதம், தமிழ் பாடத்திட்டத்திலேயே கருத்துக்கொள்ளப்படுகின்றது. ஆசிரியர்கள் ஏனைய பாடப்பரப்புக்களில் கவனஞ்செலுத்தாது விடுவதுடன் அவர்களுக்கு நேரமும் கிடையாது என்கின்றனர்.

அனுபவம் வாய்ந்த ஆசிரியர்களது சேவையை இப்பாடத்திட்ட செயற்பாட்டில் பெறமுடியாது. இப்பகுதிக்கு புதிய ஆசிரியர்களே நியமிக்கப்பட்டு வருகின்றார்கள். அவர்கள் பாடத்திட்டப் பிரயோகம் சம்பந்தமாக போதியளவு அனுபவமற்றவர்கள். இவர்களுக்கு பல்தரக் கற்பித்தல் அனுபவம் குறைவு. கற்பித்தாலும் கூட பாடத்திட்டத்திற்குரிய விடயப்பகுதிகளைக் கற்பித்து முடிக்க இயலாமல் இடர்ப்படுகின்றனர்.

கிராமப் பாடசாலைகளில் மீத்திறன் மாணவர்களையும், மெல்லக் கற்போரையும் ஒன்றாக வைத்தே பாடத்திட்டம் நடைபெறுகின்றது. இவர்களைக் குழுப்படுத்த வேண்டும். ஆசிரியர்கள் எல்லாப் பாடங்களுக்கும் குறிப்பு எழுதவேண்டிய இடர்ப்பாட்டுக்கும் உள்ளாகியுள்ளனர். இவர்கள் ஓர் இருவர் கடமையாற்றுவதால் லீவு எடுக்க முடியாமலும், லீவு எடுப்பதானால் முறையான பாடத்திட்டப் பிரயோகம் நடைபெறாது போவது மட்டும் அல்லாமல் கற்பித்தலும் முறையாக நடைபெறுகின்றதெனக் கூற முடியாது.

"இங்கு ஆசிரியர்களால் அமுல்படுத்தப்படும் கலைத்திட்டத்திற்கு பெற்றோர்களது ஆதரவு கிடைப்பதில்லை. அவர்கள் விவசாயப் பாடத்தில்கூடுதலாக செய்முறையிலேயே கூடிய நம்பிக்கை வைத்திருக்கின்றனர்."

எந்த ஒரு கலைத்திட்ட அமுலாக்கத்திற்கும், பெற்றோர்களது ஆதரவு அவசியம். அவர்களது பின்னூட்டல், தொடர் நடவடிக்கை வேண்டியதாக உள்ளது.

"நகரத்தின் கலைத்திட்டத்தை கிராமத்திலும் பின்பற்றுதல் ஒரு முக்கியமான பிரச்சினையாகும். கிராம விஞ்ஞானம், கிராம விவசாயம்,

செய்முறை கொண்ட கலைத்திட்டமே செயற்படுத்த வேண்டும். கிராம மூலப்பொருட்கள் அடங்கிய கிராம விஞ்ஞான கலைத்திட்டம் அவசியம். கிராம ஆசிரியர் பயிற்சி கலாசாலை நிறுவப்பட வேண்டும். கிராமத்திற்காய விஷேட ஆசிரியர் கலைத்திட்டமும் அறிமுகப்படுத்தப்பட வேண்டும்."

கிராமத்தை மையமாக கொண்ட கலைத்திட்டம் அமுல் நடத்தப்படாமையே கிராமத்தை ஒட்டிய கல்விப் பிரச்சனைகளுக்கு இங்கு மூலகாரணமாக கூறப்படுகின்றது. கிராம அபிவிருத்தியானது, கிராம சமூகத்தை, கிராம பொருளாதாரத்தை, கிராம மூளவளத்தைக் கருப்பொருளாகக் கொள்ளாத நிலையில் கலைத்திட்ட அமுலாக்கலே கிராமம் சார் ஆரம்ப கல்விப் பிரச்சினைகளுக்குக் காரணம் என்பது வெளிப்படுத்தப்படுகின்றது.

**ஆரம்பக்கல்வியும் மாணவர் சமூகமளிக்காமையும்.**

கிராமத்தைச் சூழ்ந்த மாணவர்கள் எதிர்நோக்கும் இன்னோர் பிரச்சினை தொடர்ச்சியாக பாடசாலைக்குச் சமூகமளிக்க முடியாமையாகும். இதற்குப் பல்வேறு காரணிகள் காரணமாக அமைகின்றன. எல்லாவற்றிற்கும் அடிப்படையாக பொருளாதாரக் காரணியே காரணமாக அமைகின்றது. அவர்களது பெற்றோர் கல்விப் பெறுமானத்தை உணராது தமது வறுமையினால் பிள்ளைகளை பாடசாலைக்கு அனுப்பத் தவறிவிடுகின்றனர். தாங்கள் தொழிலுக்குச் செல்லும் போது தம்முடன் வளர்ந்த குழந்தைகளைக் கூட்டிச்செல்வர். அல்லது இளைய பிள்ளைகளை பராமரிக்க மூத்தவர்களை வீட்டில் விட்டுச்செல்வர்.

இங்கு பிள்ளைகள் தகுந்த போசாக்கின்மையாலும், சுகாதார நலன் பேணப்படாமையாலும் அடிக்கடி நோய்வாய்ப்படுவர். நோய்வாயப் பட்டாலும் அதற்கு நிவாரணம் தேடக்கூடிய மருந்து இல்லை. இங்கு அடிக்கடி மக்களை வாட்டும் நோய் மலேரியா நோயாகும். இந்நோய் கிராமப்புறப் பகுதிகளில் அடிக்கடி ஏற்படுவதொன்றாகும். அத்துடன் சாதாரணமாக வரும் சின்னமுத்து, கொப்புளிப்பான், அம்மை நோய், கூகைக்கட்டு போன்ற நோய்களுக்குரிய தடுப்பு மருந்து ஆகியவற்றைப்

பெறாததாலும் நோய்வாய்ப்பட்டு பாடசாலைக்கு தொடர்ச்சியாக வராதுள்ளனர்.

பாடசாலையில் மாணவர்களது உளத்தேவையும், உளநிலையும் அறியாது ஊட்டப்படும் கல்வி அவர்களைப் பாடசாலையில் வெறுப்படையச் செய்கின்றது. "பிரச்சினைகளுடன் கூடிய பாடங்களின் பால் மாணவரின் விருப்பும், ஆர்வமும் குறைவாகக் காணப்படும். அவர்களுக்கு அப்பாடத்தில் படிப்படியாக வெறுப்பு ஏற்படும். பாடத்தில் வெறுப்பு ஏற்படின் பாடசாலைக்கு சமூகமளிப்பதிலும் ஆர்வம் குறைவடையும். பாடசாலை தொடர்பாக உவப்பற்ற மனப்பாங்குகளும் விருத்தியடையும். இறுதியாக அவர்கள் பாடசாலையை விட்டு விலகிச்செல்கின்றனர்.

மாணவர்கள் பாடசாலைக்கு விரும்பி வரக்கூடிய உவப்பான சூழலை ஆசிரியர்கள், அதிபர்கள் ஆக்கிக் கொள்ள வேண்டும். இதற்கு அவனது நிலையை நன்கறிந்து அவனை ஊக்குவிக்கக்கூடிய கல்வி அளிக்கப்பட வேண்டும்.

கூடுதலான மாணவர்கள் தொடர்ச்சியாக சமூகமளிக்காமைக்கு போக்குவரத்து கஷ்டமும் காரணமாக அமைகின்றது. கிராமப் பகுதிகளில் மாணவர்கள் ஐந்து அல்லது ஆறு மைலுக்கு கூடுதலான தூரத்தைப் போக்குவரத்து வசதியின்மையால் தினமும் நடந்து சென்றே பாடசாலையை அடையவேண்டியுள்ளது. போஷாக்கின்மையால் உடல் மெலிவுற்று, நலிவுற்ற மாணவர்கள் தினமும் நடந்து செல்ல கஷ்டப்பட்டும் பாடசாலைக்கு செல்லாது விடுகின்றனர். அத்துடன் பருவமழைக் காலங்களிலோ அல்லது கடும் வெயில் காலங்களிலோ உவப்பற்ற வானிலை காரணமாகவும் வராது விடுகின்றனர். மாரிகாலங்களில் மழையில் இருந்து தம்மைப் பாதுகாக்கச் சிறு குடைதானும் வாங்கிக் கொடுக்க முடியாத நிலை. மாரிகாலங்களில் யானை போன்ற காட்டு மிருகங்களின் அச்சுறுத்தலும் அதிகம்.

எல்லாவற்றுக்கும் கல்வி பற்றியும், பாடசாலைக்கு பிள்ளைகளை அனுப்பாமல் விடின் ஏற்படும் விளைவு பற்றியும் பெற்றோர் அறியாமை காரணமாகின்றது. அதன் பலாபலனை சிறிதும் சிந்திப்பது கிடையாது. தமது பிள்ளைகள் அன்றாடம் கல்விகற்றுச் சமூகத்தில் மேம்பட வேண்டும்

என்றோ அறியாதுள்ளனர். பெற்றோர்கள் கல்வியில் ஆர்வமின்மையும், பெரும் பாதிப்பை ஏற்படுத்துகின்றது. பெற்றோரது இப்போக்கினால் மாணவர்கள் பாடசாலைக்குத் தொடர்ச்சியாக சமூகமளிக்காது விட்டுவிடுகின்றனர். அதனைப்பற்றி அக்கறைப்படாத அதிபர், ஆசிரியர்களது போக்கும் அவற்றுக்கு உதவியாக அமைகின்றது.

**குழுக்கற்கை**

வகுப்பிலே கற்கைக்கு உட்படும் மாணவர்களை ஆசிரியர்கள் அவர்களது அறிவுமட்டத்திற்கேற்ப இனம் காண வேண்டும். மீத்திறன் மாணவர்கள், பின்னடைவு மாணவர்கள், மெல்லக்கற்போர் யார்? யார்? என இனம் கண்டு கொள்ளலாம்.

இவ்வாறு இனம் கண்டு குழுக்களாக வகுத்துக் கற்பிக்காமையால் ஆசிரியர்களுக்குப் பல பிரச்சினைகள் ஏற்படுவதுடன் மாணவர்களது கற்கை நிலையிலும் பாரிய பாதிப்பு ஏற்படுகின்றது. அறிவும், திறனும் கூடிய மாணவர்கள் பாடவிடயத்தைக் கூடுதலாகக் கிரகித்து வேகமாகக் கற்றுக்கொண்டு செல்லும் பொழுது அறிவும், திறனும் குறைந்த மாணவர்கள் அவர்களுடன் ஒத்துப்போகாது கஷ்டமுறுகின்றனர். இதனால் அவர்களுக்குத் தாழ்வு உளவியற்தன்மை ஏற்பட்டுக் கல்வியில் வெறுப்படைகின்றனர். இதனால் அவ்வகுப்பின் பொதுமட்ட அடைவுத்திறனில் அவன் பின்நிற்கின்றான்.

"தற்போது எமது பாடசாலைகளில் மாணவர்கள் ஆண்டு வாரியாக வகுக்கப்பட்டுள்ளனர். ஒரு வகுப்பைச் சேர்ந்த பிள்ளைகளை ஒரு குறிப்பிட்ட குழுவினர் எனக்கருதலாம். எனினும் இப்பிள்ளைகளிடையே வெவ்வேறு மட்டங்களைச் சேர்ந்தவர்கள் அடங்கியுள்ளனர். பிள்ளைகளின் இவ்வேறுபாடுகளைக் கவனத்திற் கொண்டு அவர்களைக் கணித எண்ணக்கரு மட்டங்களுக்கு அமையக் குழுக்களாக வகுக்கலாம். திறமை மட்டங்களுக்கு அமைய மாணவர்களைக் குழுக்களாக வகுக்கும் போது பல வகுப்புக்களில் கற்கும் மாணவர்கள் ஒரு குழுவில் இடம்பெறுவர். ஒரு குழுவிலிருக்கும் மாணவர்கள் உத்தேச மட்டத்தை அடைந்த பின்னர் அவர்களை அடுத்த குழுவிற்கு மாற்றுதல் வேண்டும். இவ்வாறாகக் குழுக்கற்பித்தல் முறை பின்பின்பற்றப்படுவதாயின் கூடுதலான உதவி

தேவைப்படும். மாணவரின் பால் ஆசிரியரின் கூடிய கவனஞ்செலுத்தமுடியும்."

"ஒழுங்கமைக்கப்பட்ட வேலைத்திட்டம் செயற்படுத்தப்படாமையானது, மீத்திறன் மாணவர்களுக்கும், பின்னிற்கும் மாணவர்களுக்கும் பிரதிகூலமானதாக அமைகின்றது. இவ்வாறான பாடங்களில் நேரம் வீண்விரயமாவதைப் பெரும்பாலான சந்தர்பங்களில் காணமுடிகின்றது.

இத்தகைய விளக்கம் எமக்குத்தரும் நியாயம் என்னவெனில் அறிவுக்கும், திறனுக்கும் ஏற்ப மாணவர்களைக் குழுக்களாக வகுத்துக்கற்பிக்க வேண்டும் என்பதே. இதைத் தவற விடுகின்ற காரணத்தினால் பெரும்பாலான பாடசாலைகளில் ஆசிரிய மாணவர்களது நேரம் வீண் விரயமாகி நல்ல வெளியீட்டைப் பெற முடியாது போகின்றது.

### கற்றல் கற்பித்தல் நடவடிக்கைகளில் சமூகத்தை ஈடுபடுத்தல்

கற்றல் கற்பித்தல் நடவடிக்கை என்பது ஓர் இணைந்த நடவடிக்கையாகவே அமைகின்றது. பாடசாலையும் சமூகமும் இணைந்தே கற்றல் கற்பித்தலை விருத்தியாக்க முடியும். இன்று வகுப்பில் கற்கும் மாணவன் கற்கை முடிந்ததும், சமூகத்தில் வீட்டை நோக்கிச் செல்கின்றான். அங்கு அவனது கற்கை சமூக, வீட்டு அகவயக்காரணிகளின் தாக்கத்திற்குட்பட்டு பின்பு பாடசாலைக்கு மீளளிக்கப்படுகின்றது. பாடசாலை அதனை வளப்படுத்தி, மீள உருவாக்கி அனுப்புகின்றது. ஆதலால் பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், வீட்டுப் பெற்றோர், சமூகத்தில் உள்ளோர் மாணவரது கற்றலுக்கும், ஆசிரியரது கற்பித்தலுக்கும் பின்னூட்டல் தொடர் நடவடிக்கையில் ஈடுபட வேண்டும். இது ஓர் கிடைரீதியான கூட்டு நடவடிக்கை.

இத்தகைய நடவடிக்கை பற்றிக் கொள்கை ரீதியாக எடுத்துக் கூறப்படுகின்றதே ஒழிய, நடைமுறைரீதியாக செயற்படுத்துகின்ற செயற்பாடு குறைவாகவே காணப்படுகின்றது. இதற்கு ஆசிரிய, அதிபர், பெற்றோரிடையே புரிந்துணர்வு இல்லாத தன்மையே காரணமாக அறியப்படுகிறது.

கிராமத்தவர்களது கல்வி ஆரம்பக்கல்விக்கு மாத்திரம் வரையறைக்கு உட்பட்டதாக இருந்தாலும் அவர்களிடம் பல்வேறு திறன்களையும் கொண்டவர்கள் உள்ளனர். இவர்களது திறன்களாலும், ஆற்றலையும், கற்றல், கற்பித்தல் நடவடிக்கையில் ஈடுபடுத்தவேண்டும். அவர்களது ஆற்றல், திறன்கள் பாடசாலை முகாமையாளர்களால் இனங்கண்டு கொள்ளப்படுவதில்லை. இனங்கண்டு கொள்வதன் மூலம் கற்பித்தல் செயற்பாட்டிற்கு அவர்களது துணையையும் நாடிக்கொள்ளலாம். ஆனால் இவர்கள் கணிக்கப்பட்டு பாடசாலைக்கு அழைக்கப்படுவதில்லை. இவர்களைப் பகுதிநேர ரீதியில் கற்பித்தல் செயற்பாட்டில் ஈடுபடுத்துவதன் மூலம் ஆசிரிய வளம் குறைந்த இக்காலத்தில் சில பாடங்களின் போதனை இன்மையை நிவர்த்தி செய்யலாம்.

சமூகத்தில் நல்ல இயல், இசை, சித்திரவல்லுனர்கள் திறன்படைத்து இருப்பர். இவர்களைக் கற்பித்தல் கருமங்களில் ஈடுபடுத்தும் பொழுது அவர்கள் தங்களுக்கு ஒரு கணிப்புக் கிடைப்பதாகவும், அதனால் ஊக்குவிக்கப்பட்டு,

ஆர்வப்பட்டுத் தமது அழகியல் ஆற்றல்களை மாணவர்களுக்கு கற்பித்து கொடுப்பர். இத்தகைய மனித வளங்கள் சமூகத்தில் பயன்படுத்தப்படாது வீணடிக்கப்படுவது சமகாலத்தில் கல்வியில் பாரிய விளைவை ஏற்படுத்தும்

பல் தரப்பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர் பற்றாக்குறைக்கானதொரு தீர்வாக சமூகத்தினரின் துணையைப் பெற்றுக் கொள்ள உதவும் அவ்வாறான வேலைத்திட்டங்களை நடைமுறைப் படுத்துதல் பொருத்தமற்றதென யாரும் கருதமாட்டார்களல்லவா? இவ்வாறான வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்து முன்னர் பாடசாலைக்கும் சமூகத்துக்கும் இடையிலான அந்நியோன்னிய ஒத்துழைப்பை விருத்தி செய்து கொள்ளல் மிக முக்கியமானதாகும்.

சமூகத்தில் உள்ளவர்களின் ஆற்றல் படைத்த மனிதவள உச்சப்பயனைப் பெற இத்தகைய நிலைவாய்ப்பளிக்கும சமூகத்தவர்கள் தங்களின் பிள்ளைகளது அல்லது ஆசிரியர், அதிபர்களது உண்மையான நிலையைக் கண்டறிய வாய்ப்புக் கிட்டும். கண்டறிந்த பின் உதவும் சூழ்நிலை உருவாகும்.

**சமூகத்தவர்களது உதவி**

சமூகத்தவர்களது பாடசாலையே பள்ளிக்கூடம். இந்த அடிப்படையில் சமூகத்தவர்களை அணுகி அவர்களது உதவியை பாடசாலை வளர்ச்சிக்கு பெற்றுக் கொள்வது அதிபர், ஆசிரியர்களது கடமையாகும்.

சமூகத்தவர்களுடன் பாடசாலை நிர்வாகம் கூடிய தொடர்பாடலை வைத்துக்கொள்ள வேண்டும். இத்தகைய தொடர்பாடல் ஊடாகப் பாடசாலைக்கு வேண்டிய சகல உதவிகளையும் பெற்றுக் கொடுக்க வாய்ப்புக் கிட்டும். பாடசாலை முன்னேற்றம், அபிவிருத்தி கருதும் நல்ல அதிபர் சமூகத்தவர்களது இன்ப, துன்ப நிகழ்வுகள், எதிலும் கலந்து கொள்ளத் தவறுவதில்லை.

சமூகத்தவர்கள் பொருள் உதவியைத் தங்களால் கொடுத்துதவ முடியாவிட்டாலும் சரீர உதவியைக் கொடுக்க முன் வருவர். இப்பகுதி பாடசாலைகளில் கூடுதலான சிரமதானத்தையும், சரீர உழைப்பையும் மக்களிடம் இருந்து பெற்று கொள்ளலாம். பாடசாலை நிர்வாகம் அவர்களை திட்டமிட்டு ஒழுங்குபடுத்தினால் அவர்கள் குழுரீதியாகத் தம்மை வகுத்துக் கொண்டு வேலைகளைப் பகிர்ந்து நிறைவேற்றிக் கொள்வர்.

உதாரணமாக விளையாட்டுத்திடல் அமைத்தல், கட்டிடங்களுக்கு வெள்ளை அடித்தல், கட்டிடங்கள் கட்டுதல், மரம் போடுதல், கூரை வேய்தல் ஆகிய வேலைகளை சிரமதான அடிப்படையில் நிறைவேற்றிக்கொள்ளலாம். இதற்குப் பாடசாலை நிர்வாகம் திணைக்களத்திலோ, அரசாங்க அதிபரிடம் இருந்தோ இச்சிரமதானப் பணியை முன்வைத்து கூடுதலான நிதியைப் பெற்றுக் கொடுத்து சமுகத்தவர்களை ஊக்குவிக்க வேண்டும். இத்தகைய நிலையில் சமுகத்தவர்களது உதவி பயன்படாவிட்டால் சமுகக்கல்வி அபிவிருத்திக்கும் சமுகவளம் புறக்கணிக்கபபட்டு, வேறு எவரும் கைகொடுத்து உதவமுடியாத நிலை ஏற்படும்.

இவர்களது உதவி பயன்படுத்தப்படாது விட்டால் அவர்களது திறன்கள் வீணடிக்கப்படும். அவர்களது ஓய்வு நேரங்கள் பாடசாலைச் செயற்பாட்டிற்குப் பயன்படுத்தப்படாது போகும். நல்ல பாடகர்களைப் பயன்படுத்தாவிட்டால், கிராமியப் பாடல்பாடும் வளமுடையோர் வீணடிக்கப்படுவர். நல்ல பாடல்கள், வெளிக்கொணர முடியாது போய்விடும்.

சிறுசிறு கைத்திறனுடையவர்களது அனுபவங்களைப் பாட்சாலைச் சமூகம் பயன்படுத்த முடியாது போகும். சமூகத்தில் உள்ள சிறுகைத்தொழிலை வீட்டிலும், பாடசாலையிலும் இணைந்து விருத்தியாக்க முடியாத நிலை உருவாகிவிடும்.

சமூகத்தில் பல்வேறு தொழிலாளர்கள் உளர். சிற்பி, மரவேலை செய்வோர், மேசன், மீனவர், தோட்டத் தொழிலாளர் ஆகியோரைப் பாடசாலைக்கு அழைத்து, பாடசாலை மாணவர்களுக்கு இத் தொழில்களை அறிமுகமாக்க வேண்டும். சமூகத்தில் செயன்முறைக் கல்வியையும், பாடசாலையில் போதனா கல்வியையும் இணைத்துத் திறனை மேம்படுத்த சந்தர்ப்பம் உருவாக்கப்படுகின்றது.

சமூகத்தில் உள்ள கற்றறிந்தவர்கள் அதிகாரிகளை ஈடுபடுத்துவதனூடாக அவர்களது அனுபவங்கள், புத்திக் கூர்மையைப் பாடசாலைக்குப் பயன்படுத்தலாம். இவ்வதிகாரிகளைப் பயன்படுத்தாவிட்டால் அவர்கள் பல்வேறு துறைகளில் பெற்றுக் கொண்ட அனுபவம், ஆற்றல் வீணடிக்கப்படுகின்றது. ஆகவே சமூகத்தவர்களது உதவி பயன் பெறாமை பாடசாலைச் செயற்பாட்டில் பாரிய விளைவை ஏற்படுத்தும்.

வீட்டில் தாய்மாருக்கு உணவுப்பாத்திரங்களைத் திறந்து வைப்பதால் ஏற்படும் தீமைகளை உணர்த்தி அதற்கு நீங்கள் எவ்வாறு உதவ முடியும்.

நித்திரைக்குப் போகும் முன் எவ்வாறு உடலை சுத்தப்படுத்த வேண்டும். அதற்கான நிலையை எவ்வாறு உருவாக்குதல், தலையை நாள்தோறும் சுத்திகரித்துச் சீவுதல், போன்றவற்றை அன்றாட சுகாதாரச்

செயற்திட்டமாக முன் வைக்கவேண்டும். இவற்றைச் சாதாரணமாக நடைபெறும் வேலைகள் என்று கூறி வேலைத்திட்டம் உருவாக்கப்படாமல் விடுவதனால் அப்பழக்கம் வலியுறுத்தப்படாது போய்விடுகின்றது.

போஷணைக்கல்விச் செயற்திட்டம் இலைக்கஞ்சி மூலம் அறிமுகமாக்கப்பட்ட போதும் அது கைவிடப்பட்டுள்ளது. மாணவர்கள் பால், பழம், தேன், தானியம், கிழங்கு, முட்டை ஆகியவற்றை அருந்துவதன் மூலம் இயற்கையான போஷணைச் சத்தைப் பெற்றுக்கொள்ளலாம் என்பதும் செயற்திட்டம் மூலம் முன்வைக்கப்பட வேண்டும். ஆனால் நடைமுறையில் எவ்வளவு கூறினாலும் பாடசாலையில் அதிபர், ஆசிரியர்கள் இதற்கு முக்கியத்துவம் கொடுக்கத்தவறுகின்றனர்.

பள்ளிக்கூடங்களில் சுகாதார சேவை வழங்கப்படுவதில் ஒழுங்கின்மை காணப்படுகின்றது. அநேகமான கிராமப்பாடசாலைகளில் மாணவர்களின் தொகைக் கணிப்பீட்டுக்கு நிதிக்கோவை பணமொதுக்க இடமளிக்கிறது. ஆனால் அவை வழங்கப்படுவதில்லை.

I. ஆரம்பக்கல்வி : 1. ஆரம்பக்கல்வியென்னும் அத்திவாரம்
2. ஆரம்பக்கல்வியியல் ஆசிரியர்
3. ஆரம்பக்கல்வி ஆசிரிய பயிற்சி
4. ஆரம்பக்கல்வி ஆசிரியத்துவம்
5. ஆரம்பக்கல்வியில் பெற்றோர்

II. ஆரம்பக்கல்விப் பிரச்சினைகள்

1. (ஆரம்பக்கல்வி கற்பிக்கும்) ஆசிரியரின்மை.
2. (ஆரம்பக்கல்வி) உபகரணங்களின்மை
3. பலதரக்கற்பித்தல்
4. தாய்மொழியும் கணிதமும்
5. சுகாதாரமும் போசனையும்
6. சுற்றாடல் வளமுகாமை
7. கிராமப் காடசாலை அதிபர் முகாமைத்துவம்

III. ஆரம்பக்கல்வியில் பொருளாதாரம்

IV. ஆரம்பக்கல்வியுடன் சமூகம்

V. ஆரம்பக்கல்வியுடன் கலாச்சாரம்

VI. ஆரம்பக்கல்விப் பின்னடைவு - மெல்லக் கற்போர்

VII. ஆரம்பக்கல்விப் பாடத்திட்டம்

VIII. ஆரம்பக்கல்வி மாணவர்

IX. குழுக் கற்கை

X. கற்றல் கற்பித்தலுடன் சமூகம்

XI. ஆரம்பப் பிரிவினர்க்குப் பொருத்தமான கற்பித்தல் முறைகள்

XII. கல்விச் சிந்தனையாளர்கள் சிலரின் ஆரம்பக் கல்விபற்றிய கருத்து

## 1 ஆரம்ப வகுப்பறையும் வளப்பிரயோகமும்

நவீன தொழில் நுட்ப முன்னேற்றங்களுடன் மாறி வருகின்ற புதிய உலகில். தேவைகளும் அதிகரித்து வருகின்றன. எத்துறையை ஆழ்ந்து நோக்கினாலும் ஏதோ ஒரு வகையில் அவை பல கிளைகளாகப் பிரிந்து தமக்கே உரித்தான முறையில் தேவைகளுக்கேற்ப அவை பரிணமிக்கின்றன. இவ்வாறு உருவாகும் நவீன உலகிற்கு தகுந்தபடி வாழக்கூடியவர்கள் நல் ஆளுமை கொண்ட நற்பிரஜைகள். இவ்வாறானவர்கள் உருவாகுவதன் அவசியமும் இன்று உணரப்பட்டுள்ளது.

ஒரு நற்பிரஜையை உருவாக்கி அவனை நாட்டிற்கு வழங்கும் பொறுப்பு பாடசாலையையும் பெற்றோரையுமே சார்ந்துள்ளது. பாடசாலை என்ன செய்கின்றது என நாம் எடுத்து நோக்கினால் மாணவனை பின்னர் நாட்டின் பிரஜையாக உருவாகப் போகின்றவனை நல்ல உடல், உளக்கூறுகளுடன் கட்டியெழுப்பி கல்வியில் தெளிவுடைய ஒருவனாகவும். தொழிலில் ஈடுபடக்கூடிய தகுதியுடையவனாகவும் வெளியனுப்புகின்றது. பெற்றோரின் அன்பும், காப்பும் தேவைகள் நிறைவேற்றல் போன்ற உதவிகளும் பெரும் பங்களிப்பினை செய்கின்றன. நற்பிரஜை உருவாக்கத்திற்கு பெற்றோரும், பாடசாலையும் பங்களிப்புச் செய்வதில் சமத்துவமுடையவர்களாகக் காணப்படுகின்றனர்.

பாடசாலையில் ஆரம்பத்தில் வழங்கப்படுகின்ற கல்வியே உறுதி கொண்ட அத்திவாரக் கல்வியாகக் காணப்படுகின்றது. வீட்டுச்சூழலிருந்தும், முன்பள்ளியிலிருந்தும் நேராகப் பாடசாலை வரும் குழந்தை அங்கு தனக்கு அன்பு, காப்பு, அரவணைப்பு போன்ற தேவைகளுடன் தாம் விரும்பிக் கற்பதற்கு நல்லதொரு சூழலையும் எதிர்பார்க்கின்றது. தான் முன்னரே கண்டறிந்த இயற்கையின் வனப்புகளையும், விலங்கினங்களின் இன்னிசை, உருவமைப்பு போன்றவற்றையும் நல்ல காற்றோட்டமுள்ள, இடவசதி கொண்ட இருக்கை அமைப்புகளையும் நல்ல நண்பர்கள், நல் ஆசான் ஆகியோரையும் எதிர்பார்த்தே ஒரு குழந்தை ஆரம்பப்பாடசாலையில் காலடி எடுத்து வைக்கிறது.

ஆரம்ப வகுப்பறையானது சிறைக்கூடமாக அமையாது உள்ளத்தை உவகை நிலையில் வைத்து, கற்றலுக்கேற்ற சூழ்நிலையை பெறும் வகையில் அமைக்கப்படுதல் ஓர் ஆரம்பமாகும். ஆசிரியை பாடத்தை தொடங்குவதற்கு முன்னர் வகுப்பறையில் காணப்படவேண்டிய அடிப்படைத் தேவைகள் அனைத்தும் பூரணமாகக் காணப்படுகின்றதா? என ஆராய்தல் அத்தியாவசியமாகும்.

வெறுமனே கரும்பலகை, இருக்கைகள், மேசைகள் மட்டும் கொண்டதாக வகுப்பறை காணப்படல் கூடாது. ஆரம்பப்பிரிவில் ஆண்டு 1, 2, 3 பிரிவுகளின் வகுப்பறையானது கற்பித்தல் சாதனங்கள், உருக்கள், வரைபடங்கள, சுவர்ச்சித்திரங்கள், முப்பரிமாணப் பொருட்கள், சுற்றாடற்பலகை, அலுமாரி, அலங்காரவேலைப்பாடுகள் குழு வேலைகளுக்கேற்றவாறான இடவசதி, காற்றோட்டம், நல்ல வெளிச்சம் கூடிய வகையில் அமைக்கப்படுதல் அவசியம்.

ஒரு பாடத்தை கற்பிக்க முனையும் போது முதலில் ஆசிரியை மாணவனுக்கு தெரிந்த விடயத்திலிருந்து எண்ணக்கருவை கட்டியெழுப்புதல் வேண்டும். உதாரணமாக நிறங்கள் என்னும் பாடத்தை கற்பிக்க எடுக்கும் பொழுது மாணவன் தானறிந்த நிறங்களை கூற வழிப்படுத்தல் வேண்டும். அதன் பின்னரே ஆசிரியை மிகுதியை தெளிவுபடுத்தல் வேண்டும். அவ்வாறு நிறங்கள் விளங்கவைக்கும் போது இயற்கையுடன் கூடியதாக தொடர்புகளை ஏற்படுத்தி செல்ல வேண்டும். இலை, சீருடை, போன்ற அண்மியபொருட்களுடன் மாணவனை ஈடுபடுத்திப் பாடக்கருவிருத்திக்கு இட்டுச் செல்லல் வேண்டும்.

வளப்பிரயோகத்தில் நாம் முக்கியமாகக் கையாளும் சாதனம் பாடக்கருவுடன் இணைந்ததாகக் காணப்படுகின்றதா? எனத் தெளிவுபெறல் வேண்டும். பயன்படுத்தப்படும் வளமானது அனைத்து மாணவராலும் கையாளப் படுகின்றதா? அல்லது ஒரு குழுவினரிடம் மாத்திரம் தங்கி விடுகிறதா என ஆசிரியர் நோக்குதல் வேண்டும். மாணவ குழுக்களை பிரிக்கும் பொழுது அறிவு மட்டம் கூடிய மாணவன் , அறிவில் பின்னடைவான மாணவனை இனம் கண்டு, அவர்களை கலந்து ஒவ்வொரு குழுவிலும் இரு தரத்தினரும் இடம் பெறும் வண்ணம் குழுக்கள் பிரிக்கப்படல் வேண்டும்.

வகுப்பறையிலுள்ள மாணவர் யாவரும் தெளிவாக நோக்கும் வகையில் கரும்பலகை காணப்படல் வேண்டும். மாணவன் கற்பித்தற் சாதனங்களை தான் கையாண்டு தொட்டுணர்ந்து செயலாற்றும் பொழுது அவற்றை நினைவிற் கொள்ள தலைப்படுகின்றான். உதாரணம் நிறை என்னும் கணித எண்ணக்கருவை நாம் எடுத்தால் வகுப்பறையில் ஒவ்வொரு மாணவரையும் தராசு (சிரட்டை, தகரமூடி, தேசிக்காய் ) கொண்டுவரச் செய்து அவற்றில் கற்களையும் சிறு பொருட்களையும் இட்டு அளக்கச் செய்வதன் மூலம் மாணவன் நிறை அல்லது பாரம்கூடிய, குறைந்த பொருட்களை அறிய முயல்கின்றான். இச் செயற்பாட்டில் ஆசிரியர் ஒவ்வொரு குழுவிற்கும் சென்று அதனை செய்து காட்டி மாணவர்கள் செய்துணர வழிப்படுதல் வேண்டும்.

வகுப்பறையில் மாணவர் தாம் கற்கும் ஒவ்வொரு பாடஅலகையும் சூழலுடன் ஒப்பிட்டறிய ஆசிரியர் தூண்டுதல் அவசியமாகும். இதன் மூலமே பிள்ளைகள் தர்க்கரீதியில் சிந்தித்து விடை கண்டு அடைவுமட்டத்தை பெறுகின்றனர். ஆசிரியர் என்பவர் வெறுமனே தொழில் ரீதியில் செயற்படாமல் மாணவனின் தரத்திற்கு இறங்கி வந்து அவர்களுடன் நட்பு அடிப்படையிலும், பாச அடிப்படையிலும் இசையச் செய்து கல்வி புகட்டுவதில் முனைவாராயின் புத்திஜீவிகள் உருவாகுவதில் சந்தேகமில்லை. அன்புடன் கூடிய கட்டுப்பாடுடன் ஒரு ஆசிரியர் பாடம் புகட்டுவராயின் மாணவர்களின் தரமும் உயர்ந்து செல்லும்.

எனவே ஒரு ஆரம்ப ஆசிரியை தாயாக, தாதியாக, நண்பனாக, ஆலோசனை வழங்குபவராக,வழிகாட்டியாக,சிந்தனையை தூண்டுபவராக, போதியளவு சாதனங்களை கையாள்பவராகக் காணப்பட்டால் மாணவசமூகம் நல்லதொரு அமைப்பில் கட்டியெழுப்பப்பட்டு நாட்டின் நாளைய அமைப்பில் நற்பிரஜைகள் பலர் உருவாகுவர் என நாம் திடமாக உணரலாம்.

## II வகுப்பறையும் தொடர்பாடலும்

தொடர்பாடல் அனைத்தும் கற்பித்தலாக இருக்கமாட்டாது. ஆனால் கற்பித்தல் அனைத்துமே தொடர்பாடலாகும். குறியீடு என்பது தகவலை தெரியப்படுத்துவதற்கு தொழில்சார்ந்த மொழிசாராதவைகளை குறியீடு குறீக்கும். ஆசிரியர் வகுப்பில் கற்பிக்கும் போது குறியீடுகளைப் பயன்படுத்துவதில் தெளிவைப் பேணுதல் வேண்டும். சிறந்த கற்பித்தலானது இருவழித் தொடர்பாடலாகத் அமைதல் வேண்டும். இவற்றுடன் பின்னூட்டல் கட்டாயமாகப் பேணப்படல் வேண்டும்.

### தொடர்பாடலும் கற்பித்தலும்

தொடர்பாடல் செய்தியை மட்டும் அறிவிக்கும். ஆனால் கற்பித்தல் இத்துடன் மாணவர்க்கு மாற்றத்தையும் ஏற்படுத்தும். அனைத்து கற்பித்தலிலும் தொடர்பாடல் உண்டு. இவை இரண்டிலும் இருவழி காணப்படும். இங்கு அனுப்பினர் தகவலை குறியீடாகப்பயன்படுத்தி ஊடகத்தின் முலம் அனுப்புகின்றார். இங்கு கற்பித்தலின் ஊடகம் என்பது விரிவுரை, கலந்துரையாடல், செயல்முறை, நாடகம், நடிப்பு ஆகிய முறைகள் அமைகின்றன. குறியீட்டை அல்லது மொழியை பயன்படுத்தும் போது மிகவும் பொருத்தமாகவும் தெளிவாகவும் பெறுனருக்கு அனுப்புதல் வேண்டும். சிறந்த தகவல் ஊடகத்தின் ஊடாக தகவல் சொல்லும் போது பெறுனர் மீளவலியுறுத்தல் பெறவேண்டிய அவசியம் இருக்காது. ஆனால் சத்தம் இடையூறாக இருக்கும்.

### வகுப்பறையில் தொடர்பாடல் தடைகள்

1. ஆசிரியர் பயன்படுத்தும் மொழி செம்மையாக வெளிப்படாதிருத்தல்.
2. சொற்களை பயன்படுத்துவதில் பொருத்தப்பாடு இன்மை.
3. ஆசிரியர் தனது கருத்தை வெளிப்படுத்த எந்த ஊடகம் சிறந்நது எனத் தெரிவதில் சிக்கல்.
4. ஆசிரியரின் சிந்தனையில் குழப்பம்.
5. ஆசிரியர் - மாணவரிடையே ஏற்படுகின்ற கவலை, சலிப்பு, மனச்சோர்வு, வேறொருகவனக்கலைப்பு.
6. கருத்துக்களை பொருத்தமற்ற குறியீடுகளால் விளக்குதல்.
7. ஆசிரியர் - மாணவரிடையேயுள்ள மொழியிலும் அறிவுக்கிடையிலுள்ள தெளிவிலும் இடைவெளி தோன்றல்.

## தொடர்பாடல் வழிகள்

### 1. பேசுதல் கவனித்தல்

ஆசிரியர் வகுப்பறையில் விரிவுரை நடத்துதல் அல்லது விவாதித்தலின் போது இது நிகழ்கின்றது. ஆசிரியர் தெளிவாக விளங்கத்தக்க வகையில் சொல்லுதல் வேண்டும். அதே போல்மாணவரும் கவனத்துடன் செவிமடுத்து கிரகித்தல் வேண்டும். விரிவுரையாளர் வினா, விளக்கல் என்பவற்றின் போது பேச்சுத்தெளிவை கவனத்தில் கொண்டு கலந்துரையாடல் வேண்டும்.

### 2. காட்டுதலும் உற்று நோக்குதலும்

ஒரு பொருளை கண்முன்னே காட்டி நிகழ்வது. இந் நிகழ்ச்சியானது ஒரு கருத்தை காட்சிப்பொருளாக விளக்கும் சந்தர்ப்பத்தை இது நிகழ்த்துகின்றது. சொற்களை குறைவுபடுத்தி பட விளக்கங்களை ஏற்படுத்தும் போது கற்பித்தல், கற்றல் இலகுவாகின்றது. செய்து காட்டல் கற்பித்தல் முறையானது சிறந்ததாகும். உற்று நோக்கல் என்பதில் படங்கள், திரைப்படங்கள், தொலைக்காட்சி என்பன அடங்குகின்றன.

### 3. எழுத்தும் வாசித்தலும்

குறிப்பு, வினா, வழங்கல் செயற்பாடு என்பவற்றில் எழுத்துச் செயல் இடம்பெறுகின்றது. வகுப்பில் வாசிப்புச் செயன்முறையில் வாசிப்பு இடம்பெறுகின்றது.

### III ஆசிரியருக்கு கல்வி உளவியல் எவ்வகையில் உதவுகின்றது.

கல்வி உளவியல் மூலம் பெற்ற அறிவினைக் கொண்டு வகுப்பறையில் நிகழும் கற்றல் கற்பித்தல் செயல்முறையை பயனுள்ளதாகவும், உயிர்துடிப்பு உள்ளதாகவும் ஆக்கிக்கொள்வதற்கு உதவுகின்றது.

மனித வளர்ச்சியில் அடிப்படைக்கோட்பாடுகளை உணர்ந்து மாணவர்களது கல்வி வளர்ச்சியில் இவற்றை நன்கு பயன்படுத்த ஆசிரியருக்கு கல்வி உளவியல் உதவுகின்றது.

மாணவர்களது குடும்பப் பின்னணியும் வீட்டுச்சூழலும் எவ்வாறு அவர்களது கல்வீ வளர்ச்சியை பாதிக்கக்கூடும் என்பதை அறிய ஆசிரியருக்கு கல்வி உளவியல் உதவுகின்றது.

குழந்தை வளர்ச்சியில் பல்வேறு காலகட்டங்களில் எழும் உடல் வளர்ச்சி, அறிவுவளர்ச்சி, மனஎழுச்சி வளர்ச்சி, சமூக வளர்ச்சி, ஆகியன சார்ந்த பண்புகள் தேவை பற்றி ஆசிரியருக்கு அளித்து இதன் அடிப்படையில் குழந்தைகளின் கல்வி வளர்ச்சிக்கு திட்டமிட உதவுகின்றது.

கற்றல் பற்றிய கோட்பாடுகள், கற்றலுக்கேற்ற சிறந்த வகுப்பறைச் சூழலின் தன்மை ஆகியவற்றை ஆசிரியர் உணரச் செய்ய உளவியல் உதவுகின்றது.

மாணவர்களிடம் காணப்படும் தனியாள் வேற்றுமைகளை உணர்ந்து இவற்றின் பாதிப்புக்களை எவ்வாறு சந்திக்கலாம், ஆலோசனை வழங்குதலையும், சூழ்நிலைகளுடன் சிறப்பாக பொருந்தி வாழ வழிகாட்டுதலையும் எவ்வாறு மேற்கொள்ளலாம் என்பன பற்றி அறியவும் உளவியல் உதவுகின்றது.

பாடசாலையை ஒரு சமூதாயக்குழு என உணர்ந்து தனிப்பட்டோரது வளர்ச்சியினையும் குழுக்களின் செல்வாக்கினையும் ஆசிரியர் அறிய உதவுகின்றது.

ஆசிரியரின் தன்மை பற்றியும் தமது தொழில் பற்றியும் நன்குணர்ந்து இவை பற்றிய ஆக்கமுனைப்புள்ள மனப்பான்மையை வளர்த்துக்கொள்ள உதவுகின்றது.

## IV பரிகாரக் கற்பித்தல்

கற்றல் கற்பித்தல் நிகழ்வின் போது ஆசிரியர் தான் கொண்டு நடாத்தும் பாடத்தின் அடைவுமட்டம் வகுப்பறையிலுள்ள எல்லா மாணவர்களுக்கும் சென்றடையும் என நாம் உறுதியாகக் கூறமுடியாது. மீள்திறன் கூடிய மாணவர்கள், சராசரியறிவு, மாணவர்கள் பின்னடைவான மாணவர்கள் என்று 3 தர மாணவர்கள் வகுப்பறையில் காணப்படுவர். இவர்களை இனம்கண்டு தனியாள் வேறுபாடுகளுக்கேற்ப கற்பித்தலை மேற்கொள்ளல் அவசியம்.

ஒரு வகுப்பறை நிகழ்வை நாம் எடுத்து கொண்டால் 30 நிமிடத்தில் பாட அலகினை முடித்துக்கொள்ளல் வேண்டும். இச்செயற்பாடு ஆண்டு 1, 2, 3 க்கு உரியதாகும். ஆண்டு 4, 5 இல் 40 நிமிடம் ஒரு பாட நேரமாக காணப்படுகின்றது. இக்குறுகிய நேரத்தில் நாம் குறைந்தது 3 சிறப்பு நோக்கங்களை மாணவர் அடையச் செய்தல் வேண்டும்.

வகுப்பு ஆசிரியையின் கற்றலில் பின்னடைவான மாணவருக்கு பாடசாலை நேரம் தவிர்ந்த ஏனைய நேரங்களில் மேலதிகமான வகுப்புக்களை நடாத்துவதன் மூலம் இக்குறைபாட்டை நிவர்த்தி செய்யலாம். பாட ஆசிரியையாயின் தனது ஓய்வு நேரங்களை பயன்படுத்தியும், மேலதிக வகுப்புக்களை நடாத்தியும் இதனை நிவர்த்தி செய்யலாம். அவ்வாறு நிவர்த்தி செய்யும் பொழுது பாட அலகின் ஆரம்பத்திலிருந்து கொண்டு செல்லல் அவசியம். இடையிடையே மதிப்பீட்டுச் செயற்பாட்டையும் மேற்கொள்ளுதல் வேண்டும். இவ்வாறு நாம் பரிகாரக்கற்பித்தலை மேற்கொள்ளல் ஆசிரியரின் முக்கிய கடமைகளில் ஒன்றாகும்.

### ஆரம்பக் கல்வி: பாடசாலை முகாமைத்துவம்

ஆரம்பக்கல்வியின் விருத்தியின்மைக்கு காணப்பட்ட பல்வேறு காரணிகளுள் ஆரம்பப் பாடசாலையின் முகாமைத்துவ விருத்தியின்மை முக்கிய காரணியாக இனம் காணப்பட்டுள்ளது. ஆரம்பப் பாடசாலை என்ற நிறுவனம் கனிஷ்ட, இடைநிலை பாடசாலைகளை போல் கட்டமைக்கப்படாதுள்ளது. இப்பாடசாலைகளின் அமைவிடம், மாணவர்

தொகைக்குறைவு, ஆசிரியர் பற்றாக்குறை, பெற்றோர் ஆதரவு இன்மை, ஆகியவை காரணங்களாக அறியப்பட்டுள்ளன. குறிப்பாக அதிபரின் முகாமைத்துவ திறன் விருத்தியாக்கப்படவேண்டும். இதற்கு முக்கிய காரணிகளாக அதிபரின் நியமனம் கவனிக்கப்படவேண்டியவை ஆகும். அவர்களின் வாண்மை, கல்வித்தகைமை, அனுபவம், ஆரம்பக்கல்வி பற்றிய அறிவு என்பனவாகும். இப் பாடசாலையின் முதல் நிலை முகாமையாளர் என்ற நிலையில் தகுதியற்றவர்களாகக் காணப்படுவதால் இப் பாடசாலைகள் பயன் தரு நிறுவனமாக செயற்பட ·முடியாத நிலையில் தொடர்கின்றன.

## ஆரம்பப் பாடசாலை கட்டமைப்பு

இப்பாடசாலையின் அதிபர் ஆரம்பக்கல்வி பயிற்சி ஆசிரியராக குறைந்தது ஐந்து வருடமாவது கற்றல், கற்பித்தல், செயற்பாட்டில் ஈடுபட்டிருந்திருக்க வேண்டும். அத்துடன் ஆரம்பக்கல்வி பாடசாலைகளின் செயற்பாடு பற்றி அறிந்தவராகவும், அப்பாடசாலையின் சூழல், மாணவர்களின் குடும்பப் பின்னணி, ஆசிரியர்களின் பின்னணி, என்பவற்றை அறிந்து மாணவ வளம் ஆசிரிய வளம் என்பவற்றுக்கு ஏற்றதாகப் பாடசாலையை கட்டமைக்கும் திறனுடையவராக வேண்டும். பாடசாலை மாணவர்களின் தொகை 100க்கு மேற்பட்டதாகவும் 500இற்கு குறைந்ததாகவும் இருக்க வேண்டும். இந்த அடிப்படையில் தொட்டம் தொட்டமாக இருக்கும். ஆரம்ப பாடசாலைகளை இரண்டு மீற்றருக்கு உட்பட்டதூரத்தையும் ஆண்டு ஒன்று தொடக்கம் மூன்று வரை குறிப்பாக ஒன்றிணைக்கப்பட வேண்டும். இத்தகைய நிலை ஓரளவு உறுதிவாய்ந்த கட்டமைப்பை உருவாக்க ஏதுவாகும்.

## ஆரம்ப கல்வி நிர்வாகக் கட்டமைப்பு
## (ஆ1 – ஆ5)

இக்கட்டமைப்பில் அதிபர் முதல்நிலை முகாமையாளர். முதல்நிலை என்பது ஆரம்பக்கல்வியை அறிவு ரீதியாக, வாண்மை ரீதியாக, கல்வித்தகைமை ரீதியாக, அனுபவ ரீதியாக, பெற்று முதல்நிலை வகிக்க வேண்டும். இவர் கற்றல் கற்பித்தல் அறிவுறுத்தல் நிகழ்வுகளை முன்னெடுத்துச் செல்பவராக நாளாந்த நடைமுறை வேலைக்கு

முக்கியத்துவம் அளிக்காமல் கற்றல் கற்பித்தலுக்கு ஆதரவு, ஆலோசனை, பின்னூட்டல், தொடர் நடவடிக்கைகள் போன்றவற்றை எடுப்பவராக இருக்க வேண்டும். குறிப்பாக 150 மாணவர்களுக்குட்பட்ட பாடசாலைகளில் குழுக்கற்றல், பல்தரக்கற்பித்தல், பல்மட்டக் கற்பித்தல், இழந்த கல்வியை ஈடு செய்தல் (இழப்பீட்டுக்கல்வி) பரிகாரக் கற்பித்தல் என்பவற்றை அறிந்தவராக, செயற்படுத்துபவராக இருக்க வேண்டும். அத்துடன் 21ம் நூற்றாண்டுக் கலைத்திட்டத்துக்கு மாணவர்களை தயார் படுத்தக்கூடியவராகவும் இருத்தல் வேண்டும்.

### வகுப்பறை மேற்பார்வை

கல்வி அலுவலர்கள் வகுப்பறை மேற்பார்வையை மேற்கொள்வதற்கு முன்பாக பின்வரும் விடயங்களை கருத்திற்கொள்ள வேண்டும். மாணவரது நிலை, ஆசிரியரது நிலை பாடசாலை முகாமைத்துவநிலை, என்பவற்றை சரியாக இனம் கண்டு அறிந்து அவற்றின் அடிப்படையில் வகுப்பறை மேற்பார்வையை திட்டமிட வேண்டும். இந்நிலையை கண்டறிவதற்கு அதிகாரத்துவத்தை மறந்து ஒரு சக ஆசிரியர் என்ற மனநிலையில் நின்று உதவ வேண்டும். அதாவது ஆலோசனையும் வழிகாட்டலும் வழங்கல் என்ற மனப்பாங்குடன் மேற்பார்வைப் போக்கை அமைத்துக்கொள்ள வேண்டும். கலைத்திட்டம், மையநிலையில் வகுத்து அளிக்கப்பட்டாலும் நாம் மேலே காட்டிய நிலையில் சூழலை, பிரதேசத்தை கருத்திற் கொண்டு மாணவர் அடைய வேண்டிய மட்டம், அவற்றை அடைய முடியாமைக்குரிய காரணத்தை ஆசிரியருடன் சேர்ந்து கண்டறியவும் வேண்டும். இங்கு சூழலுக்கேற்ற கலைத்திட்ட அமுலாக்கம் இரு பகுதியினராலும் கருத்திற்கொள்ளப்பட வேண்டும்.

### கற்றவை, கற்பிக்கப்பட வேண்டியவை, அடைவுமட்டம், அவற்றை உயர்த்துவதற்கு உதவுவது.

கற்பிப்பது யாருக்கு? கற்பிப்பது எதனை? கற்பிப்பது எவ்வாறு? இம் மூன்றையும் ஒரு மதிப்பீட்டின் அடிப்படையில் மாணவர்களின் அடைவுகள் மூலம் இனம் கண்டு, குறைபாடுகளுக்கேற்ப மாணவர்களை தரம் பிரித்தலும் அதற்கேற்ப கற்றல் குழுவை உருவாக்கி கற்றல். கற்பித்தல் செயல் ஒழுங்கை மேற்கொள்ளவும் வேண்டும். பாடசாலை

மேற்பார்வைக்கு செல்பவர் தன்னை ஒரு அனுபவம் வாய்ந்த ஆசிரியர் என்ற நிலைக்குத் தயார் படுத்திக் கொள்ள வேண்டும். மேற்பார்வை செய்யப்படும் ஆசிரியர்களை சக பாடிகள் உணர்வுடன் அணுக வேண்டும். அவர்களுடன் கற்பிக்க இருக்கும் விடயங்கள் குறித்துக் குழுக்குழுவாகவும் தனித்தனியாகவும் கண்டு உரையாட வேண்டும்.

இம்மேற்பார்வை திறந்த ஓர் உரையாடலாக அமையவேண்டும். இங்கு சமமானவர்களாக, ஒருவருக்கொருவர் மற்றவர் பெற்ற அனுபவங்களை பகிர்ந்து கொள்ளும் செயற்பாடாகவும், ஒருவர் அறிந்ததை மற்றவருக்கு அறிவிப்பதாகவும் ஒருவர் அறியாததை மற்றவர் அறியும் செயற்பாடாகவும் இக்கலந்துரையாடல் அமைய வேண்டும்.

உதவுகின்றோம், ஒருவருக்கொருவர் உதவ முன் வந்துள்ளோம் என்ற அடிப்படையில் மேற்பார்வைக்கு முன்னும் பின்னும் உரையாடல்கள் அமைய வேண்டும். ஆரம்பக்கல்வி மேற்பார்வை ஆரம்பக்கல்வி பற்றிய அனுபவம் இல்லாதவர்களால் செய்யப்படக் கூடாது. இம் மேற்பார்வைக்கு செல்பவர்களுக்கு ஆரம்பக்கல்வி பற்றிய அறிவு நிறைய வேண்டும். ஆகவே ஆரம்பக்கல்வி மேற்பார்வை என்பது ஒரு நுண்ணிய செயற்பாடாகும். தொடர்ந்தேர்ச்சியான செயற்பாடும் ஆகும்.

**ஆரம்பப் பிரிவினர்க்குப் பொருத்தமான கற்பித்தல் முறைகள்**

1. மொன்ரசூரி கற்பித்தல் முறை
2. குழந்தை பூங்கா கற்பித்தல் முறை
3. விளையாட்டு முறை
4. பிரச்சினை விடுவித்தல் முறை
5. செயல் முறை
6. கண்டறி முறை
7. செய்து காட்டல் முறை
8. குழு முறை
9. கலந்துரையாடல் முறை

## 1. மொன்ரசூரி கற்பித்தல் முறை

இத்தாலிய நாட்டை சேர்ந்த வைத்தியக் கலாநிதி மரியா மொன்சூரி 1907ஆம் ஆண்டு "குழந்தை இல்லம்" என்னும் சிறுவர் பாடசாலை நிறுவி அங்குள்ள சிறுவர்களுக்கு கல்வி அளிப்பதில் ஒரு புது முறையினை கையாண்டனர். அக்கற்பித்தல் முறை பெருவெற்றி பெற்றதனால் அதுவே மொன்ரசூரி கற்பித்தல் முறை எனப் பிரபல்யம் அடையலாயிற்று. பிள்ளைகள் இயல்பான சூழலில் தாமாக முன்வந்து சுதந்திரமாக ஓடியாடி, விளையாடி, தமது கற்பித்தல் வேலையில் ஈடுபடக்கூடிய பாடசாலைச் சூழலையும், கற்பித்தல் கருவிகளையும் ஏற்படுத்திகொடுத்தல் வேண்டும். இவ்வாறு கற்றலில் ஈடுபடும் பிள்ளையை ஆசிரியர் பரிவுடன் கவனித்து அவர்களை நெறிப்படுத்தி வழிகாட்டுபவராக இருத்தல் வேண்டும். இதன் மூலம் பிள்ளைகள் தாமாகவே முன்வந்து கற்றலில் ஈடுபடும் நிலை இங்கு காணப்படுகின்றது. இவ்வாறு மொன்ரசூரி கற்பித்தல் முறை காணப்படுகிறது.

## 2. குழந்தை பூங்கா கற்பித்தல் முறை

கற்பித்தல் முறைகளில் பெஸ்ரலாசி என்பவர் ரூசோவின் கருத்துக்களை அடிப்படையாக வைத்து புதியதொரு கற்பித்தல் முறையினை வெளியிட்டார். பிள்ளைகளிடம் மறைந்திருக்கும் இயல்பால ஆற்றல்களை புலப்பயிற்சி மூலம் வெளிக்கொணர்தல் என்ற கருத்தை உலகிற்கு முதன்முதல் தந்தவர் இவரேயாவர். குழந்தைகளிடம் இயல்பாகவே காணப்படுகின்ற திறன்களை வெளிக்கொணர்ந்து அவர்களை ஆளுமையுடையவர்களாக உருவாக்குதல் வேண்டும். குழந்தை கல்வி பயிலும் இடம் அவர்களுக்கு விருப்புடையதாக இருக்க வேண்டும்.

குழந்தைகளை இவர் வளரும் செடிகளுக்கு ஒப்பானவர்களாகக் கருதினார். செடிகள் வளர்வதற்கு தோட்டக்காரன் அச் செடிகளில் கண்ணும் கருத்துமாக இருத்தல் வேண்டும். இதே போல்த்தான் குழந்தைகளின் வளர்ச்சியிலும் ஆசிரியர் தோட்டக்காரன் போன்று கண்ணும் கருத்துமாக இருத்தல் வேண்டும். என எடுத்துரைத்தார். இவ்வாறு குழந்தைப் பூங்கா முறை காணப்படுகின்றது.

## 2. விளையாட்டு முறை கற்பித்தல்

காலடு வெல் குக் இனால் எடுத்துரைக்கப்பட்ட விளையாட்டு முறைக் கற்பித்தல் தற்கால கல்வியியலாளரினாலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு சிறந்த முறையாகும். இது ஆரம்ப வகுப்பு பிள்ளைகளுக்கு மிகவும் பயன் மிக்க முறையாகும். இங்கு விளையாட்டைக் கருவியாகப் பயன்படுத்தி பிள்ளைகளைக் கல்விச் செயற்பாட்டில் நாட்டத்தையும், விருப்பத்தையும் ஏற்படுத்துதல் வேண்டும் என்ற கருத்து முக்கியத்துவம் பெறுகின்றது. எனவே விளையாட்டினூடாக கல்விச் செயற்பாடு இடம்பெறுகின்றமையை நாம் காணலாம்.

## 4. பிரச்சினை விடுவித்தல் முறை

ஒரு மனிதன் தனது வாழ்க்கையில் ஏற்படும் சிக்கல்களை அல்லது பிரச்சினைகளை சிந்தித்தே தீர்க்க முயல்கிறான். ஒருவன் பிரச்சினைகளை எதிர்நோக்குகின்ற பொழுது பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு வேண்டிய திறன்களையும், பயிற்சிகளையும் முன்னதாகவே அளிக்க வேண்டிய ஆசிரியனதும், பாடசாலையினதும் தலையாய கடமையாகும். இதன் அடிப்படையிலிருந்து தோன்றியதே பிரச்சினை தீர்த்தல் என்னும் முறையாகும்.

பிள்ளைகளின் கற்றல் அவர்களின் செயல், அனுபவம் மூலம் நடைபெற வேண்டும். என ஜோன் டியுயி விரும்பினார். எனவே பிள்ளை தனது சூழலுக்கும், சமூகத்துக்கும் ஏற்ற முறையில் சீரான பொருத்தப்பாடுகளை ஏற்படுத்திக் கொள்வதற்கு தனது உடலை நன்கு பழக்கப்படுத்திக் கொள்வது ஒரு பிரச்சினையாக உள்ளது. எனவே இந்தப் பிரச்சினைகளை தீர்க்கும் வழிகள் பாடசாலையிலே பெற்றுக்கொள்ளுதல் வேண்டும். இதன் அடிப்படையில் எழுந்ததே பிரச்சினை விடுவித்தல் முறை.

## 5. செயல் முறை கற்பித்தல்

கற்றலுக்கு முன் வைக்கப்படும் ஏதாவது ஒரு பிரச்சினையை செயற்திட்டமாக அமைத்து அதிலிருந்து முடிவை பெறுதல் இம் முறை கற்பித்தலாகும். ஊ.சு. ரிச்சர்ட்ஸ் என்ற கல்வியியல் அறிஞர் முதன்

முதலில் இம் முறையைப் பயன்படுத்தினார். இதனை பின்பு நல்ல முறையில் கட்டியெழுப்பியவர் என்.எச்.கில்ஸ் ஆவார். மாணவர் தாமே ஒரு செயலை தேர்ந்தெடுத்து அதனை அவர்களை செய்து முடிப்பதன் மூலம் அறிவு, திறன், மனப்பாங்கு, அனுபவம், என்பவற்றை பெறுகின்றனர். இக்கற்பித்தல் முறையானது மாணவர்க்கு ஆர்வத்தை வழங்கி அவர்களின் சிந்தனையை தூண்டும் ஒரு முறையாகவும் காணப்படுகின்றது.

## 6. கண்டறி முறைக் கற்பித்தல்

மாணவர் தமது முயற்சியினால் விடயங்களை கண்டறிந்து கொள்வதன் மூலம் கற்றல் மிகவும உயர்மட்டத்திலான பலனைத் தருகின்றது. பிள்ளைகளிடம் இயல்பாக உள்ள ஆராய்வூக்கத்தை தூண்டி எதனையும் அவர்களாகவே ஆராய்ந்து அறியும் திறனை வளர்த்தல் இதன் அடிப்படைத் தன்மை ஆகும். ஆம்ஸ்டேட் எனும் அறிஞர் விஞ்ஞான விடயங்களைக் கற்பிக்க கண்டறி முறையைப் பயன்படுத்தி பெரு வெற்றி கண்டனர். இதனால் ஏனைய பாடங்களிலும் இவனை புகுத்துவதற்கு காரணமாயிற்று. ஆசிரியர் தகவல் திரட்டி மாணவருக்குக் கொடுப்பதை விட அனுபவங்களினூடாக உண்மைகளைத் தாமே கண்டறிவதற்கான வழிமுறை ஆசிரியர் மேற்கொள்ள வேண்டும். இவ்வாறு கண்டறிமுறைக் கற்பித்தல் காணப்படுகின்றது. இது மேலும் திறந்த கண்டறி முறை, வழிகாட்டப்பட்ட கண்டறி முறை என வளர்த்துச் செல்கிறது.

## 7. செய்து காட்டல் முறை

ஆரம்பப் வகுப்புக்களில் கற்றல் கற்பித்தல் செயற்பாட்டிற்கு செய்து காட்டல் முறை முலம் கற்பதனால் மாணவர்களின் ஆர்வமும், ஈடுபாடும், அதிகரித்துக் காணப்படும். சிறிய நிகழ்ச்சிகளை ஒழுங்கு செய்து வகுப்பறைகளில் இம் முறை முலம் கற்பிக்கலாம்.

## 8. குழு முறைக் கற்பித்தல்

மாணவரைத் தனித்தனியாக கற்பிப்பதிலும் பார்க்க கூடியபலன் குழுமுறை கற்பித்தல் முலம் பெறலாம். குழுவாகக் கலந்துரையாடல், பரிசோதனை செயற்திட்டம், ஒப்படை, அவதானிப்பு, என்பன மேற்கொள்ளலாம். குழுத்தலைவன் அறிக்கைப்படுத்துபவர் ஆகியோர்

இருக்க வேண்டும். இடைக்கிடை குழுக்களின் கவனம் கொள்ளவேண்டும். அவதானிக்க வேண்டும், சந்தேகங்கள் எழும் போது அவற்றை நிவர்த்தி செய்ய வேண்டும். இவ்வாறு இக்கற்பித்தல் முறை காணப்படுகின்றது.

### 9. கலந்துரையாடல் முறைக்கற்பித்தல்

கலந்துரையால் முறையில் பாடத்தை எடுத்துச் செல்ல வேண்டுமாயின் பிரச்சினையின் இயல்பு பற்றி அறிதல் வேண்டும். கலந்துரையாடலை ஆசிரியரே ஆரம்பிப்பார்.குழு முறையான கலந்துரையாடலில் ஒரு தலைவர் இருக்க வேண்டும். வகுப்பை பல பிரிவாக பிரித்தல், யாவரும் கலந்துரையாடலில் ஈடுபடச் சந்தர்ப்பம் அளித்தல், முக்கிய் விடயம் மட்டும் கலந்துரையாடலில் இடம்பெற வேண்டும்.

இவ்வாறு ஆரம்பப் பிரிவினருக்கு பொருத்தமாக மேல்வரும் கற்ப்பித்தல் முறைகள் காணப்படுகின்றன. இவற்றை தற்கால ஆசிரியர்கள் கடைப்பிடித்து கற்றல் கற்பித்தலில் ஈடுபடும் போது மாணவ சமூகம் நல்ல நிலைக்கு கொண்டு வரப்படும். என்பதில் எதுவித ஐயப்பாடுமில்லை.

### கல்விச் சிந்தனையாளர்கள் சிலரின் ஆரம்பக் கல்வி பற்றிய கருத்து

கல்வி மூலம் ஒரு நாட்டில் சிறந்த குடிமகனை உருவாக்கலாம். ஆரம்ப வகுப்புகளில் பிள்ளைகளுக்கு கல்வி கற்பித்தலின் நோக்கம் மேற்கூறியதை விட வித்தியாசமானது. பிள்ளையைச் சமூகத்துக்கு ஏற்றவனாக ஆக்குகின்ற செயன்முறையே ஆரம்பக்கல்வியின் நோக்கம் எனலாம். 6 வயது முதல் 11 வயது வரையுள்ள காலப்பகுதியில் பிள்ளை தரம் 1 தொடக்கம் 5 வரையும் கற்றலில் ஈடுபடுகிறது. இக்காலப் பகுதியில் பிள்ளையின் உடல் வளர்ச்சி உள வளர்ச்சி சிந்தனை வளர்ச்சி ஆகியன முக்கியமானதாகும். பிள்ளைகளுக்கு தெரிந்ததை கொண்டு கற்பித்தல் இடம்படுகின்றது. அதாவது கற்றலுடன் இணைந்ததாகக் கல்வி இடம் பெறுதல் வேண்டும்.

கல்விச் சிந்தனையாளர்கள் ஆரம்ப வகுப்பு மாணவர்களுக்கு வகுப்பறைகளில் போதனா முறை மூலம் கல்வி கற்பிப்பது ஏற்றதல்ல என அவர்களின் அனுபவங்கள் மூலம் கண்டறிந்தனர். அவர்களில் ரூசோ, பிளேற்றோ, ஜோன்டியுயீ, கேபட்ஸ்பென்சர், மொண்டசூரி அம்மையார் போன்றவர்கள் ஆவர்.

**1. ிளேற்றோ**

இன்றைக்கு 16ம் நூற்றாண்டுக்கு முன்பு வாழ்ந்த கல்விச் சிந்தனையாளர் பிளேற்றோ கல்வி பற்றி கூறிய கருத்துக்கள் இன்றைய கல்வியியலாளர்களினாலும் ஏற்றுக்கொள்ளப்பட்டு பின்பற்றப்படுகின்றது. கல்வியே ஒரு நாட்டின் வளர்ச்சிக்கு மூலாதாரமானது என்ற கருத்தை இவர் வெளியிட்டார். அது மட்டுமின்றி கல்வி அரசின் கட்டுப்பாட்டின் கீழ் அரசிற்கு கீழ் இருக்க வேண்டும் என்ற கருத்தை வெளியிட்டவர் இவர்.

பிறந்த நாட்டுக்கு சேவை செய்ய வேண்டியது கற்றறிவாளர்களின் கடமை என்ற கருத்தை வெளியிட்டவரும் இவரே. பிளேற்றோவின் குரு சோக்ரட்டீஸ் ஆவார். சோக்ரடீஸின் வழிகாட்டலின் கீழ் பிளேற்றோ வளர்ந்ததனால் அவரின் கருத்துக்கள் இவரின் மீதும் பிரதிபலிக்கலாயிற்று. ஆசிரியர்கள் ஞானவிளக்குகளாக இருக்க வேண்டும். பணத்திற்கு அறிவை விற்கும் பரத்தையர்களாக இருக்க கூடாது என்பது இவர்களின் கருத்தாகும்.

கிரேக்க கல்வி அறிஞரான பிளேற்றோ "குடியரசு", "சட்டங்கள்" ஆகிய இரு நூல்களை எழுதியுள்ளார். அதில் கல்வி பற்றிய கருத்துக்களை அவர் வெளியிட்டார். முக்கியமாக ஆரம்பக் கல்வி பற்றியும் குறிப்பிட்டு இருக்கின்றார்.

இவரின் கருத்துப்படி எல்லாப் பிள்ளைகளும் 6 வயதுப் பருவத்திலேயே ஆரம்பக் கல்வியை ஆரம்பிக்க வேண்டும். இது ஒரு ஒழுங்குபடுத்தப்பட்ட நிறுவன ரீதியான முறைசார் கல்வியாக இருக்க வேண்டும். இவ் ஆறு வயதில் முன்னைய பருவத்தின் பிள்ளையின் கல்வி குடும்பத்தையே சார்ந்ததாக இருத்தல் வேண்டும். 6 வயதின் பின்னர் ஆரம்பிக்கப்படும் கல்வியை அரசு ஏற்று நடத்துதல் வேண்டும் என வலியுறுத்துகிறார்.

கல்வியின் குறிக்கோள் நாட்டின் அரசியல் சட்டதிட்டங்களிற்கு அடிபணிந்து அச்சட்டதிட்டங்களை மதித்து நடக்கும் ஒரு நற்பிரஜை உருவாக்குதல் ஆகும். இக் குறிக்கோளை எய்துவதற்காக அரசு பிள்ளைகளின் கல்வியில் கவனம் செலுத்துதல் வேண்டும்.

சட்டங்கள் என்னும் நூலில் எதிர்கால நற்பிரஜையாகும் ஒவ்வொரு பிள்ளைக்கும் பொதுக்கல்வி அவசியமானதும், கட்டாயமானதும் ஆகும். பெற்றோர் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் ஆரம்பக் கல்விக்காகப் பிள்ளைகளைப் பாடசாலைக்குக் கட்டாயமாக அனுப்புதல் வேண்டும். ஒவ்வொரு பிள்ளையும் பெற்றோரைவிட நாட்டிற்கே சொந்தக்காரர்கள் ஆகும். எனவே ஆண், பெண் இரு பாலாருக்கும் ஒரே விதமான கல்வியைக் கொடுத்தல் அவசியமானது.

பிறப்புத் தொடக்கம் 6 வயது வரை குடும்பச் சூழலில் பிள்ளையை நற் பழக்கவழக்கத்திற்கு உட்படுத்துதல் வேண்டும். 3 - 6 வயது வரை இடைப்பட்ட காலத்தில் பிள்ளைகளின் உடல்நலம் இசைவானதாக இருப்பதற்கு விளையாட்டுக்களைப் பயிற்ற வேண்டும். இக் குழந்தைப் பருவத்தில் பிள்ளையைச் சரியாக நெறிப்படுத்துவதன் மூலம் எதிர்காலத்தில் சிறந்த நற்பிரஜையை உருவாக்க முடியும் என இவர் கருதுகின்றார். ஆரம்பக்கல்வியின் போது சங்கீதம், தசைநார் பயிற்சி ஆகிய பாடங்கள் முக்கியமானவையாக இருத்தல் வேண்டும். உடல் வளர்ச்சிக்கு இத்தசைப்பயிற்சி முக்கியமானது எனப் பிளேற்றோ கருதுகின்றார். சித்திரம், நடனம், நாடகம் ஆகியன உள்ளடங்கும் வண்ணம் சங்கீத பாடம் இருத்தல் அவசியம். ஆன்ம வளர்ச்சிக்கு இசை முக்கியமானது என இவர் கருதுகின்றார்.

கற்பனையினாலான கதைகளைப் பிள்ளைகளிற்கு கூறாது உண்மை வரலாற்று நிகழ்வுகளை பிள்ளைகளுக்குக் கூறுதல் வேண்டும். அவை மெய்ப்பொருளை அடிப்படையாகக் கொண்டிருத்தல் வேண்டும். தாய்மார் பிள்ளைகளின் உடலை நன்கு அழகுபடுத்துவது போன்று இக்கதைகள் அவர்களின் உள்ளத்தை நன்கு அழகுபடுத்தக் கூடியதாக இருத்தல் வேண்டும். இசைக்கு அடுத்ததாக உடற்பயிற்ச்சியினை பிள்ளைகளுக்குப் பெற்றுக்கொடுத்தல் வேண்டும். அதனைக் கவனமாக வாழ்கை பூராவும் பேணிவரச் செய்ய வேண்டும். உடற்பயிற்சி மூலமாக

மனிதனின் ஆன்மீக விழுமியங்கள் வலிமைபெறும். இவ்வாறு பயிற்றுவிக்கப்படும் பிள்ளைகள் ஒரு பூரணமான பிரஜையாக உருவாகுவதில் எவ்வித சந்தேகமுமில்லை என கல்விச் சிந்தனையாளர் களில் ஒருவரான பிளேற்றோ கூறுகின்றார்.

**ரூசோ**

ஆரம்பக்கல்வி பற்றி ரூசோ கூறிய கருத்துக்களை எடுத்து நோக்குவோமாயின் ஒரு பிள்ளை தன் வாழ்வில் எப்பொழுதுமே அடைய முடியாத ஒரு குறிக்கோளுக்காக அவனை விருத்தி செய்யும் நோக்குடன் அவனுக்குப் பல கட்டுப்பாடுகளை ஏற்படுத்தி நிலையில்லாத எதிர்காலத்திற்காக பலாத்கரமாக கற்பிப்பது ஏற்ற செயலல்ல என இவர் கருதுகின்றார். ரூசோவின் கருத்துப்படி பிள்ளைகள் தாமாகவே விரும்பிக் கற்றலில் ஈடுபட வேண்டும். அவனுடைய இயல்புகளுக்கேற்ப கற்றல் இடம் பெறல் வேண்டும். ஒரு பிள்ளையைக் கட்டாயப்படுத்தி கற்பிப்பதன் மூலம் அவன் அக் கல்வியைப் பெற்றுக்கொள்ள மாட்டான். பிள்ளையின் வாழ்விலும் அதன் அனுபவங்களிலும் கல்வி அடங்கியிருத்தல் வேண்டும். பிள்ளையிடத்தே கல்வி வாழ்க்கைக்கு ஆயத்தப்படுத்துவதற்கல்ல. சமூகத்தை மதிக்கின்ற ஒரு பண்பினை ஏற்படுத்துவதே கல்வியின் நோக்கமாக இருக்கின்றது.

பிள்ளைகளை நான்கு சுவாகளுக்குள் அடக்கிவைத்து வெற்றுரைகள் மூலம் கல்வியை கற்பிக்கக் கூடாது. காட்சிப் பொருட்கள் மூலமும் அவர்கள் பெறும் அனுபவங்கள் மூலமும் பெறும் கல்வியே அனுபவக் கல்வியாகும்.

ரூசோ 5 வயது தொடங்கி வரும் 11 வயது வரையிலான காலப்பகுதி பிள்ளைப்பருவம் என பிரித்துள்ளார். இக்காலத்தில் உள்ளத்தாலும், உடலாலும் பிள்ளையின் வளர்ச்சிக்காலம் முக்கியமானதாக இருக்கும். இக் காலப்பகுதியில் பிள்ளைகளிடம் ஏற்படுகின்ற கற்றல் எக்காலத்திலும் அழியாததாகப் பதிந்து விடுகின்றன. இதைத்தான் *இளமையில் கல்வி சிலையில் எழுத்து* என்பார்கள். அதனால் உடல் புலன் வளர்ச்சிக்கு உறுதுணை புரியக்கூடியதாக கல்வி இடம்பெற வேண்டும். தீயனவற்றிலிருந்து விலகி நல்லவற்றை நாடுதல் வேண்டும்.

புத்தகக்கருவி எதுவும் இப்பருவத்தில் தேவையில்லை. புலன்களிற்குப் பயிற்சியளித்து இயற்கைப் பொருட்களையும், இயற்கை நிகழ்வுகளையும் அறிய உதவுதல் வேண்டும். உடலுக்கு நலன்தரும் உடற்பயிற்சிகளைக் கொடுத்தல் வேண்டும். அன்பும், கருணையையும் அனுபவத்தின் மூலம் பெற்றுக் கொடுத்தல் வேண்டும். துன்பத்தைத் தகர்த்தெறியும் தூய உள்ளம் கொண்ட மாணவனாக உருவாக்கவேண்டும்.

தனியாளின் ஆர்வம், அவா ஆகியவற்றினால் கிடைக்கப்பெறும் தூண்டலின் காரணமாக கற்றல் இடம்பெற வேண்டுமே தவிர கட்டாயத்தினால் இடம்பெறக் கூடாது. பிள்ளைகளுக்குக் கல்வியை புகட்டுவதற்குப் பதிலாக கல்வியைப் பெறும் வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுத்தல் இப்பருவத்தில் முக்கியமானதாகும். பிள்ளைப்பருவத்தில் நேரம் போதியளவு உள்ளது. அதனால் அவர்கள் நேரத்தை விரயம் செய்து தாமாகவே கற்பதற்கான வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல் வேண்டும்.

இத்தகைய கல்வி முறையினை ரூசோ ஆரம்பக்கல்வி என சிபார்சு செய்கின்றார். பிள்ளைகள் சுதந்திரமாகவும், சுற்றாடலுடன் இணைந்ததாகவும்" பார்த்தல், தொடுதல், நுகர்தல் போன்ற செயல்முறைகளின் மூலம் சமூகத்திற்கு ஏற்றவனாக ஆக்கிக் கொள்ளுதல் வேண்டும். கற்பித்தல் என்பது கருத்தற்ற சொற்கூட்டங்களை மனனஞ் செய்வதல்ல. புது அனுபவத்துடன் இணைந்த நடத்தை மாற்றங்களை ஏற்படுத்துதல் வேண்டும். இவ்வாறு - ரூசோ அரம்பக்கல்வி பற்றிக் கூறியுள்ளார்.

**ஜோன் டியுயி**

கல்வி என்பது என்றும் வளர்ந்து கொண்டிருப்பது. அது சூழ்நிலை மாற்றங்களோடு மாறிக் கொண்டிருப்பது. அது என்றும் இயங்கிக் கொண்டிருப்பது அதனால் கல்விக்கு இறுதி இலக்கு என்ற ஒன்று இல்லை. வளர்ச்சிக்கு வழிவகுக்கின்ற கல்வி வளர்ந்த வருகின்ற கல்விக்கும் வழிகாட்டுதல் வேண்டும். கல்வியை வெறும் புத்தகப் படிப்பின் மூலம் பெற்றுக்கொள்ள முடியாது. செயல்களின் மூலமும் அனுபவங்களின் மூலமும் பெறுகின்ற அறிவே உண்மையான அறிவு.

கல்வி வாழ்க்கைக்கு ஆயத்தம் செய்வது அல்ல வாழ்கையே கல்வி. கல்வியே வாழ்க்கையாகும். சூழலைப் பயன்படுத்தி தனியாளின் திறன்களை விருத்தி செய்துகொள்ள உதவுவதே கல்வியாகும். எனவே மனிதன் இயற்கையை தனது தேவைக்கேற்ப பயன்படுத்தத் தெரிந்து கொள்ளுதல் வேண்டும். கல்வி என்பது சமுதாயம் அழியாது பாதுகாத்து கொள்கின்ற ஒரு கருவியாகும். சமுதாயத்தினுடைய அனுபவங்கள் கல்விமூலம் பரிமாற்றம் செய்யப்படுகின்றது. அதனால் ஒருவர் பெறுகின்ற அனுபவங்கள் மற்றவரும் பெறக் கல்வி வழிவகுத்தல் வேண்டும். கல்வி தனிமனிதனின் ஆளுமையை வளர்ப்பதோடு சமூக முன்னேற்றத்தையும் ஏற்படுத்துகின்றது. கல்வி இத்தகைய பண்பினைக் கொண்டிருப்பதனால் அவற்றைப் பிள்ளைகளிடம் ஏற்படுத்தக் கூடியதாக கல்வித் திட்டம் அமைந்திருக்க வேண்டும் என இவர் கருதுகின்றார்.

பிள்ளை கல்வி கற்கின்ற பாடசாலைகள் சமுதாயத்தைப் பிரதிபலிப்பவனாக இருக்க வேண்டும். பிள்ளையின் இயற்கையான பணிகளை வளர்ச்சிபெறச் செய்யுமிடமாகப் பாடசாலைகள் இருக்க வேண்டும். அவ்வாறாக இருப்பின் சமூகப் பிரச்சினைகளை எதிர்நோக்குகின்ற சக்தியினைப் பிள்ளைகள் பெறலாம். எதிர்காலத்தில் பிள்ளைகள் ஆக்கபணிகளில் ஈடுபடவும், பிரச்சினைகளை நம்பிக்கையுடன் எதிர்கொள்கின்ற தன்மையைப் பாடசாலைகள் வளர்க்கும் இடமாக அமைய வேண்டும். பாடசாலைகள் பிள்ளைகளுக்கும் பயன்தரக் கூடிய பணிகளைக் கொடுக்கவேண்டும்.

பாடசாலைகள் பிள்ளைகளின் சுயசிந்தனையை விருத்தி செய்கின்ற இடமாக இருக்க வேண்டும். அவர்களின் உடல், உள விருத்தியைப் பெற்றுக் கொள்ளுதல் வேண்டும். சுதந்திரமான சூழலில் பிள்ளைகள் பாடசாலைகளில் கல்வி பெறுதல் வேண்டும். பிள்ளைகள் இயல்பாகவே சிந்திக்கும் திறன் வாய்ந்தவர்கள். அவர்களின் சிந்தனையைத் தூண்டி வளர்க்கும் இடமாகப் பாடசாலைகள் இருக்க வேண்டும். சமூகப் பிரச்சினைகளைத் தீர்க்கக் கூடிய நுண்ணறிவுத் திறன் ஆக்கப் பணிகளில் ஈடுபடுகின்ற வாய்ப்புக்களை வழங்க வேண்டும். பிள்ளைகள் வெறும் பொருள் அறிவினை மட்டும் பெற்றால் போதாது அனுபவ அறிவினையும் பெறுதல் வேண்டும். பிள்ளைகள் நாம் கற்கிறோம் என்று கூறுவதைக் காட்டிலும், அனுபவங்களைப் பெறுகின்றோம் என்று

கூறுவதுதான் சிறந்த கல்வியாகவிருக்கும். எனவே பிள்ளைகளுக்கு கல்வியை, அனுபவங்களை அனுபவங்களால் அனுபவங்களினூடாக அளிக்க வேண்டும். ஆசிரியர் பிள்ளைகள் எதனைக் கற்க வேண்டும் என்று திரட்டிக் கொடுக்காமல் பிள்ளைகளுக்கு உபயோகமான அனுபவங்களைத் தேர்ந்தெடுத்து அளிக்க வேண்டும். பிள்ளைகளுக்கும் பிரச்சனைகளைக் கொடுத்து நடைமுறைப் பிரயோகங்கள் மூலம் தீர்வு காணவைத்தல் வேண்டும். இவர் செயற்திட்ட முறைக் கற்பித்தலே பிள்ளைகளுக்குச் சிறந்தது எனக் கருதுகின்றார்.

பாடசாலைக் கலைத்திட்டம் பிள்ளைகளின் இயல்பு, வாழ்க்கை ஆகியவற்றுடன் இணைந்தால் இருந்தால் வேண்டும். சமுதாய உறுதி, சமூக ஒருமைப்பாடு ஆகியவற்றைக் கலைத்திட்டம் கொண்டிருத்தல் வேண்டும். பாடங்கள் பிள்ளையின் சமூக வாழ்க்கைக்கு உதவுவதாக இருத்தல் வேண்டும். கலைத்திட்டம் பிள்ளையை மையமாகக் கொண்டிருக்கும் அதே வேளையில் சமூகத்தையும் மையமாகக் கொண்டிருத்தல் வேண்டும்.

இவர் குறிப்பிடும் அனுபவக்கல்வி என்பது ஒரு செயற்பாட்டின் மூலம் நடத்தைசார் மாற்றத்திற்கு அடிப்படையாக அமைவதாகும். உதாரணமாக ஒரு பிள்ளை மெழுகுதிரிச் சுவாலையைத் தொடும்போதுதான் அதன் வேதனையை உணர்கின்றது. தீச்சுவாலையைத் தொட்டால் தீக்காயம் ஊறுபடும் அதனால் வேதனை ஏற்படும் என்பதை அனுபவத்தினூடாகப் பெறுகின்றான். அனுபவங்களின் ஊடாகக் கற்றல் உண்மை அறிதல் முறையாகும்.

6 வயதில் பிள்ளை பாடசாலையில் சேரும்போது அவனை எதிர்காலத்திற்கான குறிக்கோளை நோக்கிச் செயற்படுத்துவது பொருத்தமற்றதாகும். சமகாலத்தில் ஏற்படுகின்ற சமூகப் பிரச்சனைகளையும் விடுவிக்கக்கூடிய திறனை அவனிடத்தில் அனுபவங்கள மூலம் ஏற்படுத்த வேண்டும். மாணவனின் கல்வி வாய்ப்புக்களை வழங்குதல் வேண்டும். பாடசாலைகளில் வாழ்க்கைத்திறன் போன்ற பாடங்களும், குழுமுறைக் கற்பித்தல் முறையும் ஜோன் டியூயின் சிபார்சினால் சேர்த்துக்கொள்ளப்பட்டவையாகும். இதன் மூலம் பிள்ளைகள்

உயிர்ப்புள்ள கல்வியைப் பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருக்கும். இவ்வாறு ஜோன் டியூயி ஆரம்பக் கல்வி பற்றிக் கூறியுள்ளார்.

**கோட் ஸ்பென்சர்**

இவர் கல்வி பற்றி மிக முக்கியமான கருத்துக்களை வெளியிட்டுள்ளார். கல்வி என்பது முழுமையான வாழ்க்கைக்கு பிள்ளையை ஆயத்தம் செய்வதற்கே என்ற கருத்தை வெளியிட்டார். காலத்திற்கு ஏற்ப கலைத்திட்டங்கள் அமைக்கப்பட்டு கல்வி இடம்பெற வேண்டுமென இவர் வலியுறுத்தினார். தலைமுறை தலைமுறையாக ஒரு பாடம் கற்பிக்கப்பட்டு அந்த பாடத்தினால் வாழ்க்கைக்கு எதுவித பயனும் இல்லை என்றால் அதனைக் கற்பதில் அர்த்தமில்லை. எனவே கால மாற்றத்துக்கு ஏற்பவும் சமூக மாற்றங்களுக்கு ஏற்பவும் கல்வியில் மாற்றம் ஏற்பட வேண்டும்.

கல்வி தனிமனித வளர்ச்சிக்கு உதவ வேண்டும். அது சமூக வளர்ச்சிக்கும் காரணமாக வேண்டும். இத்தகைய அறிவைப் பெறுவதற்கு விஞ்ஞானபாடங்களே அவசியம் என்று இவர் கருதுகின்றார். கலைத்திட்டங்களில் விஞ்ஞான பாடங்களுக்கு முதன்மை அளிக்க வேண்டுமென்பது இவர் கருத்து.

கற்பித்தலில் ஆசிரியர் முக்கியமான இடத்தைப் பெறவேண்டும். தெரிந்தலிருந்து தெரியாததற்கு, அறிந்ததிலிருந்து அறியாததற்குச் செல்லுதல் இவருடைய கற்பித்தல் முறையின் முக்கிய அம்சமாகும். மேலும் பிள்ளையின் அனுபவங்களினூடாகவே பாடங்களை நடத்திச் செல்லுதல் வேண்டும். அது நேரடியாகப் பார்க்கக் கூடியவற்றைக் காட்டிலும் பார்க்க முடியாதவற்றைக் கற்றல் வேண்டும். இலகுவானதிலிருந்து கடினமானதுக்குச் செல்லுதல் பிள்ளையின் ஆற்றல்களுக்கு ஏற்ப பாடங்களை அமைத்துச் செல்லுதல் வேண்டும்.

இவ்வாறு ஆரம்பக் கல்விபற்றி கல்விச் சிந்தனையாளர்களான பிளேற்றோ, ரூசோ, ஜோன் டியூயி, கேபட் ஸ்பென்சர் ஆகியோர் கருத்து தெரிவித்துள்ளதைக் காணலாம்.

## ஆரம்பக்கல்விக்கு பள்ளி முன் கல்வி

கல்விக்கு வித்திடும் தன்மை அண்மைக்காலமாக உற்று நோக்கப்படுகின்றது. ஆழ ஆய்வு செய்தவர்கள் கல்விக்கு கருவறையிலேயே வித்திடப்படுகின்றதென்று கூறுகின்றார்கள். பிள்ளை கருவறையில் உற்பத்தியாகும் பொழுதே அதன் எதிர்காலச் சிந்தனை ஊற்று விதைப்பாக அங்கு உருவெடுக்கின்றது. தூய தந்தையர்கள் வாழும் சூழல், அவர்களது சிந்தனை, அவர்கள் என்ன நினைத்து ஊற்றெடுத்தார்களோ அவையாவும் கருவறையில் விதைக்கப் படுகின்றது. ஆதலால் தான் அக்காலம் பொன்னாகப் போற்றப்பட வேண்டும். குறிப்பாக பெண்கள் உணர்ந்து நல்ல நூல்களைப் படித்து நல்லவர்களுடம் பழகி நல்லெண்ணத்துடன் நடந்து கொள்ள வேண்டும் என்று வற்புறுத்துகின்றேன். இது பெண்களுக்கு மட்டும் அல்ல ஆண்களுக்கும் பொருந்தும். ஆகவே ஆரம்பக்கல்விக்கு கருவறைக்காலம் வித்திடும் காலம் எனலாம்.

குழந்தை முறைமைக்குட்பட்ட ஆரம்பப் பள்ளிக்கு கால்வைக்க முன் அவனது முன் பிள்ளைப்பருவம் (EARLY CHILD HOOD) மிகமிக அவதானமாக வளர்தெடுக்கப் படவேண்டிய காலமாகும். இக்காலம் தான் கற்றலுக்கும் அவனது விருத்திக்கும் வளப்படுத்தும் காலமாகும். வீட்டுச் சூழலும் அதன் அடுத்துள்ள சூழலும் அவனுக்க உச்சப் பயன்தரக்கூடிய விதத்தில் வளப்படுத்தப்பட வேண்டும். இங்கு பெற்றோர்கள் திறன் மேம்படுத்தப்பட வேண்டும். வீட்டிலும் அயலிலும் உள்ள கற்றல் வாய்ப்புக்களை பெற்றோரை இனங்காணப் பழக்க வேண்டும். பெற்றோர் தமது தினசரி வாழ்க்கையை அவர்களது வளர்ச்சியைக் கருத்திற்கொண்டு ஊக்குவிக்கப்பழக வேண்டும். தாம் அவர்களது ஒவ்வொரு பருவநிலையிலும் எடுக்கும் நடவடிக்கை அவர்களது கல்வியைப் பாதிக்கவிடாது ஊக்குவிப்பதாக அமைய நடந்து கொள்ள வேண்டும்.

குழந்தை பிறப்பிலிருந்தே தான் கொண்ட ஐம்புலன்களுடாக கற்று அறிவைப் பெறுகின்றது. இந்த இயற்கைத் தன்மைக்கு வழிகாட்டலும் ஊக்குவிப்பும் மிகமிக அவசியமாகின்றது. இந்நிலைக்கு குழந்தைக்கு இரு நிறுவனங்கள் உதவவேண்டி உள்ளது. ஒன்று அவன் வாழும் வீடு, மற்றது அவனை நாம் அனுப்பும் முன்பள்ளி.

ஆனால் இன்று எல்லாப் பிள்ளைகளுக்கும் முன்பள்ளிக்கு செல்லும் வாய்ப்புக் கிட்டுவதில்லை. ஆதேபோல வீட்டு நிறுவனமும் வாய்ப்பாக அமைவதில்லை. இவ்விரு நிறுவனங்களிலும் அறியாமை காரணமாக உள்ள வளங்கள் வீணடிக்கப்படுகின்றன. இரண்டிலும் வளங்கள் உச்சப் பயன்பெறும் நிலை உருவாக்கப்பட வேண்டும்.

அரசாங்க சார்புடைய, சார்பற்ற நிறுவனங்கள் அவற்றுக்கு உதவ வேண்டும். இங்கு செயற்படும் பயிற்றுநர்கள் (அதாவது முன்பள்ளி ஆசிரியர்கள்) பெற்றோர்க்கு வேண்டிய அறிவுகளை பகர வேண்டும். பிள்ளை தவழ்ந்து எழுந்து நடக்கும் பராமரிப்புக் காலம் மிகமிக முக்கியம். இதற்கேற்ப வீட்டினதும் கிட்டிய சூழலினதும் அமைவு அவசியம். பிள்ளையின் 0 - 5 வயதுவரை வளர்ச்சி, விருத்தி மிகமிகக் கவனமெடுக்கப்படவேண்டிய காலமாகும்.

தனியார் வேறுபாடுகள் இனங்காணப்பட்டு உச்சவிருத்தி பேணப்பட வேண்டும். அவனது விருத்தியில் பாதிப்புகள் ஏற்பட இடமளிக்கப்படக் கூடாது. ஒவ்வொரு நிலை விருத்தியிலும் மேம்படுத்தும் செயற்பாடுகள் அளிக்கப்பட வேண்டும். வீடுகளில் தனிப்பட்ட முறையில் கையாளக்கூடிய ஊக்குவிப்பு அல்லது குழுவாரியான ஊக்குவிப்பு அவசியம். இச்செயற்பாட்டிற்கு கிராமிய முன்பள்ளிகள், கோவில்கள் பயன்படுத்தப்பட வேண்டும். ஒரு சிறுவனின் தினசரி வாழ்க்கையில்

- அவன் காலையில் எழும்பும் போது,
- அவன் குளிக்கும் போது
- உணவு உண்ணும் போது
- உறவினர் விருந்தினர் வரும் போது
- வெளியில் விளையாடும் போது
- ஓய்வாக இருக்கும் போது
- நித்திரைக்குச் செல்லும் போது

எனப் பல நிலைகள் ஊக்குவிக்கப்பட வேண்டும். இவ்வூக்குவிப்பு முயற்சிகளினூடாக

| | |
|---|---|
| இறக்க விருத்தி ) <br> மொழி விருத்தி ) <br> சிந்தனை விருத்தி ) <br> அறிவு விருத்தி ) <br> மனவெழுச்சி விருத்தி ) <br> அழகியல் விருத்தி ) <br> சமூக விருத்தி ) <br> நெறிமுறையான வாழ்வு ) | இவற்றினூடாக நற்பழக்க வழக்கங்கள் தோன்றிப் "பூரண விருத்திக்கு" அடிகோல முடியும் |

இதற்குப் பெற்றோர்களுக்கு உதவியாக 'சிறுவர் நேயக் குழுக்கள்' அமைக்கப்பட வேண்டும்.

இக்குழுக்களில் ஆரம்பப் பள்ளி ஆசிரியர், முறைசாராக்கல்வி அலுவலர், சமூக அபிவிருத்திக்கான அலுவலர், இளைஞர்கள், பெற்றோர்கள், நலன் விரும்பிகள் (வயது வந்த ஒருவர்) பயிற்சி பெற்ற ஊக்குவிப்பாளர் இடம்பெற வேண்டும். இது கூடுதலாக கிராமிய மட்டத்திற்கு உதவும். குறிப்பாக சிறுவர்களை வாரத்தில் ஒரு நாளாவது பாடசாலை விளையாட்டு மைதானத்திலோ அல்லது கோவில்களிலோ சேர்ந்து விளையாடச் சந்தர்ப்பம் உருவாக்கிக் கொடுக்க வேண்டும்.

### வீட்டை அடிப்படையாகக் கொண்ட முன்பிள்ளைப் பருவ விருத்தி (HOME BASED EARLY CHILD HOOD DEVELOPMENT)

பிள்ளை முறைமைப்பள்ளிக்கு செல்வதற்கு முன்பாக வீட்டை அடிப்படையாகக் கொண்ட முன்பிள்ளைப் பருவ விருத்தி அவசியமான தொன்றாகும். வீட்டிலும் அண்மித்த உடனடிச் சூழலிலும் பெற்றோரது திறன் உறுதிப்படுத்தப்படுவது பள்ளி செல்வதற்கு முன்னைய கற்றல் அபிவிருத்தியாகும். நாளாந்த பெற்றோரது செயற்பாடுகளில் கற்கைக்கான சந்தர்ப்பங்கள் இனங்காணப்படுகின்றது. கிடைக்கக் கூடிய வளங்கள் மூலம் அவர்களது நாளாந்த வேலைகளை பெற்றோர்கள் கவனிப்பதன் மூலம் அவர்கள் பின்னூட்டப் படுகின்றார்கள் (Stimulate) அவர்கள் எழும்பும் பொழுது, படுக்கைக்குச் செல்லும்பொழுது, கழுவும் போழுது, குளிக்கும் பொழுது, சாப்பிடும் பொழுது, வழிநடாத்தலும் பின்னூட்டலும் நடைபெறுகின்றன.

ஊடலியல் தொடர்பு அவர்களது பார்வைத்தொடர்பு அதுவும் தாயினது உயர்ந்த செயற்பாடுகளில் தங்கி உள்ளது. அம்மா

சமைக்கும் பொழுது கதை கூறுவது, வீட்டுக்கு வரும் விருந்தினர்களுடன் கதைப்பது, பழகுவது வீட்டுக்கு வெளியே செல்வது போன்றவை பல வேளைகளில் பிள்ளைகளால் உற்று நோக்கப்படுகின்றன.

ஒரு நேரச் சட்ட அமைப்புக்குள் எல்லா நடவடிக்கைகளையும் விருத்தி ஆக்கி விட முடியாது. ஒவ்வொரு நிலையிலும் அம்சத்திலும் குழந்தை கற்றுக் கொண்டிருக்கின்றதென்பதை நாம் மறந்துவிட முடியாது. வளர்ந்தோரால் வழங்கப்படும் அறிவுறுத்தல்களை அவர்கள் அவதானிப்பதும் முதியோர்களால் மேற்கொள்ளப்படும் நாளாந்த நடவடிக்கைகள் ஒவ்வொன்றையும் அவர்கள் பின்பற்றுவதன் மூலமும் கற்கின்றார்கள். அவர்கள் தாங்களாகவும் பெற்றோர்களுடன் சேர்ந்தியங்கியும் கற்கின்றார்கள் என்பதை மறக்கக்கூடாது. இந்த நிலையில் கற்றலை மேலும் விரிவுபடுத்த சந்தர்ப்பம் அளிக்க வேண்டும். அவர்களது கற்றலில் பெற்றோர்கள் பங்கு கொள்கின்றார்கள், கவிநயப்படுகின்றார்கள். (Apprenticeship) பெற்றோர்கள் அவர்களுடன் மகிழ்ந்து கொள்கின்றார்கள். பெற்றோர்கள் தாங்களே தங்கள் குழந்தைகளின் முதல் ஆசிரியர்கள் என்றும் உணர்ந்துகொள்ள வேண்டும்.

பெற்றோர் தங்கள் வேலையில் ஈடுபடும் பொழுது பிள்ளைகள் அவற்றிலிருந்து அறிவை எவ்வாறு திரட்டுகின்றார்கள் எனப் பார்க்க வேண்டும். தங்களது அனுபவத்தைப் பார்த்து எவ்வாறு திறனை, அறிவை, மனப்பாங்கை வளர்த்துக் கொள்கின்றார்கள் எனப் பார்க்க வேண்டும். குழந்தை சூழலை எவ்வாறு இனங்காண்கின்றது. அதன் வழி உரிய குறிக்கோளை நோக்கி கற்றலை மீட்டுக் கொள்வதற்குப் பெற்றோர் தகுந்த முறையில் உதவ வேண்டும். குழந்தையுடன் வாய் மூலமும் செயல்மூலமும் தொடர்பாடுகின்ற போது பெறும் அனுபவங்களை இனங்காண வேண்டும். குழந்தை மிகத் துடிப்பானதாகவும் அவதானிப்பாளராகவும், கற்கனையாளராகவும், சுறுசுறுப்பாளராகவும் ஆக்க வேண்டும். குழந்தை பொருட்களை அதன் உருவம், அளவு, நிறம், மணம், ருசி மூலம் இனம் காண உதவ வேண்டும். ஒவ்வொரு நிலையிலும் செயற்பாட்டிலும் அதன் மாற்றங்களைக் கண்டறிந்து மேற்காட்டியவற்றின் அடிப்படையில் விருத்தியுறச் செய்தல் வேண்டும். செயற்பாடு நடவடிக்கைகளில்

அவற்றுக்கு பெயர் கூற வைக்க வேண்டும். அது குழந்தைக்கு விளையாட்டாகவும் அமைய வேண்டும்.

துரதிஷ்ட வசமாக பெற்றோரது முக்கியத்துவத்தை காட்டாது பள்ளிக்கூடம் என்ற நிறுவனத்தின் முக்கியம் மட்டும் முன்பிள்ளைப் பருவ விருத்தியில் கூறப்படுகின்றது. சூழல் அதன் வளம் பற்றி கவலைப்படுவதில்லை. முன்பள்ளிக் கல்வியைப் பெறுதலில் அதிக பணம் செலவாவதால் அது கிராமப்புறங்களுக்கு சென்று சேருவதுமில்லை. அதற்குப் பிறிதொரு காரணம் கிராமங்களில் வீடுகள் தொட்டம், தொட்டமாக அமைந்திருப்பதாகும்.

ஆதலால் வீட்டுச் சூழலில் வாழும் பிள்ளை அறிவு விருத்தி பற்றி பெற்றோர், பேரன்மார், மாமா, சித்தப்பா, சகோதரி, சகோதரர்கள் யாவரையும் கூட்டாக அணைத்து பிள்ளைப் பருவ விருத்தியை அடையச் செய்ய வேண்டும். ஆரம்ப காலத்தில் பிள்ளைகளின் விருத்திக்கு அவர்களிடம் பொறுப்பைக் கையளிக்க வேண்டும். முன்பள்ளியில் குழந்தை சென்று வந்தாலும் கூட அங்கு பெற்றவற்றை மீட்பதற்கு பெற்றோரது ஆதரவும், பங்களிப்பும் அவசியம். உண்மையிலேயே இயற்கைச் சூழல் முன்பள்ளியை விட வீட்டில் அதிகம் உண்டு. ஓய்வு நேரங்களில் அவர்கள் வீட்டில் கூடுதலாகக் கற்கின்றார்கள். முன்பள்ளி வசதி இல்லாத அடைய முடியாதவற்றை வீட்டில் கற்று சேமிப்பதுடன் வசதிகள் அற்றோர் வீட்டில் பெற வாய்ப்பளிக்க வேண்டும். கூடுதலான பெற்றோர்களுக்கு இல்லாத அறிவை பெற்றோரை அறிய வைக்கும் செயற் ( ) மூலம் அறிய வைக்க வேண்டும். ஆதலால் முன்பிள்ளைப் பருவ கல்வி விருத்திக்கு வீட்டை அடிப்படையாகக் கொண்ட நிலையை நாம் உறுதிப்படுத்த வேண்டும்.

## முன்பிள்ளைப் பருவ கல்வி அபிவிருத்தி

வயது 1 தொடக்கம் 5 வயது வரை பிள்ளை தனது எதிர்கால வளர்ச்சிக்கு அடி அத்திவாரமாக முழு வளர்ச்சி காணும் காலமாகும். மொழி, உடல், உள விருத்தி காண்கின்றது. சமூகம் அதன் குணநிலைக்கு சூழலை அளித்து சிந்தனைக்கு இடமளிக்கின்றது. இதனூடாக மனவெழுச்சிக்கு இடமளிக்கின்றது. இதனூடாக அதன் பூரண விருத்திக்கு இடம் கிடைக்கின்றது.

இப்பருவத்தில் பிள்ளை துரித வளர்ச்சி காண்கின்றது. அதன் விவேகம் வளர்த்தெடுக்கப்படுகின்றது. உச்சரிப்பு உறுதிப்படுத்தப் படுகின்றது. கற்றல் அனுபவங்கள் பெறப்படுகின்றது. இப்பருவத்தில் வளர்ச்சியும், அபிவிருத்தியும் காணப்படுகின்றது.

## வளர்ச்சியும் அபிவிருத்தியும்

அளவு ரீதியான மற்றம் காணப்படுகின்றது. பிள்ளையின் முதிர்வின் பெறுபேறே இம்மாற்றத்திற்கு அடிப்படைக் காரணமாகும். இம்மாற்றத்தின் பெறுபேறுகள் அனுபவத்தின் அடிப்படையில் சேர்ந்த பழக்க வழக்கங்கள் எல்லாம் அபிவிருத்திக்கு உதவுகின்றது.

இங்கு பிள்ளை வாழும் சூழலும், அவரது பரம்பரையும் அபிவிருத்தியை நிர்ணயிப்பது காட்டப்படுகின்றது. அவரது பழக்க வழக்கங்களில் செல்வாக்கு செலுத்துவது அபிவிருத்தியை நிர்ணயிக்கும் காரணியாக மாறுகின்றது. பழக்க வழக்கங்களை சீராக்கம் செய்வதாகவும் அமைகின்றது. பிள்ளையின் உடல், உளநிலை, உயரம், நிறை ஆகியன அதன் அபிவிருத்தியில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகளாகும்.

பிள்ளையின் வளர்ச்சியை பின்வரும் காரணிகள் நிர்ணயிக்கின்றது.

(1) போசாக்கான உணவு

(2) குடும்பப் பொருளாதார நிலை

(3) குடும்ப அளவு

(4) ஓய்வும் நித்திரையும்

இவற்றுடன் பிள்ளைக்கு அளிக்கப்படும் பாதுகாப்பு, அன்பு, உணவு, முதிர்வு ஆகியன அதன் வளர்ச்சிக்கு வித்திடும். பிள்ளையின் மன எழுச்சிக்கு சமநிலை காணவேண்டும். அது மகிழ்ச்சியாக உலா வரவேண்டும். குழந்தையின் பராமரிப்பு முறைகள் மிகமிக அவசியம். திட்டமிட்டு அதன் தேவைகள் முன்னுரிமைப் படுத்தப்பட்டு, அதனை ஊக்குவித்து தன்னை கணிப்பதாக மனோநிலையை உருவாக்கி சந்தோஷமாக வழி நடாத்தப்படவேண்டும்.

வீட்டில் நடைபெறும் செயற்பாடுகள் அனைத்திலும் சமூக நிகழ்வுகளுக்கும் குழந்தையை அழைத்துச் சென்று முக்கியத்துவம் அளிக்க வேண்டும். தமக்கு வீட்டிலும் சமூகத்திலும் முக்கியத்துவம் அளிக்கப்படுகின்றது என்ற உணர்வு அக்குழந்தையின் உள்ளத்தில் பொங்கி எழ வேண்டும். அவரை ஒரு பெருமனிதனாகப் போற்றி கௌரவிக்க வேண்டும்.

இயற்கையான விளையாட்டு முயற்சிகள் அனைத்திற்கும் இடமளிக்க வேண்டும். அது தலைகீழாக நின்று விளையாட முயன்றாலும் நாம் தடுக்காது தலையை முறிக்க விடாது பார்த்துக்கொண்டால் போதும். அது பாயும் பொழுது தட்டிக் கொடுத்தும் அவர் துள்ளி ஓடும் போது நாமும் துள்ளி ஓடி அதன் விநோதச் செயலில் நாமும் வினோதமாக நடந்து கொள்ள வேண்டும். இதுவே குழந்தையின் இயற்கைச் செயற்பாட்டிற்கும் அதன் சுதந்திரத்திற்கும் நாம் செய்யும் தொண்டாகும். குழந்தையை அழகுபடுத்துவது மட்டும் அல்லாமல் அதன் அழகியலுணர்வு ஆக்கத்திற்கு நாம் இடமளிக்க வேண்டும். இதனை அமுக்காது அதன் உள்ளார்ந்த உணர்வைக் கண்டறிந்து வளர்த்தெடுக்க வேண்டும். குழந்தையின் சிந்தனைக்கு நாம் கொடுக்க வேண்டும். சிந்தனை சுடர் விடவேண்டும். பிரதானமாக கடவுள் பற்றிய நம்பிக்கை சிந்தனைக்கு இடமளிக்க வேண்டும். இளம் வயதில் ஔவையாரது ஆத்திசூடி, கொன்றை வேந்தன், திருக்குறள், தேவாரம், பைபிள் பொன்மொழிகள் போன்றவற்றை மனனம் செய்ய வழி காணலாம். சொல்லிக் கொடுக்கலாம். மனித விழுமியம் விதைக்கப்படலாம். குழந்தை சிந்தனை ஊற்றுப் பெறவேண்டும். தெய்வீகம் ஒளிவிடவேண்டும். தாய் தந்தையரைத் தெய்வமாக வணங்குதல் ஆசிரியன் தெய்வம் அவனது

அடி தொழுதல் நற்தொண்டு புரிதல் என்ற சிந்தனைகள் இளம் வயதில் இருந்தே விதைக்கப்பட வேண்டும்.

குழந்தையின் உடற்சுகம் பேணல், நாள் தோறும் தான் செய்யும் கருமங்களில் நல்ல பழக்க வழக்கங்களை வீட்டில் காட்ட வேண்டும். காலையில் மாலையில் முகம் கழுவுதல், நாள்தோறும் குளித்தல், மலம் கழித்த பின் சவர்க்காரம் போட்டு கைகழுவுதல், சாப்பிட முன் சவர்க்காரம் போட்டு கைகழுவுதல் பாத்திரம் சாப்பிட முன்பும், பின்பும் கழுவுதல், பாத்திரங்களை சாப்பிட முன்பும், பின்பும் குடிக்க முன்பும், பின்பும் எடுத்தல், வைத்தல் குப்பைகளைத் தொட்டியில் போடுதல், நல்ல சுத்தமான ஆடை அணிதல், அழுக்கான உடையைக்களைதல், தலை சீவுதல் எண்ணெய் தேய்த்தல்ஈ நகம் வெட்டுதல், விபூதி பூசுதல், பூக்கொய்தல், இறைவனுக்கு சாத்துதல் ஆகியன இளம் வயதிலிருந்தே பழக்க வேண்டும்.

எங்கள் பாரம்பரிய மரபு, விழுமியம் எதுவென காட்டப்பட வேண்டும். இவை பண்பாட்டுக் கோலங்களாகக் காட்டப்பட வேண்டும். எங்கள் மரபு பழக்க வழக்கங்கள் வெளிக்காட்டப்படலாம். ஒருவர் மீது ஒருவர் அன்பு வைத்தல், சொல்லும் வார்த்தைகள் இனிதாக அமைதல், ஒருவரைக் கண்டால் இனிவாக, அன்பாக குழைந்து பேசி இன்முகம் காட்டி வரவேற்று, அழைத்துச் செல்லும் தன்மை அவர்களுக்குக் காட்டப்படுவது மட்டுமல்லாமல் அவர்களையும் அச்செயலை ஈடுபடுத்தவேண்டும்.

அன்பான தாய், தந்தை பிள்ளை உறவு பரிணமிக்க வேண்டும். இவ் உறவு இருபக்கத் தொடர்பாக அமைய வேண்டும். குழந்தை மீது கடிந்து விழவோ, முதுகில் படால் என அடித்தோ அதன் பிஞ்சு உள்ளத்தை கசக்கக் கூடாது. குழந்தை உள்ளம் மென்மையானது, பூப்போன்றது அதனைக் கசக்கி மணக்கக் கூடாது. குழந்தை உள்ளம் தெய்வ உள்ளம்.

கற்றல் அனுபவங்களை அவர்களிடத்தில் கண்டறியப்பட வேண்டும். அதன் அனுபவங்களுக்கு ஏற்ப இணங்க அவர்களை கற்க வைக்க வேண்டும். ஓடிவிளையாடு பாப்பா, கூடிவிளையாடு பாப்பா, நீ

ஒய்ந்திருக்கலாகாது எதில் கற்பதில் சுறுசுறப்பான செயற்பாட்டுக் கற்கைக்கு இடம் காட்ட வேண்டும். பிள்ளையை ஏற்க வைக்க வேண்டும், அதனை மதிக்க வேண்டும், அதனை கணிக்க வேண்டும், பாராட்ட வேண்டும், எல்லாவற்றுக்கும் மேலாக அன்பு காட்ட வேண்டும், கட்டி அணைக்க வேண்டும்.

முன்பிள்ளைப் பருவம் பிள்ளை விருத்திப்பருவம் எனலாம். இங்கு அதன் உடலியல் உளவயல் விருத்தி அடைகின்றதென்பதை நாம் மறக்க முடியாது. இப்பருவம் ஆரம்பக் கல்விக்கு அடிஅத்திவாரம் இடும் விருத்திக்காலம் என்பதை நாம் மறக்கக் கூடாது. இப்பருவத்தில் அதன் இயக்கம் பிரதானமானது குழந்தை தானாக இயங்குகின்றது. அதன் இயக்கம் விருத்தி காண இடமளிக்கப்பட வேண்டும். பிள்ளையின் புலன்கள் விருத்தி காண்கின்றது. மெய், வாய், கண், மூக்கு, காது ஆகிய ஐம்புலன்களும் அதன் செயற்பாட்டின் மூலம் விருத்திகாண்கின்றது. பிள்ளையின் காதின் இயக்கம் கேட்டல், கண்ணின் இயக்கம் பார்வை இவை இரண்டினதும் விருத்தி மிகமிகப் பிரதானம். இவற்றை வீட்டிலும் முன்பள்ளியிலும் கவனம் செலுத்திக் கண்டறிய வேண்டும். உடலியலைப் பொறுத்தமட்டில் அதன் உணர்வு பிரதானமானது. தன்னில் முட்டும் பொருட்களையும் தான் முட்டும் பொருட்களையும் உடல் ரீதியாக உணரும் தன்மை அறிய வேண்டும். உதாரணமாக மயிர் கொட்டியின் கொடுமையை, கடி எறும்பு கடிக்கும் தன்மையை பிள்ளை உணர்ந்து தனக்கு தற்காப்பு தேடவேண்டும்.

இதே போல அவனது நுண்ணறிவு விருத்தி மிகமிகப் பிரதானம். குழந்தையின் மூளை விருத்தி, மனனம் செய்யும் திறன், ஆற்றல் கண்டுபிடிக்கப்பட்டு விருத்தி ஆக்கப்பட வேண்டும். எமது மூதாட்டி மண்ணில் விளையாடவிட்டு பார்த்த அழகு மீள வரவேண்டும். களிமண்ணில் உரல், அம்மி, குழவி, சூரன், பொம்மை வீடு ஆகியன செய்து மகிழ்ந்த காலம் மீள வரவேண்டும். கைவிரலை மண்போட்டுப் பரப்பி எழுதுவித்த காலம் திரும்ப வேண்டும். தசைநார் பயிற்சியை கைவரல்கள் பெறவேண்டும். களிமண்ணை கையால் பிசைந்து செய்யும் உருவங்கள் பெருக வேண்டும்.

தேசிக்காய் கோதை பிரட்டி அதற்கு நூல் கட்டி சிறுதடியை தராசின் நெம்புகோலாக மாற்றி, இலை, சோகி, பீங்கான் உடைந்த ஒடு காசாகக் கணக்கிட்ட காலம் அறிமுகமாக வேண்டும். இங்கு மொழி ஆக்கம், அழகியல் ஆகியவற்றில் நுண்ணறிவு விருத்தி பெருகுகின்றது.

பிரச்சினை விடுவிக்கும் திறனை பிள்ளை இளம் வயதில் இருந்தே பெற வேண்டும். பிரச்சினை பொல்லாதது கடினமானது அதனைக் கண்டு ஓட வேண்டும் என்ற நிலை இறுதி வரையும் காட்டப்படக் கூடாது. தயவு செய்து தாய், தந்தையர், சகோதரர்கள் பிள்ளைகளுக்கு பிரச்சினை பொல்லாதது, அது விசுவரூபம் கொண்டது என வீட்டில் சட்டி பானைப் பாத்திரங்களை உடைத்து அடித்து நொறுக்கி காட்ட வேண்டாம். குழந்தையின் மனதில் பூதமாக்காது அதனை விடுவிக்க இலகுவாக்கவும்.

இப்பருவத்தில் பிள்ளையின் மூளை விருத்தி பற்றியும் நாம் கவனமெடுக்க வேண்டும் ஒவ்வொரு குழந்தைக்கும் பிறக்கும் பொழுதே மூளை விருத்தி ஆகின்றது. மனித உடலில் குறைவானதும் மிக நுண்ணியதானதும் இன்றியமையாததுமான உறுப்பு இம் மூளை ஆகும். மூளையின் ஆரம்ப இயக்கம் நுண்ணறிவுடன் தொடர்புபடுகிறது. இத்தொடர்பு நிலைவிருத்தி அடைய செயற்பாட்டு அனுபவங்கள் பிள்ளைக்கு அவசியம். இதனால் தான் முன்பள்ளியிலோ, வீட்டிலோ ஆரம்பத்தில் எழுத்து வேலை போன்ற சுமையான ஒரு வேலைச்சுமையை பிள்ளைக்கு அளிக்காது அதனை இயற்கையுடன் இணைந்த, செயற்கையுடன் இணைந்த பொருட்கள், வளங்களை அறிந்து செயற்பட வைக்க வேண்டும். அங்கு பிள்ளை அவற்றுடன் செயற்பட வேண்டும். தானாக கவரப்பட்டு அதனை தானாக எடுத்து, பொறுக்கி, அடுக்கி, அழகு பார்த்து பிசைந்து பொருட்களை ஆக்கி ஆக்கி திருப்தி காண வேண்டும். சோலைகளில் விளையாடும் இயற்கை மிருகங்கள் போலவும் பூங்காக்களில் சுதந்திரமாகப் பறக்கும் பறவைகள் போலவும் தொட்டிகளில் நீந்தும் மீன் குஞ்சுகள் போலவும் இயற்கையாக விளையாட விட வேண்டும்.

இதனை அடிப்படையாகக் கொண்டு தற்போதைய புதிய கல்விச் சீர்திருத்த அறிமுகத்தில் செயற்பாடு மூலம் கல்வி ( ) என்ற

எண்ணக் கரு தரம் ஒன்று வகுப்பில் வற்புறுத்தப்படுகின்றது. ஆதலால் ஆரம்பக்கல்விக்கு முன்னைய கல்வியாய் முன்பள்ளிக் கல்வியும் சீராக்கம் பெற வேண்டும். அதன் அடிப்படையில் அமைய வேண்டும்.

பிள்ளை பிறந்து முதல் வருடத்தில் மூளையின் நிறை இரண்டு மடங்காக அதிகரிக்கின்றது. அடுத்த நான்கு வயதில் நுண்ணறிவு 20% விருத்தி அடையும். பிள்ளைக்கு நாம் வளமான சூழலையும் செயல் அனுபவத்தையும் அறிந்து வேறு காரணிகளாகிய போஷாக்கு, பெற்றோர், கல்வி, விளையாட்டு அனுபவம் மூலம் கல்வி அளிப்போமாக இருந்தால் குழந்தையின் வளர்ச்சியும் முதிர்வும் ஆரம்பக் கல்விக்கு இட்டுச் செல்லும்.

**முன்பள்ளி:**

முன்பள்ளி என்பது மூன்று வயதிற்கும் ஐந்து வயதிற்கும் இடைப்பட்ட சிறுவர்கள் கூடும் இடம். சிறுவர் கூடம் இதனை ஒரு நியம முறைமைப் பள்ளியாகக் கொள்ளாது இயற்கைக் கூடமாக அழகியல் மாடமாக, குழவிப் பூங்காவாக சிறுவர் விளையாட்டுத் திடலாகக் கொள்ள வேண்டும். இங்க தாமாக ஓடி ஓடி வந்து கூட வேண்டும். சிறுவர் கவரப்பட வேண்டும். தன் தொடர்பாடல் திறனை வளர்க்க வழிகாட்ட வேண்டும். சூழல் வளர்த்தெடுக்கப்பட வேண்டும். சூழலுடன் அவனை இணைக்க வேண்டும். ஒழுக்க நெறி செயல் மூலம் ஊட்டம் பெற வேண்டும். ஓய்வுநேரம் வினோதமாக மாற வழகாட்ட வேண்டும். அக்கூடம் ஆனந்த மயமாக வேண்டும்.

இங்கு இயற்கையுடன் இணைந்து கல்வி அளிக்கப்பட வேண்டும். உண்மையில் இது ஓர் சிறுவர் பராமரிப்பு இல்லமாக பிள்ளை பாதுகாக்கப்பட வேண்டும். அதன் உறையுள் வசதியாக உண்டா எனப் பார்க்க வேண்டும்.

போதிய போஷாக்குடன் ஊட்டம் உண்டா எனப் பார்க்க வேண்டும். வீட்டில் தேகாரோக்கியம், மூத்தோர் எவ்வாறு அவரைக் கவனிக்கின்றார்கள், அவனது புலன் இயக்கத்திற்கு ஊக்குவிப்பு உண்டா, அவனிடம் செயல் வளம், சொல் வளம், உச்சரிப்பு உண்டா என்பன அவதானிக்கப்பட வேண்டும். மொழி சார்ந்த ஊக்குவிப்பு

சிந்தனைத்தறன், சுதந்திரமான இயக்கம், வீட்டுச் சூழல் மிகமிகப் பிரதானம். அவனது பழக்க வழக்கம் நியமப்படுத்தப்படுகின்றனவா? மொழி சார்ந்த ஊக்குவிப்பு உண்டா? அவனிடம் சிந்தனைத்திறன் உண்டா? சுதந்திரமாக இயங்குகின்றானா? என்பன அறியப்பட வேண்டும். அனுபவங்களைப் பகிர்கிறானா? அவாதானிக்கின்றானா? கேள்வி எழுப்புகின்றானா? நாளாந்தம் மாற்றம் தென்படுகின்றதா? என ஒவ்வொரு பிள்ளைகளிடமும் இனம் காணும் களமே முன்பள்ளி. இனம் கண்டு அவை அமைய உதவும் களமே முன்பள்ளி. இக்களத்தைக் கையாளப் பயிற்சி பெற்ற ஆசிரியைகளின் செயற்பாடு அவசியமாகும். அவருக்கு பயிற்சி அனுபவம் பிரதானம். சிறந்த ஆளுமை வேண்டும். வழிநடாத்தும் பண்பு பிரதானம். அவரிடம் சிறந்த நடை, உடை, பாவனை, பொறுமை, இனிய சொல், நல்ல மொழி கையாளல் என்பன அவசியமாகும். வீட்டில் சிறுவர்களுக்கு வழங்கும் அன்பு, ஆதரவு, நெருக்க உறவை முன்பள்ளி ஆசிரியர் கொடுக்க வேண்டும். நாளாந்தம் சூழலுடன் இலை, மரம், செடி, பறவை, விலங்கு போன்றவற்றுடன் இணைய, அறியவைக்க வேண்டும். கழிவுப் பொருட்களைச் சேகரிப்பது மட்டும் அல்லாமல், அதனை உபயோகிக்க காட்ட வேண்டும். ஆக்கிக் காட்ட வேண்டும். கதை கூற வேண்டும். குழந்தைகள் போல் தானும் மாறிப் பாவனை செய்து நடித்துக் காட்ட வேண்டும். இசையுடன் அசைந்து காட்ட வேண்டும். பிள்ளைகளுக்கு விளங்கும் மொழி கையாளப்பட வேண்டும். வீட்டுச் சூழலில் இருந்து அவற்றை விருத்தியாக்க வேண்டும். பிள்ளைக்கு .......... போலச்செய்ய வேண்டும். பாவனை செய்ய எல்லாவற்றிற்கும் மோலாக வீட்டு பராமரிப்பு, பிள்ளைப்பராமரிப்பு, நாளாந்த நிலையம் (DAY CARE CENTER) போல் இங்கு முன்பள்ளி ஆசிரியர் இயங்க வேண்டும்.

## முன்பள்ளி அமைவு

முன்பள்ளி ஒரு கிராமத்திலே அதன் மையப பகுதியில் அமைந்திருக்க வேண்டும். மாணவர்களைப் பெற்றோர்கள் இலகுவாகச் சென்று விட்டு வரவும், கூட்டி வரக் கூடியதுமாக பள்ளி நிலையம் அமைக்கப்பட வேண்டும். அவ்விடம் பிள்ளைகளுக்கு பாதுகாப்புடையதாயிருக்க வேண்டும். வெயில், மழை, காற்றினால் பாதிக்கப் படாமலும், அச்சுறுத்தும் பிராணிகள் பயமுறுத்தாமலும் இருக் வேண்டும். அவ்விடம் அவர்களது தேகாரோக்கியத்திற்கு உகந்ததாயிருக்க வேண்டும்.

### முன்பள்ளிக்கான கட்டிடம்:

இக்கட்டிடமானது கற்றலுக்கும், விளையாடுவதற்குமான இடமாக அமைய வேண்டும். குறைந்த பட்சம் ஒவ்வோர் பிள்ளைக்கும் 20 சதுர அடிகளுக்கு குறையாத இடவசதியுள்ளதாக அமைய வேண்டும். அவற்றுடன் அவை போதிய காற்றோட்டமும் வெளிச்சமும் கொண்டதாகவும், சீமெந்தாலான தரை, ரெறாசா அல்லது பிளாஸ்ரிக் சீற் விரித்த தரையாக இருத்தல் நல்லது. மேற்கூரை பாதுகாப்பான கூரையாக அமைய வேண்டும். காரியாலய அறை அவசியம். முடியுமானால் களஞ்சியத்திற்கான அறை அடுக்களை என்பன அமைத்தால் நல்லது. பிள்ளைகள் படிக்கும் போது பாவிப்பதற்கென ஒவவோர் 25 பிள்ளைகளுக்கு ஒன்று என்ற விகிதத்தில் சிறுவர்களுக்கு ஏற்ற மலசல கூடங்கள் அமைத்தல் நல்லது. அதுவும் பள்ளி அறையுடன் இணைந்ததாக அமைத்து நல்ல முறையில் சுத்தமாகப் பேணினால் மிகமிக நன்று. சின்னஞ் சிறுவர்கள் தமது ஆக்கங்களை, அழகியல் வெளிப்பாட்டைக் காட்சிக்கு வைப்பதற்கு தகுந்த வசதிகள் அல்லது சுவர் வசதிகள் அமைத்துக் கொடுப்பது நல்லது.

இவற்றுடன் தளபாட வசதிகளும் மிகமிக முக்கியம். அலுமாரிகள், மேசைகள், நாற்காலிகள் இருக்க வேண்டும். மாணவர்கள் விரித்து அதில் இருந்து விளையாடப் பாய்கள் அவசியம். இறாக்கைத் தட்டுக்கள், அதுவும் கற்றல் உபகரணங்களை வைத்துப் பராமரிப்பதற்கேற்றதாக வைத்திருத்தல் நல்லது.

சிறுவர்களுக்கு ஏற்ற நாற்காலிகள், மேசைகள், பாய்கள் இருக்க வேண்டும். கற்றல் உபகரணங்களை தாமே வைத்து வேண்டிய வேளையில் எடுத்து வைத்து கற்க வசதியான இறாக்கைகள் வைத்திருப்பது நல்லது. சிறுவர்கள் நின்று எழுதக்கூடிய அவர்கள் உயரத்திற்கேற்ற சுவர்களும் பலகைகளும் அமைக்கப்பட வேண்டும். சிறுவர்கள் தட்டுப்பட்டு விழுந்து காயப்பட்டால் மருந்து கட்டவும், சுகவீனத்திற்கு உடனடி நிவாரணம் அளிக்க முதல் உதவிப் பெட்டி சகல வசதிகளுடனும் அமைக்க வேண்டும். குடிநீர் சேகரித்து வைக்க பைப்புடன் கூடிய கொள்கலம் வைத்திருப்பது நல்லது.

கைகழுவுவதற்கேற்ற நீர் வசதிகள் வெளியேயும் உள்ளேயும் அமைத்துக் கொடுக்க வேண்டும். பிள்ளைகள் தாம் கொண்டு வரும் படங்கள், நூல்கள், கழிவுப் பொருட்களை வைக்கவும், சுற்றாடற் பொருட்களை சேகரித்து வைக்கவும் வசதிகளான பெட்டிகள் வைக்க வேண்டும். உள்வீட்டு விளையாட்டு உபகரணங்கள் வைத்தெடுப்பதற்கு உகந்த பெட்டிகள் இரும்பு அலுமாரிகள் வைத்திருப்பது நல்லது.

முன்பள்ளியைச் சுற்றி அல்லது அருகில் சுகாதாரத்திற்கேற்ற பாதுகாப்பான சுத்தமான இடவசதி அமைக்கப்பட வேண்டும். இங்கு குழந்தைகள் விளையாட மணல், நீர் வசதிகள் கொடுக்க வேண்டும். இது ஓர் சிறுவர் விளையாட்டு பூங்காவாக அமைய வேண்டும். இங்கு குழந்தை பாதுகாப்பாக ஏறுவதற்கும் இறங்குவதற்கும், பாய்வதற்கும், கெந்துவதற்கும், குனிந்து செல்வதற்கும், குதிப்பதற்கும் ஏற்ற வசதிகள் உபகரணங்கள் செய்து வைக்க வேண்டும். உதாரணமாக ஏறும் சட்டங்கள், ஊஞ்சல்கள், சறுக்கும் பலகை ஆங்காங்கே அமைக்கப்பட வேண்டும். இவை குதூகலித்து விளையாடும் உபகரணங்களாகும்.

குழவிப் பூங்கா அவசியம். இச்சிறுவர் பூங்காவானது நிழல் தரும் மரங்களைக் கொண்டதாகவும் வண்ண வண்ணப் பூக்கன்றுகளைக் கொண்டதாகவும், பச்சைப் பசேல் என்ற புற்தரைகளைக் கொண்டதாகவும் அமைக்க வேண்டும்.

பிள்ளைகளுக்கு பின்வரும் நாளாந்த வேலைத் திட்டங்கள் கொடுக்கப்பட வேண்டும். அவர்கள் காலையில் சமய அனுட்டானம்

செய்ய வேண்டும். அடிப்படை மொழித்திறனை விருத்தியாக்கக்கூடிய விதத்தில் கேட்டல், பேச்சு, முன்வாசிப்பு, முன்னெழுத்து என்பன செயற்பட வேண்டும். விளையாட்டுடன் இணைந்த கணித அனுபவம் அவசியம். அழகியல் அனுபவம் பெற வைக்க வேண்டும். பிள்ளை தானாக ஆக்க அனுபவம் பெற வைக்க வேண்டும். குறிப்பாக சூழல் மூலம் கற்க வைக்க வேண்டும். நாள்தோறும் சுகாதாரமும், சுகாதாரப் பழக்க வழக்கங்களும் பெற வைக்க வேண்டும். சிறுவர்களுக்கு செயல் அனுபவம் பிரதானமானது. சமூகத்தில் அவர்கள் வாழ்வதற்கான கற்றல் அனுபவங்களைப் பெற வேண்டும்.

பிள்ளைகளைக் கண்காணிப்பதற்கு பின்வரும் பதிவேடுகள் பேணப்பட வேண்டும். ஒவ்வொரு பிள்ளை பற்றி அறிவதற்கு தனித்தனியான பதிவேடுகள் வைக்க வேண்டும். இடாப்புகள், தினசரி வரவு இடாப்பு அவசியம். அனுமதி இடாப்பு அனுமதி விபரம் அறிய பேணப்பட வேண்டும். மதிப்பீட்டு அட்டவணைகள் தொங்கவிடப்பட வேண்டும். முன்னேற்ற அட்டவணைகள் பெற்றோர்களுக்கு பின்னூட்ட அவசியம். பிள்ளை பற்றிய தனித்தனியான சுகாதாரப் பதிவேடுகள் பேணப்பட வேண்டும். பிள்ளைகளின் செயற்பாடுகள் பற்றிய அறிக்கைகள் அவசியம்.

இதே போலவே ஆசிரியர்களும் தமது வரவைப் பதியத் தினசரி வரவு இடாப்பு பேணப்பட வேண்டும். தாம் வைத்திருக்கும் பொருட்களின் பட்டியல் அவசியம். தனித்தனியாக குறிப்புப் புத்தகம் பேணப்பட வேண்டும். பாடத்திட்டங்களை அடிப்படையாக வைத்து பாட ஆயத்தங்கள் குறிப்புக்கள் அவசியம். ஆசிரியர் தமது சுயவிபரம் அடங்கிய விபரக்குறிப்பேடுகளைப் பேண வேண்டும்.

**ஆற்றல்:**

இவை மொழியாற்றல், கலைகள் சார்ந்த ஆற்றல், சூழலை ஆராயும் ஆற்றல், ஐம்புலன் விருத்தி, கணித, எண்ணக் கருவிருத்தி, தசை நார்ப் பயிற்சி, சுதந்திரமான விளையாட்டு, ஆக்கத்திறன்களின் வெளிப்பாடு, அழகியற் செயற்பாடுகள், சமூக இசைவாக்கம், நல்லொழுக்கப் பண்பாடு என்பன ஆகும்.

பாலர் கல்வி நிலையங்களில் உடல் இயக்கத் திறன்கள், புலன் இயக்கத் திறன்கள், புலக் காட்சித் திறன்கள் ஆகிய ஆற்றல்களை வளர்த்தெடுக்க வேண்டும்.

ஒரு குழந்தையிடம் உள்ள விசேட ஆற்றலகளை வெளிக் கொணர குழந்தைகளை அழகான சூழலிலும், கலைக் கூடங்களிலும் விடுதல் அவசியமாகும். அத்துடன் பல விளையாட்டு உபகரணங்களை அளிப்பதன் மூலமும், சுய விருப்பங்களை நிறைவேற்றுவதன் மூலமும் சிறப்பான முன்பள்ளிக் கல்விக்கு வழிகாட்டப்படுதல் வேண்டும்.

## புதிய கல்விச்சீர்திருத்தத்தில் ஆரம்பக் கல்வி

1960களின் பின்பு, 1970, 1980, 1990களில் கல்வியியற் பிரச்சினைகள் பல அடையாளம் காணப்பட்டன.

கல்விமுறையில் ஏற்பட்ட தோல்விகளால் மனித வாழ்வுக்கு வேண்டிய விழுமியங்கள் சாந்தி, சமாதானம் என்பன இல்லாதொழியர் போட்டி பொறாமை, என்பன மேலோங்கின. கல்விமுறை சீர்செய்யப்பட வேண்டும் என்பதும் அதன் வழி நல்ல சமுதாயத்தை உருவாக்க வேண்டும் என்பதும் பல்வியியலாளர்களின் கருத்தாக உயர்ந்தது.

இதனால் கல்வியில் சீர்திருத்தம் வேண்டும் என்று பலரும் விதப்புரை செய்தனர். அக்கல்விச் சீர்திருத்தம் குறிப்பாக ஆரம்பக் கல்வியில் மாற்றம் கொண்டு வருவதாக அமைய வேண்டும் என்றும் வற்புறுத்தினர்

ஆரம்பக்கல்வி எவ்வாறு கல்வியின் அடி அத்திவாரமாக அமைகின்றதோ அதே போல வாழ்க்கையில் ஓர் உறுதியான ஆரம்பமாகக் கூறப்பட்டது. வளர்ந்து வரும் வருங்காலத்திற்கு வழி வகுக்கும் கல்வியாக இருக்க வேண்டும் என உணரப்பட்டது. ஆரம்பக் கல்வியே பிள்ளைகள் எப்படிக் கற்பது, அவர்களைச் சுற்றியுள்ள மற்ற மக்களுடனும், உலகத்துடனும், சிறந்த பயனுள்ள உறவுகளை எப்படி விருத்தி செய்வது என்பதையும் கற்றுக் கொடுக்க வேண்டும். சீரான ஆரம்பக் கல்வி இல்லாமல் உயர்தரக் கல்வி அர்த்தமற்றதாகிவிடும் எனக் கண்டறிந்துள்ளனர். தரம் 1 தொடக்கம் தரம் 5 வரை கற்கும் ஆரம்ப நிலைக்கல்வி வருடங்கள் முழுப் பாடசாலை வாழ்க்கையில் மிக முக்கிய காலப் பகுதியாக வற்புறுத்தப்பட்டது.

புதிய கல்விச் சீர்திருத்தம் உங்கள் பிள்ளைகளிடம் உள்ளடங்கிய விசேட சாமர்த்தியம், உள்ளார்ந்த ஆற்றல் ஆகியவற்றை இனங்கண்டு அவற்றை அபிவிருத்தி செய்ய முயலும் என்கின்றது. விரிவடைந்துவரும் உங்கள் பிள்ளையின் மனதை மேலும் விருத்தி செய்ய சிந்தித்து வினாக்களைப் பிறப்பித்து அவற்றிற்கான பதில்களைக் கண்டு பிடிக்கும் அற்றலை விருத்தி செய்ய வேண்டும்,

கரத்தைக் கொண்டும் கற்பனையால் உருவாக்கும் ஆற்றலை விருத்தி செய்ய முடியும் என்றனர்.

தானாகவே அறிவைப் பெற, பிரயோகிக்க உதவும் என்றனர். மூத்தோரை கனம் பண்ண, ஆதரவளிக்க உதவும் கல்வியாகும். மற்றவர்களை மதிக்க உதவ் வேண்டும் என்றனர். மனிதர்கள், தாவரங்கள், விலங்கினங்கள் உட்பட சுற்றாடலைப் பாதுகாக்க உதவும் என்றனர். பிள்ளைகளின் கல்வி அபிவிருத்தியில் பெற்றோர்கள் தங்களை ஈடுபடுத்த சந்தர்ப்பம் தரப்படுகின்றது என்றனர். அதேபோல பெற்றோர்கள் தங்கள் பிள்ளையின் அபிவிருத்தியில் பங்கு கெள்ள இடமளிக்கும் என்று கூறப்பட்டது.

கற்றலுக்கு உகந்த மகிழ்ச்சிகரமான சூழலை ஆரம்ப நிலை வகுப்புக்கள் அளிக்க வேண்டும் எனக் கண்டறியப்பட்டது. இன்றைய உலகத்தில் நடைபெறும் முன்னேற்றங்களுடன் கல்வி தொடர்புபடுத்தப்பட வேண்டும். ஆரம்பக் கல்வி மாணவன் செயல் மூலமாகவும், விளையாட்டு மூலமாகவும் தமது திறமைகளை விருத்தி செய்யும் வாய்ப்புக்கள் வழங்கப்பட வேண்டும். பெற்றோர்கள் ஆசிரியர்களுடன் தொடர்பு கொண்டு பாடசாலையில் உண்மையில் என்ன நடைபெறுகின்றதென்று அறிய வேண்டும்.

1998ம் ஆண்டில் கம்பஹா மாவட்டம் முழுவதும் ஆரம்ப நிலைக் கல்வி சீரமைக்கும் திட்டமாக செயற்படுத்தப்பட்டது. இத்திட்டம் 1999 ஆண்டு முதல் நாடு பூராவும் நடைமுறைப் படுத்தப்படுகின்றது. இத்திட்டம் ஆரம்பப் பாடசாலைக் கல்வியை மூன்று முக்கிய கட்டங்களாகப் பிரித்துள்ளது. அவை

தரம் 1, 2 - முதன் நிலை 1 (ஒன்று) (Key Stage I)
தரம் 3, 4 முதன் நிலை 2 (இரண்டு) (Key Stage II)
தரம் 5 முதன் நிலை 3 (மூன்று) (Key Stage III)

இவ் ஒவ்வொரு கட்டங்களிலும் மூன்று பிரதான கற்றல் முறைகள் அடங்குகின்றது. அவையாவன

(1) மேசை சார்ந்த வேலை – (Disk Work)

(2) விளையாட்டு – (Play Method)

(3) செயல் சார்ந்த கற்றல் – (Activity Learning)

செயல் சார்ந்த கற்றல் என்பது வகுப்பறைச் செயற் திட்டங்கள், வெளிக்களச் சுற்றுலாக்கள், கலந்துரையாடல்கள் போன்றனவாகும்.

முதற் கட்டமான (தரம் 1, தரம் 2) கற்றல் முறை மேற்பார்வையுடனான விளையாட்டாக அமையும். அது அடுத்த செயல் சார்ந்த கற்றலுக்கும் வழிகாட்டும். இங்கு மேசைசார்ந்த கற்றல் குறைவாகப் பயன் படுத்தப்படும்.

இரண்டாவது கட்டத்தில் (தரம் 3, தரம் 4) மூன்று கற்றல் முறைகளுக்கும் சரிசமமான பங்கு அளிக்கப்படும்.

மூன்றாவது கட்டத்தில் எழுத்தும் வாசிப்பும் சார்ந்த கற்றலுக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப்படும்.

இவ் ஒவ்வொரு கட்டக் கற்பித்தல் முறையும் மாணவனை மையமாகக் கொண்டே இருக்கும். இங்கு பிள்ளைகளின் அறிவு, திறன், மனப்பாங்கு, ஆற்றல்கள் விருத்தி செய்ய அதிக கவனம் செலுத்தப்படும்.

ஆரம்பக் கல்வியின் புதிய பாடவிதானத்தில்

- முதல் மொழி - (First Language)
- கணிதம் - (Maths)
- சுற்றாடல் கல்வி - (Environmental)
- சமயம் - (Religion)

இங்கு ஒழுக்க தத்துவங்களும் கலாச்சாரம் பற்றிய அறிவும் முக்கிய பங்குகளை அளிக்கின்றது. தரம் ஒன்று வகுப்பில் வாய் மொழி மூல ஆங்கிலக் கல்வி அறிமுகமாக்கப்படுகின்றது. பிள்ளைகளுடன் ஆசிரியர்கள் ஆங்கில மொழியிலும் தொடர்பு கொண்டு அம்மொழியில் பிள்ளைகள் தம்மிமையே தொடர்பு கொள்ளும் பழக்கத்தை விருத்தி செய்ய வழி வகுக்கப்பட்டுள்ளது.

பிள்ளைகள் ஏனைய கலாசாரங்கள் பற்றியும் இனக் குழுக்கள் பற்றியும் அறிந்து கொள்ள வாய்ப்பு வழங்கப் பட்டுள்ளது.

இச்சீர்திருத்தம் பிள்ளையின் தன்னம்பிக்கை வளர்ச்சி ஏற்படுவதை உறுதிப்படுத்துகின்றது. சுய கற்றல் முறைகளை உருவாக்கும் பெற்றுக் கொண்ட அறிவுகள் மூலம் ஒழுங்கமைந்து, நிலைமாறாத தத்துவங்களையும் மனித விழுமியங்களையும் உருவாக்கிக் கொள்ளும். ஐந்து வருட முடிவில் பிள்ளையின் அடிப்படைத் தகமைகளும், திறன்களும் நன்றாக விருத்தி அடைய முடியும். பிள்ளைக்கு கல்விப் படிமுறையின் அடுத்த கட்டத்திற்கு செல்ல ஆர்வத்தைக் கூட்டுகின்றது.

**ஆரம்பக் கல்வியின் நோக்கங்கள்**

01. சுயமொழியில் சிந்திக்கும் ஆற்றலை வளர்த்தல்
02. நன்மை, தீமைகளைப் பிரித்தறியும் மனப்பான்மையை விருத்தி செய்தல்
03. சுயமாக ஆக்கங்களில் ஈடுபடக் கூடிய ஆற்றலை வளர்த்தல்
04. ஒரு சமூகத்திற்கு ஏற்றவனாக ஒருவனை உருவாக்குதல்
05. சிறந்த சமூகப் பழக்கவழக்கங்களை ஏற்படுத்துதல்
06. நாட்டின் ஏனைய சமூகங்களின் பாரம்பரியங்களை மதிக்கும் மனப்பான்மையை ஏற்படுத்துதல்
07. தேசிய ஒற்றுமையைப் பேணுவதற்கான ஆற்றலை வளர்த்தல்
08. தொழிற்கல்வி பெற்று வாழ்க்கைத் தரத்தை உயர்த்தல்
09. ஒழுக்க விழுமியங்களைக் கற்றுக்கொள்ளல்
10. மூதாதையரின் வரலாறுகளை அறிந்து அவற்றைப் பின்பற்றுவதற்கு பயிலுதல்
11. செயற்பாட்டு முறைக் கல்விக்கு முக்கியத்துவம் கொடுத்தல்

மேற்படி நோக்கங்களுடன் வளர்ந்துவரும் சமூக விஞ்ஞான விருத்திக்கு ஏற்ற இயைபாக்கம் பெறும் உலகைக் கட்டியெழுப்பும் பணிக்கு தம்மையும் அர்ப்பணிக்கும் சிறந்த மனப்பாங்கையும் கல்வி உருவாக்குதல் வேண்டும்.

***அனைத்துக்கும் உறுதி தரும் ஆரம்பக்கல்வி***



## நாவலாசிரியரைப் பற்றி .......

ச.நாகமுத்து தணிகாசலம்பிள்ளை தனது அயரா உழைப்பினாலும் இலக்குத் தவறா முன்னேற்றத்தினாலும் இன்று இலங்கைத் தமிழரிடையே ஒரு கல்வியியலாளராக (Educationist) விளங்குகின்றார். இந்த வளர்ச்சிக்குச் சான்றாக அமைவது தற்போது அவர் வகிக்கும் "யாழ்ப்பாணக் கல்வி வலயத்தின் பணிப்பாளர்" பதவியாகும். இந்தப் பதவி "சமமானவர்களிடையேயுள்ள முதன்மை நிலையின் பதவி" (Primus into pares) எனக்கருதப்படுகிறது.

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் கலாநிதிப் பட்டப்பேற்றைப் பெற்ற இவர் (1996), அதே பல்கலைக்கழகத்திலிருந்து கல்வியியல் துறையில் முதுமாணிப் பட்டமும் பெற்றவர். பல்கலைக்கழக வருகை விரிவுரையாளராகக் கடமையாற்றுபவர்.



கலாநிதி தணிகாசலம்பிள்ளையின் ஆய்வுப் பங்களிப்புகள் இலங்கையின் கல்வியியல் ஆய்வுகளில் முக்கிய இடத்தைப் பெறுவனவாகும்.

*வாழ்த்துக்களுடன்,*
*பேராசிரியர் கா.சிவத்தம்பி.*